# மகாத்மா ?!

உ. இளமதி அறிவுடைநம்பி



# மகாத்மா

## உ. இளமதி அறிவுடைநம்பி

**மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ்.
எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/mahatma

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(Kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushan-mugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

This Book was produced using LaTeX + Pandoc

# பொருளடக்கம்


மகாத்மா ?! . . . . . . . . . . . . . . . . . . 10

சமர்ப்பணம் . . . . . . . . . . . . . . . . . . 12

அணிந்துரை . . . . . . . . . . . . . . . . . 13

அணிந்துரை . . . . . . . . . . . . . . . . . 24

ஆசிரியர் முன்னோட்டம் . . . . . . . . . . . . . 29

1. காந்தி யார் . . . . . . . . . . . . . . . . . . 33

2. உணவும் உண்ணாவிரதமும் . . . . . . . . . 37

3. இயற்கை மருத்துவம் . . . . . . . . . . . . . 47

4. தென்னாப்பிரிக்காவில்... . . . . . . . . . . . . 60

5. மதம் வழியில் காந்தி . . . . . . . . . . . . . 73

6. முக்கோண அரசியல் . . . . . . . . . . . . . 88

7. இரு மகாத்மாக்கள் . . . . . . . . . . . . . . 120

8. காந்தி கண்ட கனவும், பலனும் . . . . . . . . 127

9. காந்தியாரும் - Dr. அம்பேத்கரும் . . . . . . . 144

10. காந்தி... புத்தரா ? . . . . . . . . . . . . . . . 158

11. காந்தியின் அறம் . . . . . . . . . . . . . . 188
12. காந்தியும் கோட்சேவும் . . . . . . . . . . . 195
உதவிய நூல்கள் . . . . . . . . . . . . . . 203
FREETAMILEBOOKS.COM . . . . . . . . . . 204
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . . 223
நன்கொடை . . . . . . . . . . . . . . . . 231

# மகாத்மா ?!


| | |
|---|---|
| மகாத்மா ?! | |
| ஆசிரியர் | உ. இளமதி அறிவுடைநம்பி B.Sc.,B.E |
| உரிமை □ | உ. இளமதி அறிவுடைநம்பி |
| முதல் பதிப்பு | ஜனவரி 2022 |
| பக்கங்கள் | 103 |
| தாள் | 80 ஜிஎஸ்எம் |
| எழுத்துரு | ATM 005 \| CHENETUNICODE001 \| 12p |
| விலை | ₹ 100/ |
| தொடர்புக்கு | +91- 9943800262 |

**Design and Printed by**

**Unit of**

**SUN CREATIONS, Karaikudi**

U Ve Sa Prints

Made for Books

...

**+91-9578078500**

# சமர்ப்பணம்

**மண்ணுக்காகவும்**

**மக்களுக்காகவும்**

**தன்னலம் பாராது**

**இன்னுயிர் நீத்த**

**அத்தனை**

**மகாத்மாக்களுக்கும்**

**சமர்ப்பணம்**

# அணிந்துரை



**முனைவர் அ. பூ. நடராஜன்**

**இணைப்பேராசிரியர்**

**அரசியல் அறிவியல் துறை**

**சென்ட்ரல் சட்டக்கல்லூரி**

**சேலம்-8**

தோழியர் உ. இளமதி அறிவுடை நம்பி அவர்களின் ‘மகாத்மா?!’ என்ற இந்த நூல், ’சாதி

ஒழிப்பு, சமூக அக்கறை, பெண்ணுரிமையின் மீது அக்கறை, மூடநம்பிக்கை ஒழிப்பு, அறிவியல் வளர்ச்சி போன்றவற்றில் அக்கறை உள்ளவர்கள் அவசியம் படிக்கவேண்டிய ஒரு சிறந்த படைப்பாகும்.

காந்தியாரைப் பற்றி இதுவரை பல நூறு புத்தகங்கள் வெளிவந்துள்ளன என்றாலும் அவற்றுள் மிகப் பெரும்பாலான புத்தகங்கள் காந்தியாரை புகழ்ந்தும் அவரை ஒரு அவதார மகானாக சித்தரித்தும் அவரின் புகழ் மற்றும் வெளிச்சப் பகுதிகளைப் பற்றியதுமானதாகவும் மட்டுமே இருந்துள்ளன. காந்தியாரைப் பற்றிய நடுநிலையான விமர்சனப்பார்வை கொண்ட நூல்கள் அவற்றுள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் மிக மிகக் குறைவானதாகவே உள்ளன. அந்த வகையில் இந்த ‘மகாத்மா?!’ என்ற இந்த நூலும் ஒரு பக்கச்சார்பற்ற நடுநிலையான

விமர்சன நூல் என்ற வரிசையில் வைத்து கருதப்பட வேண்டிய நூலாகும். புத்தகத்தின் தலைப்பிலேயே மகாத்மா என்ற வார்த்தைக்கு பின்பு ஒரு கேள்விக்குறி(?) ஒரு ஆச்சர்யக்குறி(!) போட்டு காந்தியாரை ஒரு மகாத்மா என்று பார்ப்பது மட்டுமின்றி அவரின் விமர்சனத்துகுரிய மற்றைய பக்கங்களையும் பார்க்கவேண்டும் என்ற கருத்தோடு அமைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்த நூலின் அனைத்து அத்தியாயத்தின் தலைப்புகளும் காந்தியாரைப் பற்றிய பல புதிய பரிமாணங்களையும் இன்றைய இளைய சமுதாயம் பக்கச்சார்பின்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ள விதம் போற்றப் படவேண்டியதாகும். காந்தியாரைப் பற்றி, இதுவரை பலரும் பொதுவெளியில் விவாதிக்காத பல செய்திகளையும் தரவுகளையும்

இந்த நூலில் தந்திருக்கும் ஆசிரியர் இடையிடையே வாசகர்களின் சிந்தனைகளை தூண்டும் பல கேள்விகளையும் தந்திருப்பது சிறப்பாக உள்ளது.

முதல் அத்தியாயத்திலேயே பெண்ணுரிமைச் சிந்தனைகளில் காந்தியார் முரண்பட்ட கருத்துக்களை கொண்டவராக இருக்கிறார் என்று கருதும் ஆசிரியர் காந்தியின் மனைவிக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றி பேசுகிறார். “பெண்களின முன்னேற்றமும், பெண்களுக்கதான சுதந்திரமும் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று காந்தியார் இறுதிக் காலங்களில் பேசினார்! மறப்பதற்கில்லை! ஆனால் மனைவியான கஸ்தூரிபாயின் எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கிறாரா? கஸ்தூரிபாய்க்காக ஏதேனும் விட்டுக் கொடுத்திருக்கிறாரா?

காந்தியாரின் கட்டுப்பாட்டுக்குள் கஸ்தூரிபாயை வாழப்பழக்கினாரா? இல்லை கஸ்தூரிபாயின் விருப்பு, வெறுப்புகளுக்கு காந்தி மதிப்பு கொடுத்து வாழ்ந்ததாரா? விடையை உங்களிடமே விட்டு விடுகிறோம்?" என்ற வரிகளில் ஆசிரியர் வாசகர்களின் சிந்தனையை தூண்டுகிறார்.

இயற்கை மருத்துவம் என்ற தலைப்பில் ஆசிரியர் காந்தியாரின் இயற்கை வழி மருத்துவத்தின் மீதான அதீத நம்பிக்கையை மிகச்சரியாக விமர்சனம் செய்திருக்கிறார். கஸ்தூரிபாய் மிக மிக கடுமையாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த காலத்தில் அவருக்கு ஆங்கில வழி மருத்துவம் செய்து இருந்தால் அவரை காப்பாற்றி இருக்கலாம் என்ற சூழ்நிலையில் அப்படி ஆங்கில வழி மருத்துவத்தை செய்யாமல் இயற்கை வழி மருத்துவம் மட்டுமே என்ற கொள்கையை

பிடிவாதமாக காந்தியார் இறுதிவரை வலியுறுத்திப் பேசியதால் காந்தியாரின் மனைவி கஸ்தூரிபாய் உயிர் பிரிய நேர்ந்தது என்பதை மிகுந்த வருத்ததுடன் ஆசிரியர் பதிவு செய்கிறார். ‘’கடவுளும் காப்பாற்றவில்லை. கணவரும் காப்பாற்றவில்லை. கஸ்தூரிபாயின் மரணம் நிறைவேறியது. உயிரைக் கொடு12ப்பதற்கும் உயிரை எடுப்பதற்கும் யாருக்கும் உரிமை இல்லாத போது மனைவியை காப்பாற்றும் உரிமையை காந்தி செய்யத் தவறியது ஏன்? இறக்கும்வரை மருந்து மாத்திரை கொடுக்க தவறியது ஏன்?” என்ற கேள்வி மூலம் ஆசிரியர் காந்தியின் இயற்கை வழி மருத்துவ கொள்கையை விமர்சிக்கிறார்.

‘மதம் வழியில் காந்தி’ என்ற அத்தியாயத்தில் காந்தியாரின் தீவிர இந்து மதப் பற்றை ஆசிரியர் மிகவும் கவலையோடு விமர்சனம் செய்கிறார். சாதி ஒழிப்பில் அக்கறை கொண்ட காந்தியார்

வர்ண தர்மத்தை போதிக்கும் இந்து மதத்தை தனது உயிர் மூச்சாக கருதுவது ஒரு முரண்பாடு என்று கூறும் ஆசிரியர், “எனக்கு (காந்தியாருக்கு) எப்போதெல்லாம் குழப்பம் உண்டாகிறதோ அப்போதெல்லாம் இதை (கீதையை) படிப்பேன் என்கிறார். இந்துக்களின் புனித நூலாம் கீதையில்தான் நெற்றியில் இருந்து பிறந்தவன், தோளில் இருந்து பிறந்தவன், தொடையிலிருந்து பிறந்தவன் என்று அறிவிற்கு அப்பாற்பட்ட கேலிக்கூத்தாக பிறப்பின் அடிப்படையில் மனிதர்களை வகைப்படுத்தி இருக்கின்றனர். உலகில் வேறு எந்த மதத்திலும் இல்லாத மாபெரும் அசிங்கம் இந்து மதத்தில்தான் அரங்கேறி இன்றுவரை கோலோச்சுகிறது அந்த மதத்தை காந்தியார் அறிவார்ந்த மதமாக ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது எவ்வாறு புரிந்து கொள்வது?” என்ற வரிகள் மூலம் வாசகர்களை

சிந்திக்க தூண்டுகிறார்.

‘காந்தியாரும் Dr.அம்பதேக்கரும்’ என்ற அத்தியாயத்தில் காந்தியாருக்கும் அம்பேத்கருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை சுட்டிக்காட்டி அதனால் இந்திய அரசியல் சமூக வரலாற்றில் ஏற்பட்ட சாதக பாதகங்களை தெளிவாக விளக்கியுள்ளார். ‘காந்தியும் புத்தரும்’ என்ற அத்தியாயத்தில் இருவரின் அணுகுமுறைகளும் எவ்வாறு வேறுபடுகின்றன என்று கூறுகிறார். வர்ணாசிரம தத்துவத்தின் மூலம் மறைமுகமாக சாதியப்பிரிவுகளுக்கு வாய்ப்பு தரும் காந்திய சிந்தனைகளை விடவும் மனித குலத்தில் ஆண் பெண் என்ற என்ற இரண்டே பிரிவுகள் மட்டுமே சாத்தியம் என்று கூறும் புத்தரின் கோட்பாடுகள் உயர்வானது என்று கூறுகிறார். “காந்தியார் மதம் என்ற பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்து சகோதரத்துவத்தை

புரிய வைக்க முயன்றார். ஆனால் புத்தர் மட்டுமே மதங்களை உடைத்து விட்டு மனிதனாக வாழ்ந்தார்" என்ற ஆசிரியரின் வரிகள் குறிப்பிடத் தக்கவையாகும்

'காந்தி கண்ட கனவும் பலனும்' என்ற அத்தியாயத்தில் காந்தியாரின் குலக்கல்வி ஆதரவு நிலைப்பாட்டை விமர்சிக்கும் ஆசிரியர், 'குலக் கல்வி முறையில் செய்கின்ற விதவிதமான தொழில்களும் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் என்று காந்தி நினைத்திருந்தால் அவரின் நினைவு தவறானது' என்று ஆசிரியர் வாதிடுகிறார். வர்ணாசிரம தர்ம குலத்தொழில் முறை பற்றிக் கூறும் ஆசிரியர் 'திரு காந்தியாரின் அக்கறை தொழில் மீதா அல்லது தொழில் செய்யும் மக்களின் சமூக நிலைப்பாட்டின் மீதா?' என்ற சிந்தனைக்குரிய கேள்வியை வைக்கிறார். இந்தி தேசிய மொழியாக வேண்டும்

மற்றும் ஆங்கிலம் படிக்கத் தேவையில்லை என்ற காந்தியின் கருத்தையும் விமர்சிக்கும் ஆசிரியர், ‘ஒரு பரந்துபட்ட தேசத்தின் தலைவராக இருப்பவரின் சிந்தனைகள் எதிர்காலத்தை அனுசரித்து அமைப்பது அவசியம் அல்லவா?’ என்று கேட்கிறார்.

‘இரு மகாத்மாக்கள்’ என்ற அத்தியாயத்தில் காந்தியாருக்கு முன்பே விளிம்பு நிலை மக்களின் சமூக விடுதலைக்காகவும் பெண்கள் முன்னேற்றத்துக்காகவும் கல்வி வளர்ச்சிக்கும் பாடுபட்டவர் பிராமணரல்லாத சமூகத்தில் பிறந்த ‘மகாத்மா ஜோதிராவ் பூலே’ [1827 -1890] என்று கூறுகிறார். மகாத்மா காந்தியின் தேச விடுதலைத் தொண்டினை நினைவுகூறும் நாம் ‘மகாத்மா’ ஜோதிராவ் பூலேவின் தனிமனித தொண்டையும் சமூகநீதி செயல்பாடுகளையும் போற்ற வேண்டும் என்று கூறுகிறார்.

மொத்தத்தில் காந்தியைப் பற்றிய பல புதிய சிந்தனைகளையும் விமர்சனப் பார்வைகளையும் உள்ளடக்கியுள்ள இந்த நூல் மிகவும் சிறந்த படைப்பு மட்டுமின்றி சமூக நீதி பற்றிய அக்கறையுள்ளவர்கள் அனைவரும் வாங்கி படிக்க வேண்டிய நூலாகும்.

## அணிந்துரை

**நீ. இரவிச்சந்திரன்**

**தமிழாசிரியர்**

**ஸ்ரீ. மீ.சு.வி.மே.நி.பள்ளி**

**காரைக்குடி**

சகோதரி இளமதி அறிவுடைநம்பியின் மகாத்மா ?! என்னும் நூலைப் படித்தேன். காந்தியை மகாத்மா என்று கொண்டாடுவது சரிதானா என்னும் கருத்தைப் பல கோணங்களில் ஆராய்ந்திருக்கிறார். அதற்கான சான்றுகளையும் நூல் முழுவதும் எடுத்து வைக்கிறார்.

காந்தியை மகாத்மா என்று அழைத்தவர்கள் இந்தியாவின் மாபெரும் கவிஞர் இருவர். ஒருவர் வங்கக் கவிஞர் தாகூர் மற்றொருவர் தமிழ் கவிஞர்

பாரதி. ஆனால் காந்தி தன் சுயசரிதையில் ‘என் அரசியல் தொண்டினை நான் பெரிதாகக் கருதவில்லை. அது எனக்குத் தேடிந்தந்திருக்கும் மகாத்மா பட்டத்தையும் நான் மதிக்கவில்லை. அப்பட்டம் எனக்கு எப்போதும் மனவேதனையையே தந்திருக்கிறது. அப்பட்டத்தால் நான் எந்தச் சமயத்திலும் ஒரு கணநேரமாவது பரவசம் அடைந்ததாய் எனக்கு நினைவு இல்லை’ என்று முன்னுரையிலேயே கூறிவிடுகிறார்.

அரசியலிலும் சமூகச் சீர்திருத்தத்திலும் ஈடுபடும் எந்தத் தலைவரும், எல்லா மக்களும் போற்றும் தலைவராக இருந்துவிட முடியாது. கடும் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் சந்தித்துத்தான் ஆக வேண்டும் காந்தியும் அதற்கு விதிவிலக்கானவர் அல்லர்.

காந்தியின் ஆன்மீகம், உண்ணா விரதம்,

வருணாசிரமச் சார்பு நிலை, இயற்கை சிகிச்சை முறை ஆகியவற்றில் காங்கிரசில் இருந்த பல தலைவர்களுக்கும் உடன்பாடு கிடையாது. பிறகு ஏன் அவரைப் போற்றுகிறார்கள் என்றால், உயிர்ச்சேதம் இல்லாத இந்திய விடுதலை, போராட்டத்திற்கு அவர் தலைமை ஏற்ற காலத்தில் சாத்தியமானது என்பதால்தான்.

பொது வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் சராசரிக் கணவன் போலவோ, சராசரி மனைவி போலவோ வாழமுடியாது. இருவரும் ஒரே கருத்தியலையும், பரஸ்பர சகிப்புத் தன்மையும் கொண்டிருந்தால் ஒழிய இணக்கமான குடும்ப வாழ்வு சாத்தியம் இல்லை.

புலே சமூக விடுதலைக்குப் போராடினார். காந்தியோ அரசியில் விடுதலைக்கும் சேர்த்துப்

போராடினார். அதனால் அவர்கள் இருவரையும் எதிரெதிர் நிறுத்தி, அவரா இவரா என்று ஒப்பிட வேண்டிய தேவை இல்லை.

அதுபோலவே புத்தரைக் காந்தியோடு ஒப்பிட்டு இருவர் கொள்கைகளையும் ஆராய்வது காந்திக்குப் பெருமை சேர்க்குமே தவிர புத்தருக்கு பெருமை சேர்க்காது. ஆதவனும் அகல்விளக்கும் போல ஆகிவிடும்.

தென் ஆப்பிரிக்காவில் தொடர்வண்டியில் காந்தி பட்ட அவமானத்திற்கு அவர்தான் காரணமே தவிர நிறவெறியோ, தொடர்வண்டி நிர்வாகமோ காரணமல்ல என்பதைப் புதிய கோணத்தில் இளமதி கூறுகிறார். அதுபோலவே சில முறை பரிந்துரைக்கப்பட்டும் காந்திக்கு நோபல் பரிசு வழங்கப்படாததற்கான உண்மையான காரணம் இதுதான் என்று அவர் கூறுவது புதிய செய்தி.

காந்திமீது விமர்சனங்களை வைக்கும் அதே வேளையில் அவரைப் போற்றிப் புகழவும் தவறவில்லை.

இந்த நூலில் பல கருத்துக்கள் நமது சிந்தனையைத் தூண்டுகின்றன. சில கருத்துக்கள் ‘ஆமாம், இவர் சொல்வது சரிதானே’ என்று எண்ணத் தோன்றுகிறது. மிகச்சில கருத்துக்கள் மீண்டும் சரிபார்க்கத் தூண்டுகிறது. எனவே முன்முடிவு இல்லாமல் இந்த நூலை வாசிக்க வேண்டியது அவசியம்.

# ஆசிரியர் முன்னோட்டம்

மகாத்மா?! என்ற இந்நூலை எழுத வேண்டும் என்ற உந்துதல் வெகுநாட்களாகவே என்னுள் இருந்தது. காந்தியாரைப் பற்றி எழுதப் போகிறேன் எனச் சொன்ன போது பலரும் வாழ்த்து தெரிவித்தனர். சிலர் அறிவுரைக் கூறினார்கள். என்னுடைய நோக்கம் காந்தியாரை குறை சொல்லியே ஆக வேண்டும் என்பதல்ல! மாறாக அவரிடம் குறையும் இருந்ததென்பதை சுட்டிக் காட்டிடத் தான்! பள்ளியில் நாம் படிக்கும் காந்தியாருக்கும், வரலாறில் நாம் படிக்கும் காந்தியாருக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு! ”மகாத்மா’ என்ற சொல்லை காந்தியார் விரும்பவில்லை என்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய சகோதரர் குறிப்பிட்டுள்ளார். ஏற்பதை விட ஏற்றுக் கொள்ளாதது அவரின்

பெருந்தன்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் அப்பெயர் உண்மையாக பொருந்துமா? என்பதே நாம் வைத்திடும் கேள்வி! புத்தரை காந்தியோடு ஒப்பிடுதலும் சரியான முறை அல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். நானும் காந்தியார் மற்றும் புத்தரின் அணுகுமுறை வெவ்வேறானவை எனக் குறிப்பிட்டுள்ளதை கவனிக்க வேண்டும். மிகப்பெரிய தலைவர்களுக்கு புகழும், எதிர்விமர்சனங்களும் இருக்கத்தான் செய்யும். தலைவர்கள் அவற்றை தவிர்த்து விட்டுப் போனாலும் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் அல்லவா? அப்படித்தான் காந்தியின் மீதான எதிர் விமர்சனங்களை காந்தியாரின் ஆதரவாளர்களும் ஏற்கமாட்டார்கள். ஆரோக்கியமான விவாதம் என்பது எல்லா நோக்கிலும் ஆராய்ந்து பார்ப்பதுதான். அவ்வாறு படைக்கப்பட்டதே இந்த நூல். காந்தியாரின்

கொள்கை முரண்கள் இன்றும் பேசப்படுகின்றன. பேசு பொருளாகவும் உள்ளது. காந்தியாரை புகழும் போது அவர் மகாத்மா, தேசத்தந்தை என்பதை ஏற்றுக் கொள்பவர்கள் அவரின் குறைகளை எடுத்துக் காட்டும் போது அவரும் சராசரி மனிதர்தானே என்று எளிதாக அதிலிருந்து மீள்பவர்கள் சிந்தித்தால் நல்லது.

எழுத்தாளரும், காங்கிரஸ்வாதியுமான எனது அப்பா ஆலம்பட்டு. சோ. உலகநாதன், அம்மா கமலா உலகநாதன், இலக்கணக் கவிதை எழுதக் கற்றுக் கொடுத்த சித்தப்பா கவிஞர் ஆலம்பட்டு சோ. தமிழரசு அவர்களையும், காளையார்மங்கலம் திரு.மூக்கையா வள்ளியம்மாள் அவர்களையும் இத்தருணத்தில் நினைவுக் கூர்வதில் பெருமை அடைகிறோம்.

மேலும், எப்போதும் எனக்கு உறுதுணையாய்

இருக்கும் என் கணவருக்கும், ஊக்கமூட்டும் அருமை மகள்கள் வினோதினி, மதுமதி அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய நல் உள்ளங்களுக்கும், அச்சேற்றிய உ.வே.சா பதிப்பகத்தாருக்கும், எழுதத் தூண்டிய சமூக நீதி, சமூக அக்கறை கொண்ட சகோதரர்களுக்கும், வாசக அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# 1. காந்தி யார்

ஒல்லியான தேகம், கூச்ச சுபாவம், அதிகம் யாரிடமும் பேசாதவர். படிப்பில் சுமாரான மாணவன். அதிகக் கட்டுப்பாடுகள் நிறைந்த குடும்பத்தில் பிறந்தாலும் காந்தியின் பழக்கவழக்கங்கள் சற்று மாறுபட்டு இருந்தது. சிறுவயதில் சக நண்பர்களோடு சேர்ந்து மாமிசம் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கமும் இருந்தது. வீட்டினர்க்குத் தெரியாமல் இதனைப் பழகிக் கொண்டார். ஆனால் இது வெகுநாட்கள் தொடரவில்லை. எல்லோருக்கும் தான் செய்வது தவறென்று புரிந்து விட்டால் அதிலிருந்து மீளும் வழியை தேடுவர் அப்படித் தான் காந்தியும் தன் தவற்றைப் புரிந்து கொண்டார்.

பள்ளியில் சராசரி மாணவனாக இருந்தாலும்

நேர்மையான மாணவனாக இருந்தார். பார்த்து எழுதி கிடைக்கும் மதிப்பெண்ணைக் காட்டிலும் தனக்குத் தெரிந்ததை எழுதிப் பெறக்கூடிய மதிப்பெண் பலபடி உயர்ந்தது எனக் கருதும் மனப்பாங்கும் அவரிடம் இருந்தது. செய்த தவற்றைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் தைரியமும் இருந்தது.

பால் மணம் மாறாத பால்ய திருமணம் தானென்றாலும் இயல்பிலேயே காந்தி தன் மனைவியை அடக்கி ஆளும் சர்வாதிகாரி யாக இருந்தார்! அதை ஒப்புக்கொண்டுமிருக்கிறார். கஸ்தூரிபாய் எதையும் துணிந்து செய்யும் ஆற்றலோடு, வெளிப்படையாகப் பழகக் கூடியவராக இருந்தார் ஆனால் காந்திக்கோ மனைவி தன்னைக் காட்டிலும் பக்குவப்பட்டவராக, அறிவாளியாக இருப்பதை ஏற்றிட முடியவில்லை. அதுவே பலசமயங்களில் இருவருக்கும்

கருத்து மோதல்களாய் வெடித்தது முண்டு. “அநேகமாக ஒரு இந்து மனைவியே இத்தகைய கஷ்டங்களையெல்லாம் பொறுமையாகச் சகித்துக் கொள்ளக் கூடும் இதனாலேயே பெண்ணைப் பொறுமையின் அவதாரமாக போற்றுகிறேன் போற்றுகின்றேன்” என்று காந்தி பின்னாளில் கூறுகிறார்.

தனக்குள் ஒரு மெய்யுணர்வு புரிந்த பிறகு இளவயதிலேயே(36) பிரம்மச்சர்யம் மேற்கொண்டதாய்க் குறிப்பிட்டுள்ளார்! இது அவரின் தனிப்பட்ட உரிமை. இது பொது வாழ்க்கைக்கான தகுதியாகாதல்லவா? எனவே இது குறித்து விமர்சனங்கள் தேவையற்றது இருப்பினும் ஒரு தனிப்பட்ட நபர் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ள இது போன்ற சிலவற்றைத் தவிர்க்கலாம்! அதனை அவர் ஆரோக்யத்திற்கான வழியாகக் கூட கருதலாம்!

தன் வயதான காலத்தில் காந்தியார் பெண்கள் புடைசூழ இறுதி நொடி வரை இருந்தார் என்பதும் வெள்ளிடை மலை! பெண்களின் முன்னேற்றமும், பெண்களுக்கான சுதந்திரமும் எத்தகையதாக இருக்க வேண்டும் என்றும் காந்தியார் இறுதிக் காலங்களில் பேசினார்! மறுப்பதற்கில்லை! ஆனால் மனைவியான கஸ்தூரிபாயின் எண்ணங்களுக்கும், ஆசைககளுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கிறாரா? கஸ்தூரிபாய்க்காக ஏதேனும் விட்டுக் கொடுத்திருப்பாரா? காந்தியாரின் கட்டுப்பாட்டுக்குள் கஸ்தூரிபாய் வாழப்பழகினாரா? இல்லை கஸ்தூரிபாயின் விருப்பு, வெறுப்புகளுக்குக் காந்தி மதிப்பு கொடுத்து வாழ்ந்தாரா? விடையை உங்களிடமே விட்டு விடுகிறோம்.

# 2. உணவும் உண்ணாவிரதமும்

இங்கிலாந்து சென்றதும் திரு. காந்திக்கு சைவ உணவு கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டார். இங்கிலாந்தில் தட்ப வெப்பநிலைக்கும் மதுவும் மாமிசத்தையும் தொடாமல் இருக்க முடியாது என்று காந்தியின் நண்பர்கள் கூறினர். இந்திய உணவு சமைக்கும் கடைகளைத் தெரிந்து கொள்ள கால்நடையாகவே செல்வார். தான் விரும்பிய உணவு கிடைக்காவிட்டாலும் ரொட்டித் துண்டைத் தேடி அலைந்தும் இருக்கிறார். சைவ உணவைக் காண்பது கடவுளை காண்பது போன்று இருந்ததாய் உணர்ந்தார். உணவுக்காக தேடித் தேடிக் களைத்துப் போயிருக்கிறார் பட்டினியாகவும் இருந்திருக்கிறார். மாமிசத்தை ருசித்துப் பார்க்கவில்லை. அந்த மன உறுதியை

திரு.காந்தியிடம் கண்ட நண்பர்களான டாக்டர் திரு. மேத்தாவும், ஸ்ரீ தளபதி ராம் சுக்லாவும் மேற்கு கென்சிங்டனில் ஆங்கிலேய - இந்திய (ANGLO - INDIAN) மூதாட்டியைச் சமையல் செய்து தர ஏற்பாடு செய்திருந்தனர். ஸால்ட் எழுதிய ”சைவ உணவின் முக்கியத்துவம்’ என்ற

நூலை வாசிக்க நேர்ந்த போது அந்நூல் உணவு தேக ஆரோக்கியத்திற்காக அமைய வேண்டுமே தவிர நாவின் ருசிக்காக இருந்துவிடக் கூடாது என்பதை உணர்ந்தார். டாக்டர் அன்னா கிங்ஸ் போர்டு எழுதிய “உணவு முறையில் சரியான வழி” THE PERFECT WAY IN DIET படித்த போது உடலிற்கும் உணவிற்கும் உண்டான தொடர்பை புரிந்து கொண்டார். திரு. காந்தி ருசி,பசி வித்தியாசம் உணரத் தொடங்கினார். நலமோடு வாழ ருசி தேவையில்லை! பசித்துப் புசிப்பதே ஆரோக்கியத்திற்கான திறவுகோல் என்பதை

உணர்ந்து அதன்படி தன் வாழ்க்கை முறையை இளம் வயதிலேயே முறைப்படுத்திக் கொண்டார். எளிய உணவுகள், எளிதில் ஜீரணிக்கக் கூடிய பழ வகைகள், உலர் பழங்கள், பச்சைக் காய்கறிகள், பயிறு வகைகள் இவற்றையே தன் உணவாக்கிக் கொண்டார். சமைத்த உணவுகளில் உயிர்சத்து இல்லாமல் (அ) குறைந்தோ இருக்கும் என்பதால் பச்சைக் காய்கறிகளில் உயிர்ச்சத்து முழுவதுமாக கிடைக்கிறது என்பதால் விரும்பி உண்டார்! இங்கிலாந்தில் படிப்பில் காட்டிய அக்கறையை விட உணவு மற்றும் ஆரோக்கியம் காப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்ள பற்பல புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டது. வாசிக்கும் பழக்கமே வாழ்க்கைக் கல்விக்கானதாய் மாற்றிக் கொண்டார். எனவே திரு. காந்தி எங்கு சென்றாலும் உணவு அவருக்கு ஒரு பெரிய பிரச்சனையாக உருவெடுத்ததில்லை!

விரதங்கள் இருந்து பழகிய குடும்பமென்பதால் காந்தியார்க்கு விரதமிருப்பது மலைப்பாக இருந்ததில்லை! தன் அன்னை மற்றும் மனைவி கடவுளின் பெயரால் வாரம் அல்லது மாதமிரு முறை விரதம் இருப்பார்கள். அதன் பலனாய்க் கடவுளைக் காணலாம் என்பது பெண்களின் கருத்தானாலும் இந்த உண்ணாவிரதத்தை அவர் உடலுக்கும், உள்ளுறுப்புகளுக்கும் கொடுக்கும் ஓய்வு என்பதைப் புரிந்துகொள்ள வெகுநாட்கள் ஆகவில்லை. ஆம் இங்கிலாந்து தனிமை வாழ்க்கை அவருக்கு கற்றுக்கொடுத்தது. உடலும், உணவும், உயிரும், இயற்கையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை! உடம்பு தன்னைத் தானே சரிசெய்து கொள்ளும் என்று உண்மையைத் தெரிந்து கொண்டார். உயிர் இயங்க வேண்டுமென்றால் உடல் நன்றாக இருக்க வேண்டும். உடலும், உயிரும்

ஒருங்கிணைந்து சோர்வின்றி இயங்க உணவு அவசியம் அதேவேளை அளவுக்கதிகமான உணவு உட்கொள்வது உடல் ஆரோக்யத்தைக் கெடுக்கும். “உணவே மருந்து மருந்தே உணவு” பொருளறிந்தார். அயல்நாடுகளில் வாழ்ந்த போது திரு. காந்தியின் நாகரீகப் போக்கு கூட மாறியது. மேற்கத்திய கலாச்சார உடையினை குடும்பத்தார் உட்பட உடுத்திக் கொண்டனர். திரு.காந்தி உடுத்திட வைத்தார் வீட்டையும் கூட அக்கலாச்சார சூழலுக்கு மாற்றினார். வாழ்ந்தார். வாழ்ந்து பார்த்தார். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதற்கிணங்கக் கடைசி வரை போலி நாகரீகத்தில் இன்பம் அடையலாம் ஆனால் திருப்தி காண முடியாது என்பதால் மீண்டும் பழைய ஆடை மாற்றத்திற்கே திரும்பினார். ஆனால் எங்கிருந்த போதும் உணவு விசயத்தில் மாறுபடவில்லை! பசி உணர்வு விரைவில்

எழாத வண்ணம் பால், பழங்கள், உலர்பழங்கள், பழரசங்கள் அருந்துவதை தொடர்ந்து வழக்கமாக்கினார். “உயிரை உணர்ந்தோர் உடலையும் உணர்வர்’ என்பதற்கிணங்க காந்தி அவர்களின் வாழ்க்கை முறை அமைந்தது என்றும் இன்றும் காந்தியாரைப் பற்றி பேசும்போது தனிமனித வாழ்க்கையில் பெரும்பாலானவை வியக்கவைக்கிறது என்றால் மிகையல்ல. உயிர் இயங்க நீர் ஆதாரமே போதுமானது உடல் உழைப்பிற்குத் தான் உணவு தேவை வேறுபாடு அறிந்ததால் தான் திரு. காந்தியின் உண்ணாவிரதத்தை அரசியலில் கேடயமாக பயன்படுத்திக் கொண்டார். காந்தியார் அவர்கள் தனது வாழ்நாளில் 17 முறை 139 நாட்கள் அவற்றில் 3 முறை 21 நாட்கள் தொடர் உண்ணாவிரதமிருந்துள்ளார். இந்த உண்ணாவிரதங்கள் வரலாற்றில் முக்கியத்துவம்

வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆழ்ந்து யோசித்தால் உண்ணாவிரதம் உடலை மேலும் பலப்படுத்துகிறது. கழிவுகள் தேக்கம் அடையாமல் காத்துக் கொள்கிறது. மேலும், ஒரு கோரிக்கைக்காக உண்ணாநிலை எடுக்கும் போதும் யாம் முன்பே கூறியது போல் உயிர்வாழக் காற்றும் நீருமே போதும்! தமிழ்நாட்டில் திரு.சங்கரலிங்கனார் அவர்கள் மெட்ராஸ் என்ற பெயரை நீக்க கோரியும், தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கோரியும் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். பஞ்சாபில் மங்கு ராம் அவர்கள் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தனர். மணிப்பூரில் மாலோம் என்னும் இடத்தில் பேருந்துக்காக காத்திருந்த பொதுமக்களை (பத்து நபர்களை) ஆயுதப்படை சிறப்பு அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர் ஆயுதப்படையின் சிறப்பு அதிகாரத்தை

நீக்கக்கோரி 16 வருடங்கள் பட்டினிப்போராட்டம் இருந்தார் இரும்பு பெண்மணி இரோம் ஷர்மிளா. மக்களை பாதுகாக்க வேண்டிய இராணுவ அதிகாரிகளே பொதுமக்களை புழுவிலும் கீழாய் நடத்தும் இழி செயலையும், அவர்களின் வன்முறை வெறியாட்டத்தை நிறுத்தக் கோரியும் வெறும் 20 வயதேயான இளம்பெண் உலகிலேயே மிக நீண்ட உண்ணாவிரதத்தை மேற்கொண்டவராக பாராட்டப்படும் இரோம் சர்மிளா ஏன் பெரிதும் இந்திய அளவில் கூட பேசப்பட வில்லை? அவரும் சுயநலமில்லாமல் மக்களுக்காக போராடியவர் தானே? சங்கரலிங்கனார், மங்குராம் போன்றோரும் ஏன் மக்கள் மத்தியில் பெரிதாகப் பேசப்படவில்லை என்றால் யோசிக்க வேண்டும் விளம்பரப்படுத்தப்படாத உழைப்பும், பொதுநலத் தொண்டும் அரசியலுக்குப் பயன்படாது. இரோம் சர்மிளா பல வழக்கு

தொடர்ந்தும் பயனில்லை. இறுதியாக அம்மாநில முதல்வரை எதிர்த்து தேர்தலில் நின்று வெறும் 90 வாக்குகளே அவர் சுயநலமில்லா பொதுவாழ்க்கைக்கு கிடைத்த பரிசு. நரியின் தந்திரமும் எதிராளியின் பலமும் அறியாமல் இயங்கும் பல இயக்கங்கள் அரசியல்வாதிகளின் வியூகங்களுக்கு காணாமல் போவதே கண் கூடு திரு. காந்தியை உயர்த்திப்பிடிக்க ஒரு கூட்டம் இருந்தது. அந்த கூட்டத்தினருக்குக் காந்தி அவர்களை வளர விடுவதன் மூலம் அவர்கள் நினைத்ததை அடையலாம் என்பதே! உயர்சாதி இந்துக்களின் அடையாளமாய் தேசத்தில் காந்தி ஆனார். இத்தனை உண்ணாவிரதத்திலும் உயிர் பிழைத்தார் என்றால் ஒன்று அவரின் மன வலிமையும், உடல் உறுதியும் என்று நம்பலாம்! மற்றொன்று”சாகும் வரை உண்ணாவிரதம்” என்ற ஆயுதத்தை பயன்படுத்துவதால் தன் கண்முன்னே

யாரும் யாரையும் இறந்து போகட்டும் என்று கடந்து போக மாட்டார்கள்! கொள்கையை விட உயிரின் விலை மதிப்பற்றது என்பதை தானே மனிதாபிமானமுள்ளவர்கள் சிந்திப்பார்கள்! கண்முன்னே ஆடு உயிருக்குப் போராடுவதைக் காணச் சகிக்காமல் கொன்று விடுங்கள் என்று சொன்னவர் தான் அஹிம்சைவாதி காந்தி விலங்கானாலும் மனிதனானாலும் உயிர் என்பது ஒன்றே என்பது மனிதகுலம் உணர்ந்ததன்றோ! இப்போது சிந்திப்போம் காந்தியின் உண்ணாவிரதங்கள் யாருக்கான வெற்றி! உணவு முறையோ ... உண்ணாவிரதமோ இயற்கை சார்ந்த விஷயம் தான்! ஆனால் அதைப் பயன்படுத்தும் முறை இருமுனைக்கத்தியாய் இருந்தது என்பது மறுக்க முடியாதல்லவா?

# 3. இயற்கை மருத்துவம்

தனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இயற்கை மருத்துவத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தார். தன் ஆரோக்கியத்தின்பால் யார் அக்கறை கொண்டாலும் முதலில் கவனிக்கத் துவங்குவது அவரவர் உடலைத் தான்! உடலின் மொழியைத் தான்! அப்படித் தான் காந்தியாரும் உடலை அறிந்திட முனைந்தார்! உணவின் ரகசியம் அறிந்தார்! உணவும் உடலும் உயிரும் ஒருங்கிணைந்திருப்பதை உணர்ந்தார்! உடல் தன்னைத் தானே சரி செய்திடும் என்பதையும் புரிந்தார்! பஞ்சபூதங்களின் கலவை தான் இவ்வுடல்! உயிரின் இயக்கத்திற்கு உணவு தேவையில்லை... உடலின் இயக்கத்திற்கு உணவு அவசியம் அதனால் தான் உண்ணாநிலை

மேற்கொள்பவர் களுக்கு திட உணவு தேவைப்படுவதில்லை என்பதைக் கவனிக்கத் தொடங்கினால் இதன் நுட்பம் புரியும்! அதனால் தான் காந்தியாருக்கு ஆங்கில மருத்துவத்தின் மீது நம்பிக்கை இல்லை. இன்றும் நாம் மரபுவழி மருத்துவங்களுக்கு மாறிக் கொண்டிருக்கின்றோம் என்பதும் உண்மை தாம். ஆனால் உயிருக்கு போராடும் நேரத்தில் ஆங்கில

மருந்தின் வாசனையை நுகராமல் இருக்கவும் முடியாது என்பதும் உண்மை தானே! தான் படித்தவற்றில் இருந்தும், அனுபவத்திலிருந்தும் அறிந்ததைக் கொண்டு காந்தியும் நீர் சிகிச்சை, மண் சிகிச்சை போன்ற மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டார்! உயிருக்கே ஆபத்தான நிலையில் இருந்த தன் மகன் மணிலாலுக்கு டைப்பாய்டு, நிமோனியா காய்ச்சலில் அவதிப்பட்ட போது டாக்டர்கள்

எவ்வளவோ அறிவுறுத்தியும் மாமிச சூப் குடித்தால் உடல் நிலை தேற வாய்ப்புள்ளது என்றனர். மாமிச சூப் குடும்ப பழக்கத்திற்கு ஆகாதல்லவா? ஆகவே காந்தியின் உடன்பிறப்பான பிடிவாதமும் பிடிவாதமாக ஒப்புக்கொள்ள மறுக்கிறது. என்னுடைய விருப்பத்தின் படிதான் மருத்துவம் பார்க்க வேண்டும் என்றும் மறுத்தால் மணிலாலைத் தன்னுடன் அழைத்துச்செல்ல உள்ளதாகவும் கூறுகிறார்! இறுதியில் காந்தியே தன் மகனை மிகுந்த கடுமையான சூழலில் கூட்டிச் செல்கிறார்! நீர் சிகிச்சை, மண் சிகிச்சை என மாற்றிமாற்றி செய்கிறார் ஏறத்தாழ 40 நாட்களுக்கு பிறகு மணிலால் பூரண குணமடைகிறார்! உடல் தந்த அத்தனை கடுமையான சிரமங்களை மணிலாலும் பொறுத்துக் கொண்டும், தன் தந்தையின் சிகிச்சையின் மீது வைத்த நம்பிக்கையும்

மணிலாலின் உயிரைக் காப்பாற்ற முடிந்தது என்றால் மிகையல்ல...! இங்கே நாம் சிந்திக்க வேண்டியது மருத்துவத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டிலும் எங்கே மருத்துவர் தன் குலவழக்கத்துக்கு மாறாக உணவைக் கொடுத்து விடுவாரோ என்ற எண்ணம் தான் மேலோங்கி உள்ளது. மேலும், எனக்குத் தெரிந்த சிகிச்சையை நம்பிக்கையுடன் செய்ததாகவும் அதனால் ஏற்படும் எந்த நிலைமைக்கும் கடவுள் தான் பொறுப்பாளி என்கிறார்!

மிகுந்த உதிரப் போக்கால் உடல் பலவீனமடைந்து உயிருக்குப் போராடும் நிலையில் கஸ்தூரிபாய்க்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய இக்கட்டான சூழலில் வேறு வழியின்றி சம்மதிக்கிறார் காந்தி. அறுவை சிகிச்சை முடிந்தாலும் உடல்நிலையில் முன்னேற்றமில்லை. அவரை கண்காணிக்கும் மருத்துவர் பால், முட்டை,

மாமிச சூப் இவற்றை அதிக அளவில் கொடுக்க வேண்டுமென்கிறார்! ஆபத்தான நிலையில் கஸ்தூரிபாய் இருந்ததால் காந்திக்குத் தெரியாமல் ஒருமுறை மாமிசசூப் மருத்துவர் கொடுத்ததைக் கூறக் காந்திக்குக் கடுங்கோபம். தனக்குத் தெரியாமல் என்பதை விட தனக்குப் பிடிக்காத ஒன்றை டாக்டர் செய்ததால் தன் மனைவியின் உடலையோ, நலத்தையோ உயிரையோ பற்றி சிந்திக்காமல் பிடிவாதமாக அங்கிருந்து கஸ்தூரிபாய் அவர்களை டாக்டர்கள் தடுத்தும் கவலை கொள்ளாது உடன் அழைத்து செல்கிறார். இந்த நிலையில் அவர்களை மாற்றுவது அவரின் உடல் நிலைக்கு உகந்ததல்ல... மேலும் உயிருக்கே ஆபத்தாகலாம். உயிரைக் காட்டிலும் கொள்கையும் பிடிவாதமும் முக்கியமா? என்ற போதும் அவள் உயிருடன் இருப்பாளானாலும் இல்லை இறக்க நேர்ந்தாலும் அது கடவுளின் சித்தமாகவே

நான் கருதுகிறேன் என்கிறார்! காந்தியின் பிடிவாதத்திற்கு மனைவியின் உயிரையும் பணயம் வைத்தார் என்றும் சொல்லலாம் ஆனால் தன் இயற்கை சிகிச்சையால் கஸ்தூரிபாயை ஓரளவு குணமாக்கினார். இவையாவும் தென் ஆப்ரிக்காவில் நிகழ்ந்தவை. எல்லாச் சமயத்திலும் ஆங்கில மருத்துவத்தைப் புறக்கணிக்கக் காந்தியால் முடிந்ததா?

பெற்றோர், பிள்ளைகள் எவ்வளவுதான் உதிரச் சொந்தமானா லும் எங்கிருந்தோ வந்த மனைவியின் மீது தான் ஆண் காதலையும், அன்பையும் அவர் தனக்கே உரியவள் என்ற எண்ணத்தையும் தனக்குள் விதைத்துக் கொள்கிறார்கள். அதே போல் தான் மனைவியும் எத்தனை உறவுகளால் சூழப்பட்டாலும் கணவனின் அன்புக்கு மட்டுமே கட்டுப்படுபவளாய் உணர்கிறாள் மகிழ்கிறாள்! ஆனால் தன்னுடைய

எண்ணங்களைக் கணவரிடம் கட்டாயப்படுத்து வதில்லை! பெண் அன்பைப்பொதுவாகக் கருதுகிறாள்! ஆன்மா ஆசையை தனித்தனி என்பதை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

1942 ஆகஸ்ட் 9ல் காந்தி பம்பாய் பிர்லா ஹாலில் கைது செய்யப்பட்டுள்ளார். மறுநாள் மாபெரும் கூட்டத்தை யார் நடத்துவது என்ற கேள்வியும் எழுந்தது என்ன ஆச்சரியம் கஸ்தூரிபாய் வழிநடத்தினார். நீண்ட உரையை நிகழ்த்தினார். மாநாடு சுசிலா நய்யரின் துணையோடு சிறப்புடன் நிறைவுற்றது. பிறகு கஸ்தூரிபாயும் கைது செய்யப்பட்டு காந்தியிருந்த ஆஹா கான் சிறையில் அடைக்கப்பட்டார்.மாரடைப்பு மற்றும் மூச்சுக்குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டு மனைவி கஸ்தூரிபாயை காப்பாற்றிவிட காந்தி உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுத பிரபல மருத்துவர்

டாக்டர் சிகிச்சை அளிக்க அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். மனைவியைக் காப்பாற்ற நினைத்த காந்தியின் கடமை உணர்வும் நியாயமானதே அதே வேளையில் கொள்கை அளவில் சரியாக நடந்து கொண்டாரா? அல்லது மனைவியின் உயிர் காக்க இறுதிவரை முயன்றாரா? கஸ்தூரிபாய் அன்னையின் இறுதி நிமிடங்களைக் காந்தி எவ்வாறு கையாண்டார் என்பதையும் கவனிக்கவும்.

பிறிதொரு வேளை, கஸ்தூரிபாய் நோய்வாய் பட்டிருந்த நேரம் கிட்டத்தட்ட மரணப்படுக்கையில் கிடக்கையில் தேவதாஸ் காந்தி கல்கத்தாவிலிருந்து ஆங்கில மருந்தான பென்சிலின் ஊசியை வரவழைத்து தன் தாயை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று நினைத்து ஊசியையும் வரவழைத்து விட்டார்! ஆனால் தாயின் மீது மகன் வைத்திருக்கும்

அன்பிற்கும் எல்லை என்பது உண்டல்லவா? மனைவியின் மீது உரிமை பாராட்டுவது கணவனின் முடிவல்லவா? மகனின் பாசப் போராட்டம் ஜெயித்ததா இல்லை கணவனின் வறட்டுப் பிடிவாதம் ஜெயித்ததா? காந்தியின் பிடிவாதம் வென்றது. கஸ்தூரிபாயைக் கொன்றது மரபுவழி மருத்துவத்தை பிடிப்பு கொண்டவர், ஆங்கில மருத்துவத்தை அடியோடு வெறுத்தவர், பென்சிலின் ஊசியைச் செலுத்த மறுத்து விடுகிறார். வழக்கம்போல் கடவுள் செயல் என்று சொல்கிறார்.

“கடவுள் விரும்பினால் அவர் என் மனைவியை நோயிலிருந்து காப்பாற்றுவார்”-காந்தி

கடவுளும் காப்பாற்றவில்லை. கணவரும் காப்பாற்றவில்லை. கஸ்தூரிபாயின் மரணம் நிகழ்ந்தேறியது. உயிரைக்

கொடுப்பதற்கும், உயிரை எடுப்பதற்கும் யாருக்கும் உரிமையில்லாதபோது மனைவியைக் காப்பாற்றும் உரிமையைக் காந்தி செய்யத் தவறியது ஏன்? இறக்கும் நொடி வரை மருந்து, மாத்திரை கொடுக்கத் தவறியது ஏன்?

ஜெர்மனிக்கு எதிராக ஆள் திரட்டும் பணி அதிகமாக இருந்ததால் காந்தியாரின் உடல் நிலை மோசமானது ஆசனவாயில் தாங்க முடியாத வலி. அவசியம் பால் அருந்த வேண்டுமென்றும், ஊசி மூலம் சிகிச்சையளித்து குணமாக்கலாம் என தலால் கூறினார்! மாட்டுப்பால் சாப்பிட மறுத்த போது கஸ்தூரிபாய் ஆட்டுப்பால் சாப்பிட வற்புறுத்துகிறார்! டாக்டரும் ஆட்டுப் பாலை அருந்தச் சொல்கிறார். ஆட்டுப்பால் சாப்பிட விழைந்ததற்கு காந்தி இவ்வாறு கூறுகிறார்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்த

வேண்டும் அதற்கு நான் உயிரோடிருக்க வேண்டும் என்ற ஆசை எனக்குள் வந்து விட்டது. எனவே விரதத்தைச் சொல்லளவில் மாத்திரம் அனுசரித்து விட்டு அதன் உட்கருத்தைத் தத்தம் செய்துவிட என்னையே திருப்தி செய்து கொண்டேன் என்கிறார். கஸ்தூரிபாய் இறந்து ஒரு மாதமே கடந்த நிலையில் கடுமையான மலேரியக் காய்ச்சலால் அவதிப்பட்ட போது வெளிநாட்டு பென்சிலின் ஊசியைப் போட அனுமதிக்காமல் மனைவியைப் பறிகொடுத்தவர் அதே வெளிநாட்டு மருந்தான குயினைன் மாத்திரையை உட்கொண்டு தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். உயிர் என்பது அனைவருக்கும் ஒன்று தானே... உயிர் வாழ ஆசைப்படுவதும் எல்லோரின் உரிமை தானே! கஸ்தூரிபாய்க்கு மட்டும் ஏன் வாழப் பிடிக்கவில்லையா? பிறகேன் மகனின் கடைசி முயற்சியையும் கைவிட அடம்பிடித்தார்! அதே

பிடிவாதத்தை ஏன் அவரின் உயிர் விஷயத்தில் காட்டவில்லை? இது சுயநலத்தின் உச்சமல்லவா? காந்தியின் கொள்கை முரண்பாடுகளில் இதுவும் ஒன்று! தான் உயிர் வாழும் நாளையும் கடவுளின் சித்தமென்று கைகட்டி இருந்திருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்யவில்லை! உயிரே போனாலும் கொண்ட கொள்கையில் மாறாத எத்தனையோ கொள்கையாளர்களை இந்த தேசம் மறக்கவில்லை! காந்தியின் சமகாலக் கொள்கையாளர்களாக சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங், கொடிகாத்த குமரன், வ.உ.சிதம்பரம்பிள்ளை மொழிப்போருக்காக உயிர் நீத்த நடராசன், தாளமுத்து, கக்கன், காமராசர் இன்னும் ஏராளமானோரை நாடு போற்ற மறக்கவில்லை! தேவைப்படும் போது அணிந்து கொள்ளவும், தேவைப்படாத போது கழட்டி வைப்பதற்கும் கொள்கை என்பது மாற்றுச்

சட்டையல்ல... மாறாத பற்றே கொள்கை என்பது காந்தியாருக்குத் தெரியாதா என்ன?

# 4. தென்னாப்பிரிக்காவில்...

லண்டனில் பாரிஸ்டர் பயின்று பெரும் கனவுகளோடு தாயகம் திரும்பினார். தான் ஒரு பாரிஸ்டர் என்பதை பிறருக்கு உணர்த்தும் விதமாக இருந்தது அவரின் நாகரீக உடை. காந்தியின் சகோதரர் இன்னும் கொஞ்சம் கூடுதலாக வீட்டை ஒரு மேற்கத்திய வாசிகளின் இருப்பிடம் போல் மாற்றினார். வருமானம் காணும் முன்னே வசதியை விரும்பினார். எதை மாற்றிய போதும் காந்திக்கு வழக்குரைஞர் தொழிலில் ஈடுபட மனம் துணியவில்லை காரணம் படிப்பும், அனுபவமும், எதார்த்தமும் வெவ்வேறானது என்றே உணர்ந்தார். நீதிமன்றத்திற்கு சென்று மிகப்பெரிய வழக்கரைஞர்களின் வாதம், எதிர்த்தரப்பினரின் மன ஓட்டம், சிறிய

விஷயங்களிலும் அதிக கவனம், உன்னிப்பாக கவனிக்க வேண்டியதன் அவசியம், பேச்சுத் திறமை ஆகியவற்றைக் கண்டு அஞ்சினார் என்று சொல்லலாம். விளைவு மனு எழுதிக் கொடுக்கும் சின்ன வேலையைச் செய்தார். அந்த வருமானமே போதும் என்று நினைத்தார். அச்சமயத்தில் தான் போர்பந்தரைச் சேர்ந்த மேமன் வியாபாரக் கம்பெனியின் உரிமையாளர் அப்துல்லா சேத் என்பவர் காந்தியின் சகோதரரிடம்

கம்பெனி மீது வழக்கு நடப்பதாகவும் நிறைய வழக்குரைஞர்களை பணியில் அமர்த்தி உள்ளேன் ஆனால் அவர்களுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்ல உங்கள் தம்பி உதவியாய் இருப்பார் என்பதால் கூறுகிறேன் என்றார். மீண்டும் ஒரு வெளிநாட்டுப் பயணம் இலகுவான வேலை! கைநிறைய சம்பளம்! வந்த வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொண்டார். 1893-ல்

தென்னாப்பிரிக்கப் பயணம். நேட்டாலிலிருந்து இருந்து பிரிட்டோரியாவிற்குச் செல்ல காந்திக்குப் பயணச் சீட்டு வாங்கினார் அப்துல்லா சேத். முதல் வகுப்பு டிக்கெட் கூடுதலாக இரவு படுக்கை 5 ஷில்லிங் கொடுத்து சீட்டுப் பெற வேண்டும் ஆனால் காந்தியோ தனக்கு முதல் வகுப்பு டிக்கெட் மட்டும் போதும் படுக்கைக் கட்டணமெல்லாம் வேண்டாம் என்றார். சேத் எவ்வளவோ எடுத்துக் கூறியும் காந்தி வழக்கமான தன் பிடிவாதத்தால் மறுக்கிறார். விளைவு ரயில் நேட்டால் தலைநகரம் மாரிட்ஸ்பர்க் நிலையத்திற்கு இரவு ஒன்பது மணியளவில் அடைந்தது. ரெயில் சிப்பந்தி வந்து படுக்கை வேண்டமா? என்கிறார். வேண்டாம் என்றார் காந்தி. வேறு அதிகாரி வந்து படுக்கை கட்டணம் செலுத்தாமல் முதல் வகுப்பில் பயணம் செய்ய இயலாது இறங்குங்கள் இல்லையேல் போலீஸை அழைக்க வேண்டிவரும் என்று

எச்சரிக்கிறார். ஆனால் காந்தி அந்நாட்டின் ரயில்வே சட்டம் தெரியாமல் பிடிவாதம் பிடித்ததால் வண்டியில் இருந்து கீழே இறக்கப்படுகிறார். இதில் எங்கிருந்து வந்தது நிறவெறி? நிறவெறியால் அவமானப்படுத்தப்பட்டார் என்று எப்படி சொல்ல முடியும்? ரயில்வே சட்டத்தை மீறிய காரணத்தால் தான் காந்திஇறக்கி விடப்பட்டார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மறுநாள் ரெயில்வே ஜெனரல் மானேஜருக்கு தந்தி கொடுக்கிறார். அப்துல்லா சேத்திடமும் தகவல் தெரிவிக்கிறார். மானேஜரோ ரெயில்வே அதிகாரிகள் செய்தது சரியே என்கிறார். அடுத்த ரயிலில் டர்பனில் வாங்க மறுத்த படுக்கைச் சீட்டை மாரிட்ஸ்பர்க்கில் வாங்கி எந்த நெருக்கடியும் இல்லாமல் சார்லஸ் டவுனை அடைகிறார். அவ்வூரின் சட்டம் தெரியாத காரணத்தாலும், பிடிவாத குணத்தினாலும் ரெயிலிலிருந்து கீழே

இறக்கிவிடப்பட்டிருக்கிறார் காந்தி! அவ்வளவு தான்!

மீண்டும் நான்கு சக்கரக் குதிரை கோச் வண்டியில் பயணிக்கிறார். இவர் அந்நியராக இருந்ததால் “கூலி”யாக கருதப்பட்டார். “தலைவர்” என்பவர் கோச் வண்டியில் காரியங்களைக் கவனித்துக் கொள்பவர். வண்டியோட்டிக்குப் பக்கத்தில் இருக்கும் ஆசனத்தில் தலைவர் அமர்வது வழக்கம் ஆனால் தலைவரின் இருக்கையை காந்திக்கு அளித்துவிட்டு வெள்ளைக்காரர்களுடன் தலைவர் அமர்ந்து கொண்டார். சிறிது நேரம் கழித்து தலைவர் காந்தியை எழுந்திருக்கச் சொல்லி வண்டியோட்டியிடமிருந்து அழுக்கு கோணித் துண்டை எடுத்து வண்டியின் படிமீது விரித்து அதில் உட்காரச் சொன்னார். காந்திக்கு பெருத்த அவமானமாகத் தோன்ற உங்கள்

காலடிக்கு கீழ் என்னை உட்காரச் சொல்கிறீர்களே வண்டியில் அமரும்போதும் சகபிரயாணி களோடு அமரவைக்காமல் உங்கள் காலடியில் உட்காரச் சொல்கிறீர் அப்படி உட்காரமாட்டேன் என்றதும் தலைவர் ஓங்கி அறைந்து விட்டார். வண்டியிலிருந்து கீழே தள்ளவும் முயன்றதாகக் கூறுகிறார். அயல் நாட்டில் சில மணி நேரப் பயணத்திலேயே “தலைவர்” என்பவர் யாரோ? எவரோ? அவர் காலடியில் அமர்வதை பெருத்த அவமானமாகக் கருதி எதிர்த்துப் பேசியவர் பின்னாளில் இந்தியாவில் தன் சொந்த மண்ணில் சொந்த மக்களில் பெரும்பகுதியினர் உயர் ஜாதி இந்துக்களிடம் அவமானப்பட்டுக் கிடக்கின்றனரே அவர்களின் சுயமரியாதையைப் பற்றி காந்தி ஏன் கண்டுகொள்ளவில்லை? “தலைவலியும், வயிற்றுவலியும் தனக்கு வந்தால் தான் தெரியுமோ?!”

மீண்டும் கோச் வண்டிக் கம்பெனியின் ஏஜெண்டுக்கு கடிதம் எழுதுகிறார். தனக்கு நேர்ந்ததை விளக்குகிறார். மறுநாள் பிரயாணத்தின் போது உள்ளே உட்கார வாக்குறுதி தர வேண்டும் என்கிறார். ஏஜெண்டும் சம்மதிக்கிறார். காந்தி குறைத்தே பேசுவார். அதிகம் மனு எழுதுவார். எழுதி எழுதியே தென்ஆப்பிரிக்காவில் வாழும் சூழலுக்குத் தயாராகிறார். சந்தர்ப்ப சூழ்நிலையால் இந்திய மக்களின் உரிமைகாக்கக் காந்தி சட்டத்தின் துணை கொண்டு அங்குள்ள மக்களுக்கு வழிகாட்டுகிறார். போராடுகிறார். தென்னாப்ரிக்காவில் தான் “சத்யாகிரகம்” என்ற சொல்லைத் தன்னுடைய போராட்ட முறைக்கு பெயரிடுகிறார்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் பிரச்சனையை அரசுக்கு எப்படிப் புரியவைப்பது

என்ற யோசனைக்கான முயற்சிதான் சத்தியா கிரகத்தின் பிறப்பாகக் கூறினார். கலகங்களை உருவாக்குவது ஒரு முறை. கலவரமின்றி அமைதியான வழியில் போராடுவது மறுமுறை. காந்தி தேர்ந்தெடுத்தது இந்த வழியையே! இதற்கான பெயராக "சாத்வீக எதிர்ப்பு" [Passive Resistance] அதற்கான பொருளாக அது பலவீனங்களின் ஆயுதமாகவும் கருதப்பட்டது. பகைமைக்கு இடமளிக்கும் என்பதும் மேலும் முடிவாக பலாத்காரமாக வளர்ந்து விடக் கூடும் என்பதை அறிந்து தன்னுடைய "இந்தியன் ஒப்பினியன்" பத்திரிக்கை மூலம் இது சம்மந்தமான யோசனை சொன்னால் சிறு பரிசு தரப்படும் என்று அறிவித்தார். மகன்லால் காந்தி கூறிய (சத்-உண்மை, ஆக்கிரகம்- உறுதி) அச்சொல்லுக்கு மெருகேற்றி "சத்தியாக்கிரகம்" என்று பெயரிட்டார். காந்தியாரின் அரசியல்

வாழ்வில் அவரின் சாக்வீக எதிர்ப்பும் இருந்தது. அவரது நிலைப்பாட்டில் உண்மையும், உறுதியாகவும் இருந்ததால் சத்தியாக்கிரகமும் இருந்தது. ஆனால் அது பொதுவான உண்மைக்கும், நேர்மைக்குமானதாக இருந்ததா? என்பது சந்தேகமே!

ஆரஞ்சு பிரிஸ்டேட்டில் 1858-ல் இந்தியருக்கு முன்னாள் இருந்த உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்தியர் இருக்க விரும்பினால் ஹோட்டல்களில் வேலைக்காரர்களாக இருக்க முடியும்.

1885-ல் டிரான்ஸ்வாலில்(Transvali) கடுமையான சட்டம் இயற்றப்பட்டது. 1886-ல் சிறு மாறுதல்களைச் செய்தார்கள். அச்சட்டத் தின் படி இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் செல்ல கட்டணமாக ஆளுக்கு 3 பவுண்ட் தலைவரி கட்ட வேண்டும். இந்தியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில்

தான் குடியிருக்க வேண்டும். அந்த நிலமும் அவர்களுக்குச் சொந்தமாகாது பொது நடைபாதையில் இரவு 9 மணிக்கு மேல் நடக்க கூடாது. வீட்டை விட்டு வெளியே வரவும் கூடாது. இந்த அடிமை வாழ்க்கை காந்தியாருக்கு வேதனை அளித்தாலும் சராசரி மனிதனாய் அதைக் கடந்து போகத் தானே வேண்டும் என்று உணர்கிறார். அப்துல்லா சேத் வழக்கும் வெற்றி அடைந்ததால் காந்தியை மீண்டும் இந்தியாவிற்கு அனுப்ப முடிவெடுத்து பிரிவு உபசார விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவ்விழாவின் போது நாளிதழ் கண்ணில் பட படிக்க நேர்ந்தது எதேச்சையாக நேட்டால் சட்டசபையில் மெம்பர்களைத் தேர்வு செய்யும் உரிமையை இந்தியர்களுக்கு பறிப்பதற்கென்று மசோதா கொண்டு வரப்பட்டது. இந்த உரையாடலில் சேத்தின் நண்பர்களும் தங்கள் இயலாமையைப் பற்றிக் கூறுகிறார்கள்.

ஒரு நண்பர் மட்டும் காந்தி தாங்கள் இங்கு இருந்தால் நீங்கள் சட்டம் பயின்றவர் அத்துடன் இங்குள்ள சட்டங்களை தாங்கள் அறிந்து கொண்டால் உங்கள் வழிகாட்டிதலின் படி வேலை செய்ய நாங்கள் ஒத்துழைக்கிறோம். தற்போது தாயகம் செல்லும் எண்ணத்தைக் கைவிடலாமே என்கிறார். அப்துல்லா சேத்தும் ஒத்துக் கொண்டார். காந்திக்கும் இவ்வாய்ப்பை நழுவவிட விருப்பவில்லை. தன்னால் தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியர்களுக்கு அவர்களின் உரிமைக்கு உதவிட முடியும் என்று பிறர் கருதும்போது அதை அவரும் பலமாக நம்பத் தொடங்கினார். சட்டத்தின் மூலமே உரிமையை நிலைநாட்ட முடியும் என்பதை உணர்ந்தே தென் ஆப்பிரிக்கா வழக்குரைஞராகப் பதிவு செய்யும் முயற்சியில் நீண்ட போராட்டத்திற்குப் பிறகு நேட்டால் மாகாணத்தில் பதிவு செய்தார். இந்தியருக்கு

வாக்குரிமை பறிக்கும் மசோதா சம்மந்தமாக மட்டும் அனுப்பினால் போதாது இவ்வுணர்வு மக்களுக்கு இருந்து கொண்டே இருக்க கனல் நீர்த்துப் போகாமல் இருக்க ஊதிக் கொண்டே இருக்க வேண்டும் அல்லவா? அதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே “நேட்டால் இந்திய காங்கிரஸ்” 22/-05/-1894-ல் உருவாக்கப்பட்டது.

காந்தியின் தென்னாப்பிரிக்கா வாழ்வை இரு பகுதியாகப் பிரிக்கலாம். வழக்குரைஞராகப் பயிற்சி பெற்ற போதும், வழக்குரைஞ ராக முனைப்புடன் செயலாற்றிய போதும் எனவும் கொள்ளலாம். ரஸ்கின், டால்ஸ்டாயின் எழுத்துக்கள் காந்தியை முற்றிலும் வேறு திசைக்கு திருப்பியது. பணமும், புகழும் கிடைத்த நேரத்தில் காந்தி மிடுக்கான ஆடம்பர வாழ்விலும் திளைத்திருந்தார். பொது வாழ்க்கை, தென்னாப்பிரிக்கா வாழ் இந்திய

மக்களின் உரிமைக்காக தன்னால் இயன்ற சட்ட அணுகுமுறைகளில் ஒருசில வெற்றி கிடைத்த பிறகு காந்தி மக்களுக்காக வாழப் பழகினார். வழக்குரைஞர் பணியில் கிடைத்த பணத்தை மக்கள் அளித்த அன்பளிப்புகளும், பரிசு பொருட்களையும் திருப்பி மக்களுக்கே கொடுத்தார். எளிமையான வாழ்க்கைக்கு பழகிக் கொண்டார்.

# 5. மதம் வழியில் காந்தி

காந்தியின் குடும்பம் வேதத்தையும் மதத்தையும் இரு கண்களாகப் பாவிக்கும் குடும்பம். அவ்வழி வந்த காந்திக்கும் மத ஈடுபாடு இருப்பதில் வியப்பேதுமில்லை. மதம் என்பது உடலில் உள்ள நிரந்தர உறுப்பிற்கு சமம் என்று பின்னாளில் காந்தியார் மதம் குறித்து தன் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். பகுத்தறிவு கொண்ட எந்த ஒரு மனிதனும் இந்து மதத்தைப் புனித மதமாக இல்லை ஒரு சாதாரண சாமான்யாக்கும் சன்மார்க்கம் காட்டும் மதமாக ஏற்றிடமாட்டார் இளவயதில் காந்தி வெளிநாடு சென்று படிக்க விரும்பினார். அதற்கு அவர் குடும்பத்தினர் மற்றும் ஊர்க்காரர்கள் விரும்பவில்லை காரணம் வைணவர்கள் கடல் கடந்து செல்லக் கூடாது

என்பது ஒரு தருமம் என்பது தான். ஆனால் காந்தி அவர்கள் இைபந்துக்களின் எண்ணத்திற்கு மதம் சொன்ன கருத்தை ஏற்றிட மறுத்தார். கடல் கடந்த வெளிநாட்டுப் பயணத்தில் உறுதியாக இருந்தார்.

அதன் விளைவாகக் காந்திக்கு அபராதம் மற்றும் அவரைத் தள்ளி வைத்தார்கள் என்று கூடச் சொல்லலாம். பின்னாளில் மதம் என்பது தனிப்பட்டவரின் உரிமை அந்த வகையில் அடுத்த மதம் பற்றிய விமர்சனம் வேண்டாம் என்கிறார்! எனக்கு எப்போதெல்லாம் குழப்பம் உண்டாகிறதோ அப்போதெல்லாம் கீதையை படிப்பேன் என்கிறார்! இந்துக்களின் புனித நூலாம் கீதையில் தான் நெற்றியிலிருந்து பிறந்தவன், தோளிலிருந்து பிறந்தவன், தொடையிலிருந்து பிறந்தவன் என்று அறிவிற்கு அப்பாற்பட்ட கேலிக் கூத்தாகப் பிறப்பின் அடிப்படையில் மனிதர்களை வகைப்படுத்தியிருக்கின்றனர். உலகில் வேறெந்த

மதத்திலும் இல்லாத மாபெரும் அசிங்கம் இந்து மதத்தில் தான் அரங்கேறி இன்று வரை கோலோச்சுகிறது. அந்த மதத்தைக் காந்தியார் அறிவார்த்த மதமாக ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது எவ்வாறு புரிந்து கொள்வது?

வருணாசிரம, சாதியப் பாகுபாடுகளை உண்டாக்கிய இந்து மதத்தை அதன் மரபு மாறாமல் குற்றங்குறை ஏதும் சொல்லாமல் ஏற்றுக்கொண்டுள்ளார். சாதி அமைப்பு வேண்டும் என்கிறார் தவறில்லை ஏற்றுக்கொள்ளலாம்! ஆனால் அதன் ஆணிவேராக உள்ள மனு தர்மத்தையும் சேர்த்து ஏற்கிறார் .

எனது கருத்துப்படி சாதி அமைப்பு ஓர் அறிவியல் அடிப்படை கொண்டதாகும். சரியான காரண விளக்கம் கொண்ட பகுத்தறிவு அதன் அதனை எதிர்பார்க்கவில்லை அது

குறைபாடுகள் உடையதாக இருக்கிறதென்றால் நற்பலன்களையும் அது கொண்டிருக்கிறது. ஒரு சமுதாய நெறிமுறை கட்டுப்பாட்டைச் சாதி அமைப்பு உருவாக்குகிறது. சாதிகளின் ஒழிப்புக்கு நியாயமான காரணத்தை என்னால் காண முடியவில்லை சாதியை ஒழிப்பதென்பது இந்து மதத்தையே தகர்ப்பதாகும். வருணாசிரம தருமத்தை எதிர்த்துப் பேசிட எதுவுமில்லை

-அரிஜன் இதழ் 2.11.1933.

வருணாசிரமம் என்பது மனித சக்தியின் பாதுகாப்புச் சட்டம் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. நான் குப்பை அள்ளும் ஒரு தோட்டியாக இருந்தால் என் மகனும் ஏன் அப்படியே தோட்டியாக இருக்கக்கூடாது?

-அரிஜன் இதழ் 3.6.1947.

பல சாதியினருக்கும் ஒரு சாதியினரை

ஒதுக்கி வைப்பதில் தான் பாதுகாப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சாதி அமைப்பைத் தான் “மகாத்மா” ஆதரித்தார். திரு. காந்தியார் தோட்டியாக இருந்திருக்கிறார் அதில் பிறரால் புகழப்பட்டிருக்கிறார். மாற்றுக் கருத்தில்லை. ஆனால் பிறப்பிலேயே தோட்டியாக இருந்தாரா? இருந்திருந்தால் அதன் வலியும், வேதனையும் அனுபவித்திருப்பார். மாறாக உணர்த்தான் முடிந்தது உணர்வதற்கும் அனுபவத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டல்லவா? தனிமனிதனென்றால் அவரின் கருத்துக்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் இன்றுவரை இருக்காது ஆனால் ஒரு மிகப்பெரிய எல்லையை உள்ளடக்கிய பிரதேசத்தின் ஒப்பற்ற தலைவரின் கருத்துக்களாய் இது இருக்கையில் எப்படி தவிர்த்துவிட்டு காந்தி அவர்களை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட முடியும்?

சிந்தனாவாதிகள் சிந்திக்கத் தானே செய்வார்கள்!

காந்தியின் மறுபக்கமாகக் கருதப்படும் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின் போது ஒரு முழுமை பெற்ற மனிதராகத் தெரிகிறார்! எல்லா மதமும் ஒன்று தான்! அனைத்து மதமும் போதிப்பது அன்பையும் கடவுளையுந்தான். தன்னுடைய அனைத்து பிரார்த்தனைக் கூட்டத்திலும் எல்லா புனித நூல்களிலிருந்தும் ஒரு சில வரிகளை மேற்கோள் காட்டிடத் தயங்கவில்லை! கீதையை உயிராய் மதிக்கிறார் சிலநேரங்களில் என் பகுத்தறிவிற்கு எட்டியதே... என் மனசாட்சியே... நான் காணும் மதம், கடவுள் என்கிறார்.

மதமென்பது முன்னோர்களால் உருவாக்கப்பட்டு மனித இனம் ஒற்றுமையாய் வாழ வேண்டுமெனில் சில கட்டுப்பாடுகள் அவசிய மென்றும் எப்படி ஓடும் ஆற்றுக்கும் ஆர்ப்பரிக்கும்

கடலுக்கும் கரைகள் அவசியமாகுமோ அப்படித்தான் சாஸ்திரங்கள் சம்பிரதாயங் களும் மனிதனுக்குத் தேவை என்பதை காந்தியும் வலியுறுத்துகிறார்!

காந்தியின் கொள்கை முரண்பாடுகளில் மதத்தின் மகுடமாக விளங்கும் சாதிக் கட்டமைப்பு வேண்டும் வருணாசிரமம் பாதுகாக்கப்பட வேண்டும் ஆனால் தீண்டத்தகாதவர்களாகக் கடைநிலையில் வாழ்பவர்கள் அதே வட்டத்துக்குள் தான் இருக்க வேண்டும். அதுவே அவர்களின் நலனுக்கு உகந்ததாகும் என்பதை பகிரங்கமாகக் கூறுகிறார். அதேசமயம் தாழ்த்தப்பட்ட மக்களை நேசிக்க வேண்டும் என்கிறார்! அவர் நேசித்தார் என்பதும் கண்கூடு! ஆனால் அவர்களுக்கான சமூக உரிமையையும், அரசியல் உரிமைக்காகவும் எத்தனை நாட்கள், சாத்வீக முறையிலும்... உண்ணாவிரத நிலையையும் மேற்கொண்டார்

வரலாற்றை திரும்பிப் பார்த்தால் வெற்றுப் பக்கங்கள் தான் மிச்சம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் மற்றும் இரட்டை வாக்குரிமைக்கு எதிராகக் காந்தி பேசுகையில் இந்துமதம் பிளவுபட ஒருபோதும் அனுமதியேன். தாழ்த்தப்பட்டவர்கள் இந்து மதத்தின் அங்கத்தினர்கள் அவர்கள் பிரிந்தால் இந்துமதம் பலவீனம் அடையும்! காந்தியாரின் மிகப்பெரிய அக்கறை என்பது உணர்வுபூர்வமாக அவர் நேசித்த மதத்தின் மீது தான் உயிரும் உணர்வும் உள்ள அடித்தட்டு மக்களின் மீது அல்ல! அதனால் தானோ என்னவோ இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை என்பது என் சடலத்தின் மீதுதான் நடக்கும் என்றார் காந்தி விடுத்த எச்சரிக்கையைத் திரு முகமது அலி ஜின்னா காதில் வாங்கவில்லை! அவ்வார்த்தைக்கு

முக்கியத்துவம் கொடுக்கவில்லை! ஆனால், தீண்டப்படாதோரின் நலனுக்காக, உரிமைக்காகப் போராடிய அம்பேத்கரோ காந்தி இந்தியாவிற்குத் தேவையான இந்தியர் என்ற உணர்வின் அடிப்படையில் காந்தியின் உண்ணாவிரதத்தைப் பூனா ஒப்பந்தமாகி முடிவுக்கு கொண்டுவந்தார்.

இந்துமதம் எங்கே பிளவுபட்டு விடுமோ என அஞ்சிய போது பல கசப்புணர்வுகளுக்கு மத்தியில் பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனால் காந்திக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும சில சமூக உரிமைகள் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனவும் சொல்லலாம்! அம்பேத்கரின் சீரிய முயற்சி இந்துக்களை அசைத்துப் பார்த்தது என்பதும் உண்மையே! அதற்குச் சான்றாகத் தீண்டாமை ஒழிப்பு, பொதுக் கிணறுகள், சாலைகள், பள்ளிகள், சுடுகாடு, இடுகாடு சகலப் பொதுக் கோவில்களையும்

தாழ்த்தப்பட்டோருக்கு திறந்து விடுவதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று 1932 செப்டம்பர் 30-ல் பம்பாய் கவாஸ்கி ஜஹாஸ்கீர் மண்டபத்தில் காங்கிரஸ் அறிவித்தது. இதற்குக் காலம் காலமாக கோலோச்சி வாழும் இந்துக்கள் உடனே ஒத்துக் கொள்வார்களா? காந்தியார் வாக்குறுதி கொடுத்தாலும் கட்சிக்குள்ளும், பொதுவெளியிலும் இது ஒரு தலைவலியாக தான் இருந்தது. காந்தியின் உண்ணாவிரதத்தின் போது எல்லாக் கோவில் களும் தாழ்த்தப்பட்டோருக்காக திறக்கப்பட்டன என்பதெல்லாம் மிகைப் படுத்திய செய்தியே!

“போலிதீர் சங்கம்” காந்தியாரின் அறிவுறுத்தலின் பேரில் தாழ்த்தப்பட்டோர் நலன் கருதி துவங்கப்பட்டது. ஆமை வேகத்தில் செயல்பட்ட அச்சங்கம் மூலம் யாரும் பயனடையவில்லை எனத் தெரிந்ததும்

காந்தியாரால் நியமிக்கப்பட்ட சங்க உறுப்பினர்களைக் கடிந்திடக்கூட இல்லை. கண்டும் காணாமல் இருந்தார்! இறுதியில் சங்கம் காணாமல் போனது.

சேரன் மகாதேவியில் துவங்கப்பட்ட ஆசிரமத்தில் மாணவர் களிடம் சமபந்தி போஜனமில்லை. பிராமணர்களுக்குத் தனிஉணவும் பிராமணரல்லாதோருக்குத் தனிஉணவும் பரிமாறப்பட்டது. வ.வே.சு. அய்யர் தலைவர். பெரியார் பொருளாளர். ஆசிரமத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டித்தார் பெரியார். அய்யர் கண்டுகொள்ளவில்லை. ஆசிரமத்திற்குப் பிராமணரல்லாதோரே பெரும்பகுதி நிதிஉதவி அளித்த தால் சரி சமமாகக் கருதாத சமுதாயத்தினருக்கு இந்த நிதி சேரக்கூடாது என்று பெரியார் நினைத்தார். வ.வே.சு.அய்யர் எதிர்பாராத வகையில்

இறந்ததால் அந்த தலைமைப் பதவிக்கு சண்முகம் செட்டியார் பதவியேற்றார். அதை மகாதேவ அய்யர் மறுத்தார். இப்பிரச்சனை ஆரம்பித்த இடத்திற்கே போனது. ஆம் காந்தியின் கவனத்தில் கொண்டு செல்லப்பட்டது பிறகு குருகுலம் நிறுத்தப்பட்டு காந்தியிடமே ஒப்படைக்கப்பட்டது. காந்தியும் டாக்டர் இராசன் என்ற பிராமணரிடமே தலைமையை ஒப்படைத்தார். சமபந்தி என்பதற்கே அர்த்தமின்றிப் போனது அக்குருகுலம் ஒரே பந்தியில் சாப்பாடு போட வேண்டும் என்று கேட்பதிலும் தவறில்லை அதை மறுப்பதிலும் தவறில்லை அது அவரவர் அபிப்ராயம் என்றார் காந்தி.

இதில் சமத்துவமோ... சமதர்மமோ காந்தியின் வார்த்தையில் இல்லையே! சமத்துவத்திற்கான தேடுதலாக, கண்டனக் குரலாக கூட காந்தி பேசவில்லையே என்பதால் தான் இன்னும்

காந்தியின் சாதி குறித்த பேச்சுக்கள் விவாதங்களுக்கு விதைக்கப்பட்டதாக உள்ளது.

காந்தி என்றாலே எல்லோருக்கும் நினைவிற்கு வருவது அவரது அரை நிர்வாணக் கோலமேயாகும். அவரின் ஆடை மாற்றத்திற்கான காரணத்தைக் கூறுகிறார். இது நீண்டநாள் சிந்தித்து எடுத்த முடிவு. நாம் பண்பாட்டில் ஆண்கள் முழு ஆடை அணிய வேண்டுமென்று கட்டாயமாகச் சொல்லவில்லை. நமது தட்பவெப்ப நிலைக்கு முழு ஆடை தேவையுமில்லை என்கிறார். உடைகளிலும் அவர் மதநெறிக்கு உட்பட்டே செயல்பட்டுள்ளார். காந்தியார் மதுரைக்கு ரயிலில் வரும்போது விவசாயிகளைப் பார்த்தார் என்றும், சகபயணிகளின் உடை அணிதல் குறித்து பேசினார் என்றும் அந்த நிகழ்வு அவர் மனதில் சட்டென்று ஆடை மாற்றத்தை மதுரையில் நிகழ்த்தினார் என்று மதுரை மக்களும்,

தமிழ் மக்களும் பெருமை கொள்கிறார்கள் ! வடமாநிலங்களில் அவர் விவசாயக் கூலிகளின் ஆடைகளை கவனித்ததில்லையா? தமிழகத்தில் மட்டுந்தான் வறுமைக் கோலம் இருந்ததா? காந்தியாரின் அரை நிர்வாணக் கோலம் எல்லோருக்கும் எவ்விதத்தில் பயன் அளித்தது? சிந்திக்க வேண்டுமல்லவா? "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" மறக்கலாமா அன்பர்களே! வறிய மக்களில் நானும் ஒருவர் என்பதை உணர்த்தவே எனது எளிமை என்றும் கூறுகிறார். தன்னுடைய நிலைக்கு மற்றவர்களை உயர்த்த முயற்சி செய்ய வேண்டும் அதற்கு மாறாக நத்தை தன் கூட்டுக்குள் இழுத்துக் கொள்வது போல மக்களின் வறுமைக்கு தானும் வறுமை கோலம் பூணுதல் எவ்விதத்திலும் சரியானாதாகும்? உணவுப் பஞ்சத்தில் உழலும் மக்களைப் பற்றிச் சிந்தித்ததால் திரு. காந்தி

அவர்களின் உணவு பழக்கங்கள் எளிமையாக மாறியதோ?

காந்தியாரின் ஆடை மாற்றமும் இந்துமதத்தின் வரையரைக் குட்பட்டே தான் செயல்பட்டுள்ளார் என்பதையும் அன்பர்கள் நினைவில் நிறுத்திட வேண்டும்.

# 6. முக்கோண அரசியல்

காந்தி, காங்கிரஸ், தேசவிடுதலை வரலாற்றைப் புரட்டினால் பகத்சிங், சுபாஷ் சந்திர போஸின் வீரம் நிறைந்த தியாக வாழ்க்கைப் பக்கத்தை வாசிக்காமல் கடக்க முடியாது! இந்திய வரலாறும் முழுமை பெறாது. குறிப்பாகக் காந்தியின் கொள்கை முரண்பாடுகளில் வரலாற்று ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் காந்தி - பகத்சிங் - சுபாஷ் ஆகியோரின் செயல்பாடுகளைத் தொடர்புபடுத்திப் பார்க்க தவறிய தில்லை! அடிமைத்தனத்தை எதிர்த்து பொங்கி எழும் இளைஞர்களின் செயல்பாடுகளும் முழுக்க முழுக்க நியாயமானது தான்! ஆழ்கடலின் அமைதியாய்க் காந்தி இருந்ததும் வியப்பு தான்! பகத்தும், சுபாசும் ஆரம்பகால அரசியல் வாழ்வில்

காந்தியின் கொள்கை மீது கொண்ட ஈர்ப்பால் தான் காங்கிரஸில் சேர்ந்தனர்! ஆனால் அரசியல் நரித்தந்தரம், சூழ்ச்சியும் நிறைந்த காங்கிரஸ் அமைப்பில் இருந்ததால், தொடர்ந்தால் நமக்கான போராட்டத்தைத் துவங்க முடியாது என்பதால் சுபாஷ் வெளியேறினார். சுழலும் சூறாவளியாய் விடுதலை வேட்கை மேலோங்கும் பகத்சிங்கோ காந்தியின் கொள்கையால் ஆகப் போவது

ஒன்றுமில்லை என உணர்ந்தும் கம்யூனிச சித்தாந்தங்களை உள்வாங்கிப் புரட்சியாளராய் தன்னை மெருகேற்றிக் கொண்டார்!

சுபாஸின் வாழ்க்கையின் இறுதிப் பக்கங்களும், பகத்சிங்கின் இறுதி நாட்களும் காந்தியால் தீர்மானிக்கப் பட்டவை அல்ல என்றாலும் அவரின் தலையீட்டால் போராளி, புரட்சியாளர்களான இருவரின் அரசியல் வாழ்வில்

திரு.காந்தியும் ஏதோ ஒரு இடத்தில் மையப் புள்ளியாய்ப் பரிணமித்திருக்கிறார் என்பது மறக்க முடியாத உண்மை!

ஆனால் இருவருமே காந்தியாரை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்கவில்லை. மதித்தார்கள் என்பது கண்கூடு. பகத்சிங்கும், சுபாசும் அவரவர் கொள்கையில் நேர்மையோடும், உறுதியோடும் மாறாப்பற்றோடும் இருந்ததால் எல்லோரும் எல்லோராலும் நேசிக்கப் படுகிறார்கள்! திரு.காந்தியாரின் கொள்கைகளில் அரசியலில் நிறைய முரண்பாடுகளும் தென்படுவதால் சர்ச்சைகளுக்குள் இன்னும் விவாதமாகவே தொடர்கிறார்!

காந்தியும், சுபாசும் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்தே பணியாற்றினர். காந்தி மிதவாதியாக இருந்தார். சுபாசோ தீவிர தேசியவாதியாக

இருந்தார். 1924ஆம் ஆண்டு காந்தி காங்கிரஸ் கட்சித் தலைவரானார். சுபாஷின் குரு சித்தரஞ்சன்தாஸ் அவரோ காந்தியின் அகிம்சைக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்தார் ஒத்துழையாமை இயக்கத்தை ‘’சௌரி சௌரா’ சம்பவத்தில் ஏற்பட்ட வன்முறை காரணமாகக் காந்தி தன்னிச்சையாக நிறுத்தினார். அதைக் கண்டித்து காங்கிரஸ் கட்சிக்குள் ‘சுயராஜ்ய கட்சி’ நிறுவினார். சித்தரஞ்சன் தாஸ் அதற்குப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் சுபாஷ். ‘சுயராஜ்யா’ என்ற பத்திரிக்கையைத் துவக்கினர். காற்றும், நெருப்புமாய் இருந்தனர் இருவரும் என்றால் அது மிகையல்ல. சுபாஷ் துடிப்பும், வேகமும் ஆற்றலுமிக்க திலகர், அரவிந்தர், சாவர்க்கர் போன்றோரின் செயல்களுக்கு ஆதரவு தந்தார். 1928ல் கல்கத்தாவில் காங்கிரஸ் கட்சியின் மாநாடு திரு.காந்தியின் தலைமையில்

நடைபெற்றது. சுயாட்சிக்கு எதிர்ப்புக் காட்டிய காந்தியை எதிர்த்துப் பேச அன்றைய தலைவர்களுக்குத் தைரியமில்லை. ஆனால் சுபாஷ் அவர்களோ காந்தியின் முடிவு தவறு என்று சுட்டிக்காட்டினார். நேருவும் சுபாஷின் கருத்தை வரவேற்றார். உட்கட்சிப் பூசல் துவங்கியது. 1939- காங்கிரஸ் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட போது சுபாசை எதிர்த்துப் போட்டியிட நேருவையும், படேலையும் வற்புறுத்தினார் காந்தி. இருவரும் மறுக்கவே திரு.பட்டாபி சித்தாராமையரை வேட்பாளாராக நிறுத்தினார். ஆனால் தேர்தல் முடிவில் 1580 வாக்குகள் வித்தியாசத்தில் சுபாஷ் வெற்றிபெற அந்த வெற்றியை ஏற்றிட முடியாமல் காந்தி உண்ணாவிரதமும் இருந்தார். மேலும் சீத்தாராமையரின் தோல்வி தன்னுடைய தோல்வி என்றும் வெளிப்படையாகக் கூறினார். என்னதான் சுபாஷ் அவர்கள் காங்கிரஸ் தலைமைப்

பொறுப்பில் இருந்தாலும் கிங் மேக்கர் காந்தியார் இருந்ததால் அவர் நினைத்த செயல்களை கட்சிக்குள் செய்ய முடியாத வருத்தத்தில் போஸ் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறினார். ஒரு உறையில் இரு கத்திகள் இருக்க முடியாது என்பது காந்திக்கும், சுபாசிற்கும் நன்கு தெரிந்ததே! 1939ல் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியைத் துவக்கினார் சுபாஷ். காங்கிரஸ் கட்சியின் தவிர்க்க முடியாத தலைவரானார் காந்தி. ஜாலியன் வாலாபாக்கில் எண்ணற்ற இந்திய உயிர்களைப் பலிவாங்க உறுதுணையாக நின்ற ஜெனரல் டயரை லண்டனில் அந்த சோகத்தின் ரணம் ஆறாத இளைஞன் உத்தம்சிங் 1940-ல் சுட்டுக் கொன்றார். இந்த செய்தி இந்திய மக்களை நேசித்த பல தலைவர்களுக்கும் குறிப்பாகச் சுபாசிற்கும் ஆறுதல் அளித்தது. புகழாரம் சூடினார். ஆனால் சொந்த மண்ணில்

ஆயிரக்கணக்கான மக்கள் ரத்த வெள்ளத்தில் கிடந்தபோது வராத கோபமும் வருத்தமும் டயரை சுட்டுக் கொன்ற உத்தம்சிங்கின் செயலைக் கண்டித்து அறிக்கை விடுகிறார் காந்தி. ஒரு இந்தியனால் ஒரு ஆங்கிலேயனும் இறக்கக் கூடாது என்பது திரு.காந்தியின் மேன்மையான எண்ணமாக இருக்கட்டும்! ஆனால் அதே ஆங்கிலேயர்களால் நம் இந்திய மக்கள் கொத்துக் கொத்தாக மடியும் போது மௌனம் காப்பதையே வாடிக்கை- யாக்குவது ஒவ்வொரு உணர்வுள்ள இந்தியனுக்கும் அதிர்ச்சியளிப் பதாகதானே அமையும்.

இரண்டாவது உலகப்போரில் இங்கிலாந்திற்கு ஆதரவாக இந்தியாவில் பிரிட்டிஷ் இராணுவத்தில் சுமார் 5000 சிப்பாய்களை இத்தாலி, ஜெர்மன், துருக்கி நாடுகளின் மீது போர் செய்ய அனுப்ப பிரிட்டிஷ் அரசு முடிவெடுத்தபோது படேலும்,

நேருவும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் வழக்கம் போல காந்தியாரோ அதற்கு உடன்பட்டார். ஆனால் துரதிஷ்ட வசமாக இத்தாலியால் நமது இந்திய சிப்பாய்கள் சிறைபடுத்தப்பட்டனர். மேலும் முசோலினி இந்திய சிப்பாய்களை ஓரிடத்தில் வைத்து விஷவாயுவைக் கசியவிடப் போவதாய் ஹிட்லருக்குத் தகவல் தெரிவிக்கிறார். இச்செய்தி எப்படியோ சுபாஷிற்கு தெரிந்தது. சுபாஷ் பொறுமையாக இருக்க வேண்டுகோள் வைக்கிறார். தெய்வாதீனமாக முசோலினி உடன்படுகிறார். இந்தியச் சிப்பாய்களைக் காண சுபாஷ் செல்கிறார். சுபாஷைக் கண்டதும் இந்திய சிப்பாய்கள் 'நேதாஜி ஜிந்தாபாத்' என்ற உணர்ச்சி மேலோங்க ஆனந்தக் கூக்குரல் இடுகின்றனர்.

சுபாஷ் அவர்கள் இவர்கள் யாவரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்தாலும் என் சகோதரர்கள் இவர்களுக்குப் பொதுமன்னிப்பு

தாருங்கள்

நான் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து பிரிட்டிஷ் இராணுவத்தை எதிர்த்துப் போரிட இவர்கள் உதவுவார்கள் என்று கூற இந்தியச் சிப்பாய்கள் 5000 பேரும் சுபாஷ் பேரியக்கத்தில் இணைகின்றனர். இந்த மகிழ்ச்சியான செய்தியை வானொலியில் செய்தியாக அறிவிக்கிறார் சுபாஷ். அன்று தீவிர தேசியவாதியான சுபாஷ் மட்டும் தன்னார்வத்தோடு, இந்திய மண் தந்த உணர்வோடு செல்லாவிட்டால் “கூலிக்காக மாரடிக்கும்” என்பது போல் யாருக்காகவோ தன் இன்னுயிரைச் சிந்தியிருப்பர் அல்லவா? அப்பாவி ராணுவத்தினர்

சுபாஷின் சமயோசித புத்தியால் இந்திய வீரர்களும் காப்பாற்றப்பட்டனர்! இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தும் விட்டனர்! இச்செயல்

மூலம் மிகப்பெரிய படை பலத்தையும் பெற முடிந்தது! இது இங்கிலாந்திற்கு மிகப்பெரிய நெருக்கடியளித்தது.

காந்தியும், சுபாசும் தேசவிடுதலைக்காக மட்டுமே உழைத்தனர்! ஆனால் அவர்களின் பாதைகள் மட்டுமே வேறானது! எதிர் துருவங்கள் எப்படி ஒன்றாக ஒருங்கிணைந்து இருக்க முடியாவிட்டாலும் ஈர்ப்பு என்பது இருக்கவே செய்யுமல்லவா? என்னதான் காந்தி சுபாசின் செயல்களைப் பாராட்டத்தவறினாலும்... ஒரு கட்சிக்குள் இருக்கும் போது நெருக்கடி கொடுத்தாலும் சுபாஷ் மட்டும் காந்தி மீது மரியாதை வைத்திருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே! காந்தியின் ஒருசில முடிவுகளுக்கு பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவிப்பது போல காந்தியின் சில செயல்களைக் கண்டு பாராட்டுவும் தவறவில்லை.

ஒரு வேளை காந்தியும்... சுபாசும் இணைந்தே நாட்டு விடுதலைக்காகப் போராடியிருந்தால் காந்தியின் மிதவாதக் கொள்கை பலன் பெறாமல் காந்தி காணாமற் கூட போகவாய்ப்பாக அமைந்திருக்கும்! சுபாஷின் இறப்பு என்பது இவ்வளவு குறுகிய காலத்தில் நடந்திருக்க வாய்ப்பும் இல்லாமல் இருந்திருக்கும்! இன்றும் மர்மமாகவே இருக்கும் சுபாசின் மரணமும் இவ்வாறு அமைந்திருக்காது என்பது ஒட்டுமொத்த இந்தியரின் கருத்தாகும்.

சிங்கப்பூர் வானொலியில் காந்தியைப் பாராட்டிப் பேசிய சுபாஷ் என்றுமே அனைவரின் உள்ளத்திலும் உயர்ந்திருக்கிறார்!

ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட லாலாலஜபதிராயை ஆங்கிலக் காவல்துறை அடித்ததால் உடல் நலிவுற்று

இறந்தார். சௌரி சௌராவில் நடந்த வன்முறைக்கும், தேசவிடுதலைக்கான முன்னோடியாய் பகத்சிங் குழுவினர் நினைத்த லாலாலஜபதிராயின் இறப்பிற்கும் கண்டனம் தெரிவிக்கும் விதமாக பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இன்னும் பிற தீவிர தேசியவாதிகள் திட்டம் தீட்டினர். பகத்சிங் சான்ட்ரஸை சுட்டுக்கொன்றார். கேளாச் செவிகளுக்கு நம் உணர்வுகள் கேட்கட்டும் என்று யாரும் இல்லாத அசெம்பிளியில் குண்டு வீசினர். மேலும் போதிய அளவு ஆயுதம் வாங்க வங்கியைக் கொள்ளையடித்தனர். இத்தனை குற்றங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டனர் பகத்சிங் குழுவினர். 1930 அக்டோபர் 7-ந் தேதி பகத்சிங், சுகதேவ் ராஜகுருவிற்கு தூக்குத் தண்டனை அறிவித்தது. இந்த அறிவிப்பைக் கேட்டு நாடே கொந்தளித்தது. இருபதே வயதான இளைஞன் தாய்தேசத்திற்காக தன் வாழ்க்கையை

அர்ப்பணிக்கப் போகிறானே என்ற ஏகவருத்தம் எல்லா இந்திய மக்களின் இதயங்களிலும் கணத்த உணர்வை ஏற்படுத்தியது. தூக்குத் தண்டனை நிறுத்தும் விதமாக 6 லட்சம் பேர் கையெழுத்திட்டு பிரிட்டிஷ் ஆட்சித் தலைவரான வைஸ்ராய் இர்வின் பிரபுவிற்கு அனுப்பினார்கள். 1931, பிப்ரவரி 17-ந் தேதி பகத்சிங் தினமாக அறிவித்து தூக்கு தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தினர். பகத்சிங்-கின் தீவிர தேசியவாதம் ஆங்கிலேயரை ஆட்டம் காண வைத்தது. இருபதே வயதான இளைஞனின் பேச்சுக்களால் எண்ணற்ற இளைஞர்கள் புரட்சி வழியில் வன்முறைப் போக்கில் விடுதலையைக் கையாள உற்சாகப்படுத்தியது. காந்தியின் வழி ஆங்கிலேய அதிகாரிகளுக்கு எந்த நெருக்கடியும் கொடுக்கவில்லை. அதனால் தானோ என்னவோ காந்தியும்,

பிரித் தானியர்களும் சுமுகமான உறவைப் பாதுகாத்து வந்தனர். காந்தி, நேரு, படேல், மாளவியா போன்ற காங்கிரஸ் தலைவர்களுக்குக் கடினமான சிறைத்தண்டனையும் அவர்கள் கொடுக்கவில்லை!

இந்தக் கொடிய தண்டனையை ரத்து செய்யச் சொல்லும் உரிமையும், தகுதியும் காந்திக்கே இருக்கின்றதென்று எல்லோருக்கும் தெரியும். ஏனேனில் பிரித்தானிய அரசிடம் அதிக செல்வாக்கு மிக்க இந்திய தலைவர் இவரே!

அஹிம்சாவாதியான காந்தியின் நிலையோ இக்கட்டாக அமைந்தது. ஏனெனில் வன்முறை தீவிர வாதத்திற்கு எப்படி ஆதரவாக ஆங்கிலேயரிடம் பேசுவது. மேலும் ஆங்கில போலீஸாரை அல்லவா சுட்டுக் கொன்றுள்ளனர். இந்திய மண்ணிற்காக, இந்திய தேசத்திற்காக

ரத்தம் சிந்தும் சொந்த மக்கள் மீது இருக்கும் அக்கறையை காட்டிலும் அடடா...! நம்மை பாதுகாக்கும் அன்னிய நாட்டு அதிகாரிகளின் உயிர் நமது மக்கள் மூலமாக பறிபோகுதே என்ற வருத்தமே மேலோங்கி இருப்பதாக உணர முடிகிறது.

பகத்சிங்கின் தூக்குத் தண்டனையை நேரு, மாளவியா, படேல் கடுமையாக எதிர்த்தனர். காந்தியாரை இர்வினை சந்திக்கச் சொல்லி வற்புறுத்தினர்...!

காந்தி-இர்வினின் முதல் சந்திப்பில் காந்தி பகத்சிங் மற்றும் சகாக்களின் பிரச்சணை குறித்து பேசவில்லை. அடுத்தடுத்த சந்திப்பில் பகத்சிங்கின் கூட்டாளிகளின் தூக்கு தண்டனையைக் குறைக்க முறையிட்டார். மார்ச் 25-ந் தேதி கராச்சியில் காங்கிரஸ் மாநாடு

நடக்க விருப்பதால் ஒருவாரம் பகத்சிங்கின் தூக்குத் தண்டனையை ஒத்திவைக்கும் படி தான் காந்தி கூறியுள்ளார்! திரு. காந்தி அவர்களுக்கு இளம்குருத்து கருகப் போவதைக் கண்டு உள்ளுக்குள் வேண்டுமானால் வருத்தப்பட்டிருக்கலாம்! ஆனால் ஒருதுளி கூட செயலில் காந்தி வெளிப்படுத்தவில்லை என்பதே இன்றுவரை தொடரும், இனியும் வளரும் விமர்சனமாக அமையும்!

தேசத்தையே உலுக்கக் கூடிய இளைஞனின் தூக்குத் தண்டனையை மாற்றுவாரா காந்தி என்று எதிர்பார்த்த நிலையில் பஞ்சாப் அரசின் சட்டத்திற்குள் நாம் தலையிட முடியாது என்றார். பகத்சிங் தண்டனை குறித்து அவசியமெனில் சந்திக்கத் தயார் என்கிறார். இங்கே தன்மானச் சிங்கம் தேசவிடுதலைக்காக எந்த எல்லைக்கும் சென்ற இளைஞர்களைக் காப்பாற்ற

வேண்டிய அவசியம் ஆங்கில அதிகாரிக்கா? இந்தியராய், இந்தியாவின் விடுதலைக்காய் குரல் கொடுக்கும் காந்தியாருக்ககா? பகத்சிங் பற்றிய இர்வினுடனான காந்தியின் பேச்சு வார்த்தை இருதுறவிகளுக்கான பேச்சு வார்த்தையாய் அமைந்தது என்று பிரித்தானிய அமைச்சர் கூட வருத்தப்பட்ட செய்தி உண்டு.

காந்தியாருக்கு மட்டுமல்ல கத்தியை எடுத்தவன் கத்தியாலே இறக்க நேரிடும் என்பது அனைவரும் அறிந்ததே! அதற்காக கண்டும் காணாமல் யாரும் இருக்க முடியாதல்லவா? முடிந்தவரை அழுத்தமாக நம் கோரிக்கையை வைப்பதற்கும்.... சம்பிரதாய சந்திப்பிற்கும் வித்தியாசம் உண்டல்லவா? நாட்டு மக்கள் காந்தியிடம் எதிர்ப்பார்த்தது சம்பிரதாய சந்திப்பையல்ல அது தான் இன்னும் சர்ச்சையாகத் தொடர்கிறது.

பகத்சிங் சிறைவாசம் காணுகையில் வயது 21 இரண்டாண்டு சிறைவாசத்தில் அவர் படித்த புத்தகங்கள் 151, 404 பக்கங்களுக்கு குறிப்பு எழுதியுள்ளார். 6 சிறு நூல்கள் எழுதியுள்ளார். நாம் தான் சாகப்போவது உறுதியாயிற்றே என்று மனதைவிடாமல் இருக்கும் ஒவ்வொரு நாளிலும் ஏதாவது தேசத்திற்கும், தேசமக்களுக்கும் செய்ய வேண்டும் என்ற உந்துதல் அவருக்குள் ஜூவாலையாய் இருந்தது. அதனால் தான் தேசத்திற்காக போராடிய கைதிகளை சிறையில் நடத்தும் விதத்தை கண்டித்து பல நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். தன்னுடைய உறுதியை இழக்கவில்லை.

1931 மார்ச் 23ந் தேதியன்று பகத்சிங்கைத் தூக்கிலிடப்போகும் செய்தி அறிந்து காந்தியைச் சந்திக்க நேருவும், மாளவியாவும் சென்றனர். விஷயத்தைக் கூறினர். காந்தியோ மௌனவிரதம்

மேற்கொண்டிருந்தார். ராட்டையைச் சுற்றிக் கொண்டிருந்தார். விஷயத்தைக் கூறினர்.

நான் செய்ய வேண்டியதை எல்லாம் முன்பே செய்து விட்டேன். இனி என்னிடம் ஏதுமில்லை என்று காகிதத்தில் எழுதிக் காண்பித்து ராட்டையை சுற்ற ஆரம்பிக்கிறார். நேருவும், மாளவியாவும் கையறு நிலையாய்க் கலங்கத்தான் முடிந்தது. பகத்சிங்கின் முடிவிற்காக வருந்தத் தான் முடிந்தது. எந்தச் சூழலிலும் காந்தி தன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாத கொள்கையை வரவேற்பதா? யாருக்கும் எந்தப் பலனும் கொடுக்காத பிடிவாதத்தால் வருத்தம் கொள்வதா?

மக்களும், தலைவர்களும் பகத்தின் தூக்கு தண்டனை குறித்து கொந்தளிப்பும், கவலையிலும் மூழ்கடிக்க பகத்சிங்கோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் 1931 -மார்ச் 3-ந் தேதி

ஆளுநருக்கு கடிதம் எழுதுகிறார். அதில் நாங்கள் தேசவிடுதலைக்காக போராடிய புரட்சியாளர்கள். அப்படிப்பட்ட புரட்சியாளர்களுக்கு தூக்கு தண்டனை வழங்குவது சரியல்ல...! ஒரு புரட்சியாளர்களை இராணுவ வீரர்களைக் கொண்டு சுட்டுக் கொல்வதில் தான் எங்களுக்கு பெருமைக்குரிய விஷயமாகும் என்று எழுத்திலும் கூட அச்சம் என்பது தென்படவில்லை. கடிதம் எழுதினார்

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பதற்கிணங்க இத்துணை வீரமும்... புரிதலும் எங்கிருந்து வந்ததென்றால் தாயிடமிருந்து தான்! மகன் தூக்கிலிடப்படபோகும் சில நாட்களுக்கு முன் தாய் வித்யாவதி மகனே! பிறந்த போது இறப்பும் நிச்சயமான ஒன்று தான்! ஆனால் இறந்த பிறகு இவ்வுலகம் ஒருசிலரைத்தான் நினைவு கூர முடியும் அந்த வரிசையில் என்மகனே நீயும் என்றும்

பேசப்படுவாய் என்ற வார்த்தைகள் பகத்சிங்கிற்கு ஒரு மிகப்பெரிய ஆறுதலாக அமைந்தது.

தன் கடைசி ஆசை என்ன என கேட்டபோது என் தாயிடமிருந்து தயாரித்த உணவை உண்ண வேண்டும் என்கிறார். அவர் சொன்ன தாய் யாரென்றால் சிறைச்சாலையில் கழிப்பறையைச் சுத்தம் செய்யும் பெண்மணியைத் தான். பகத்சிங் செய்த செயலாலும், மனதாலும் புரட்சியாளர் தானே! படித்துக் கொண்டிருந்த பகத்சிங்கை நோக்கிக் காவலாளி கவலையோடு வந்து இன்றே தண்டனை நிறைவேற்றப்படும் என்ற செய்தியைச் சொல்கிறார். நாளை தானே எனக்குக் கடைசி நாளென்று நினைத்தேன். சரி, அடிமை தேசத்தில் இன்னொரு நாள் வாழ்வதற்கான வாய்ப்பைக் குறைத்த அரசாங்கத்திற்கு நன்றி சொல்ல வேண்டும்” என்று புன்னகைத்தார்.

பஞ்சாபில் தொடங்கப்பட்ட மாணவர் அமைப்பிற்கு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இன்று ஆயுதங்கள் எடுத்துப் போராளியாக மாறுங்கள் என்று சொல்லவில்லை. மாறாக குக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குக் கூட விடுதலை வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்” என்று குறிப்பிட்டிருந்தார்! இருபது வயதான இளைஞனின் மனது எவ்வளவு பக்குவப்பட்டுள்ளது நினைக்கும் போதே பிரமிப்பாக உள்ளது. தேசத்தை நேசிக்கும் மனங்களுக்குப் பகத்சிங் என்றுமே தீவிர வாதியாகத் தெரியமாட்டார்! அவர் புரட்சியின் வித்து புரட்சியாளராகவே பூத்திருக்கிறார்! என்றுமே அவர் உதிரப்போவதில்லை... எல்லோரின் உதிரங்களிலும் உறைந்தே இருக்கிறார்!

பேசப்படும் வார்த்தைகளைக் காட்டிலும் பேசாத

மௌனம் சிறந்தது என்பர்! ஆனால் எப்போதும் தேச சுதந்திரக் காற்றை சுவாசிக்கும், சுவாசிக்கக் காத்திருக்கும் எந்தத் தலைமுறைகளுக்கும் சுபாஷ், பகத்சிங் வீர வாழ்க்கை, தேசப்பற்றை ஊட்டும் என்பதே நிதர்சனம்!

எனக்கு ரத்தம் கொடுங்கள் உங்களுக்குச் சுதந்திரம் பெற்று தருகிறேன் என்றார் போஸ். போஸ் இவ்வாறு சொல்வது சரியே எனெனில் அவர் ஒரு தீவிர தேசியவாதி. காந்தி அமைதியின் வழியில் சுதந்திரம் பெறக் காத்திருக்கிறார். சுபாஷ் காய் எப்போது கனியாவது அந்தக் கனியும் எப்போது கையில்வருவது? நம்மை அடிமைப்படுத்திய பிரித்தானிய மரத்தை (வேரை) வேரோடு தகர்த்தெறிய வேண்டும் என்று வேறொரு கோணத்தில் சிந்தித்தார்! அதை வலிமை மிகுந்த வார்த்தைகளாலும், வலுசேர்க்கும் படைகளாலும் நிறைவேற்றத் துடித்தார். அவரின்

பேச்சுக்கள் விமர்சனத்துக்குள்ளாகவில்லை காரணம் எப்போதும் ஒரே இலக்கு ஒரே பேச்சு என்பதால்! ஆனால், அஹிம்சாவாதி காந்தி, அமைதியின் சின்னமான திரு.காந்தியார் ஆகத்து-8 1942. கோவலியா டேங்க் மைதானத்தில் (Gowalia Tank Maidan, Bombay) நடந்த கூட்டத்தில் பேசிய காந்தி “செய் அல்லது செத்துமடி” என்ற முழக்கத்தின் வாயிலாக வெள்ளையனே வெளியேறு போராட்டத்தைத் தொடங்கி வைத்தார் காந்தி. வன்முறைக் கலவரத்தில் ஈடுபடாமல் இருப்பது அஹிம்சையா? அல்லது வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் விதமாக பேசுவதில் அஹிம்சை இருக்கிறதா?

காந்தியின் இந்த வார்த்தைகள் வரலாற்றில் புகழ்பெற்ற வாசகமாகிறது! ஆனால் கருணாமூர்த்தியின் சொற்களில் கடுமையான வாசகமாக இதை உணரவில்லையா? மிகத்

தீவிர தேசியவாதியாகக் காந்தி தன்னைக் காட்டிடவில்லையா? தன் தாய்த்தேசத்தை மிகவும் நேசிப்பவர்! அமைதிவழியை நேசிப்பவர் என தன்னுடைய அரசியல் வாழ்வில் புதிய கொள்கையோடு, கட்டமைத்துக் கொண்டவர் இந்த வாசகத்தால் உண்மையான எண்ணத்தை வெளிப்படுத்தினாரா? இல்லை அஹிம்சைக் கோட்பாட்டை மீறிவிட்டாரா? எனவும் எண்ணத் தோன்றுகிறது! இந்த வாசகம் ஏன் விமர்சனத்திற்குள்ளாகிறதென்றால் மகாத்மா எனும் அஹிம்சாவாதி எனற மிகப்பெரிய பிம்பத்தைத் தன்னுள் கொண்டிருந்தவரின் பேச்சுக்கள் இதயத்திலிருந்து வெளி வரும்போது எதை உண்மையென்று ஏற்றுக் கொள்வது? திரு.காந்தியின் சுதந்திர உணர்வில் சந்தேகம் கொள்வதாக அர்த்தமில்லை! அவரின் கொள்கை முரண்பாடுகளில் இதுவும் ஒன்றோ எனும்

சந்தேகமே எழுகிறது.

1906-ல் இந்திய முஸ்லீம்களின் அதிகாரத்தைப் பாதுகாப்ப தற்கான அமைப்பாகத் தான் முஸ்லிம்-லீக் உருவானது. 1930-டிசம்பர் 29-ல் அலகாபாத்தில் கூடிய அனைத்திந்திய முஸ்லீம் லீக் மாநாட்டில் தனித்தேசம் வேண்டுமென முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் கவிஞர் இக்பால்!

அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் என்ற பெயரை ரகமத் அலி மொழிந்தார் இந்து-முஸ்லீம் மக்களின் பதற்றங்களைத் தீர்ப்பதற்காக 1938 பிப்ரவரியில் காந்திக்கும் ஜின்னாவுக்குமிடையே தொடங்கிய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. முஸ்லீம்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை விசாரிக்க குழு ஒன்றை முஸ்லீம் லீக் அமைத்தது 1940-ம் ஆண்டு பாகிஸ்தான் என்ற புதிய நாடு உருவாக எழுச்சிக்கான விதை

தூவப்பட்டது.

1944 செப்டம்பரில் மீண்டும் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. 1946-ல் இந்தியாவுக்கு விடுதலை வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்த பிரிட்டனால் அனுப்பப்பட்ட அமைச்சர்களின் தூதுக்குழுவில் இருந்து விலகிய முஸ்லீம் லீக் போராட்டத்தைத் துவங்கியது நாடு முழுவதும் கலவரங்கள் வெடித்தன. இந்துக்களிடமிருந்து தாழ்த்தப்பட்ட மக்களை விடுவிக்கும் சட்ட ரீதியாக அம்பேத்கர் எடுத்த முயற்சிக்குக் காந்தி முட்டுக்கட்டை போட்டார் என்பது அனைவரும் அறிந்ததே! இந்துமதத்தின் அங்கம் தான் தாழ்த்தப்பட் டோர் எனவே அவர்களை இந்துமதத்தினின்று பிரிப்பதை ஒப்புக் கொள்ள முடியாது என்றார்! இந்த நிகழ்வால் காந்தி ஒரு முழுமையான இந்துத்துவவாதி என்பதைச் சொல்லிப் புரியத் தேவையில்லை அல்லவா?

அதேபோல இந்திய—-பாகிஸ்தான் பிரிவினையின் போது காந்தியார் நடந்தவிதம் அனைவரையும் ஈர்த்த விதமாகக் கருதப்படுகிறது! மதங்கள் வலியுறுத்தும் மனிதத்தை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார்! மண்ணும், மக்களும் பிரிந்துபோக விரும்ப வில்லை ஆனால் எதார்த்தத்தை ஏற்றிடத் தானே வேண்டும். சுதந்திர பிரகடனம் அறிவிக்கும் நிலையில் “இந்து தேசம் இந்துக்களுக்கே” என்ற மனப்பாங்கு கொண்ட பிறதலைவர்களின் ஆட்சியின் கீழ் ஏகோபித்த சிறுபான்மை முஸ்லீம் இனம் எந்த ஒரு உரிமையையோ, அதிகாரத்தையோ பெறமுடியாது என்பதை ஜின்னா அவர்கள் உணர்ந்திருந்தார்! ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா பெறப்போகும் சுதந்திரத்தால் முஸ்லீம் இமைக்களுக்கு எவ்விதத்திலும் பலன் கிடைக்காது. மீண்டும் ஒரு அடிமைத்தனத்திற்கே

அது வழி வகுக்கும் என்பதால் ஜின்னா உறுதியாக தனித்தேச கோரிக்கையை வலியுறுத்தினார். பதினான்கு முறை காந்தி-ஜின்னா பேச்சுவார்த்தை நடந்தபோதும் காந்தியார் நினைத்தது நடக்கவில்லை. எல்லைப் பிரிவினை ஏற்படுத்தப்போகும் பயங்கர விளைவுகளைக் காந்தியால் கணிக்கமுடிந்திருந்தது. அவரின் பேச்சை காதில் வாங்கிட இந்துக்களும்-முஸ்லீம்களும் தயாராக இல்லை. ஆனால் அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் அப்போது காந்தியாரிடம் இல்லை! அதுவரை தேசத்திற்காக அரசியல் வாதியாக, ஆளுமையாக இருந்தவர் தேசத் தந்தையாக மாறினார். மண்ணை நேசித்தார்! மதத்தை நேசித்தார்! மதம் போதித்த அன்பை நேசித்தார்! ஆதலால் ஜின்னாவே பிரதமராக அறிவிக்கும் படியும், அவர் விரும்பும் ஆட்களை அமைச்சரவையில் சேர்த்துக்

கொள்ளலாம் எனவும் மவுண்ட்பேட்டனிடம் கேட்டுக் கொண்டார். காந்தியாரின் இந்தக் கோரிக்கைக்கும் ஜின்னா இணங்கவில்லை! தனி தேசத்தையே விரும்பினார்! காந்தியாரின் தனிப்பட்ட இக்கருத்து காங்கிரஸ்காரர்களுக்கும்... காலனிய ஆதிக்க இந்திய மக்களுக்கும் சுத்தமாக பிடிக்கவில்லை. "வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை" என்று காந்தியாரின் பேச்சால் மக்கள் கோபமடைந்தார். எலிவளையானாலும் தனிவளை வேண்டும் என்பது ஜின்னா கருத்து. இறுதியாக வேறுவழியின்றி காந்தி அவர்களும் பாகிஸ்தான் தனித்தேசம் உருவாக ஒப்புதல் கடிதம் கொடுத்தார். ஜீன் 2ந் தேதி பிரிவினை திட்டத்தை மவுண்ட் பேட்டன் இந்தியத் தலைவர்களிடம் முன்வைத்தார். அடுத்த நாள் நேரு, ஜின்னா மற்றும் சீக்கிய சமுதாய பிரதிநிதி பல்தேவ் சிங் ஆகியோர் ஆல் இந்திய ரேடியோவில்

பிரிவினைத் திட்டம் பற்றி நாட்டு மக்களிடம் எடுத்துரைத்தனர். இந்திய-பாகிஸ்தான் பிரச்சனை இந்திய வரலாற்றில் கறுப்புப் பக்கமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒன்றேகால் கோடிமக்கள் சொத்து, வசிப்பிடத்தை இழந்தனர். வன்முறையில் 5 முதல் 10 லட்சம் மக்கள் வன்முறைகளில் இறந்திருக்கலாம் என்று பதிவும் உள்ளது. எல்லைப்பிரிவினையிலும், தேசப்பிரிவினையிலும் வடமாநிலங்களான பஞ்சாப், வங்கம், கல்கத்தா மாநிலங்களே அதிக பாதிப்புக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வன் முறைக்கு ஆளான துயரச்சம்பவங்களும் நடந்தேறின. இதை எல்லாம் முன்பே கணித்ததால் காந்தியின் இரும்பு இதயம் சுக்குநூறாக நொறுங்கியது. இறுதியாக பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைக்

குடித்து 1947ஆகஸ்டு 14-ம்தேதி நள்ளிரவில் பாகிஸ்தான் உதயமானது.

# 7. இரு மகாத்மாக்கள்

இன்று மகாத்மா என்றாலே காந்தி மட்டும் தான் நினைவுக்கு வருவார். ஆனால் காந்தியாருக்கு முன்பே மகாத்மா என்று மக்களால் புகழப்பட்டவர் ஜோதிராவ் புலே அவர்கள் [1827 -1890] பிராமணரல்லா சமூகத்தில் பிறந்தவர். இந்து சனாதனவாதிகளால் கல்வி உரிமை பறிக்கப்பட்டது. ஆனாலும் கல்வி கற்றே ஆக வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார். பூனாவில் இயங்கி வந்த ஸ்காட்லாந்து மிஷனரி அவரின் நம்பிக்கைக்குக் கைகொடுக்கும் விதமாக கல்வி பயிலும் வாய்ப்பளித்தது. தன் பதினான்காம் வயதில் கல்வி பயின்றார். சாவித்திரிபாய் புலேவை தன் இணையாக்கி கொண்டார். உயர் சாதியினரால் பல

சமயங்களில் அவமானப்படுத்தப்பட்டதால் அவரின் ஆழ்மனதில் கல்வி மட்டுந்தான் நம்மை அடிமைத்தனைத்திலிருந்து வெளிக்கொணர கூடிய பேராயுதம் என்பதை புரிந்து கொண்டார். இந்தியாவில் முதன்முதலாக 1848-ம் ஆண்டு புத்தர்வடே எனும் இடத்தில் பட்டியலினப் பெண்களுக்கான பள்ளியை துவக்கினார்!

மாற்று சமூகத்தினர் யாரும் கல்வி கற்றுக் கொடுக்க முன்வராத சூழலில் சாவித்திரிபாய் பூலே படிப்பின் அவசியத்தையும், கற்பித்தலில் பயனையும் எடுத்துரைத்து ஆசிரியையாக தயார்படுத்தினார். பெண்களை சக உயிராக நினைத்துக் கூட பார்க்காத காலகட்டத்தில் தன் மனைவியைப் படிக்க வைத்து அந்தப் படிப்பினையால் ஆசிரியையாய் உயர்த்தியும்... நெருக்கடிகள் மனைவிக்கு நேரும் போதெல்லாம் அவர் துவண்டிடாமல் இருக்க அறிவுரைகளையும்...

சமூகப் பொறுப்பையும் உணர்த்திய ஜோதிராவ் பூலே மனிதருள் மாணிக்கம் தானே!

அக்காலத்தில் பெண்கள் வெளியே வருவதை ஏற்றுக் கொள்ளாத சூழலில் இதுபோன்ற சமூக அக்கறையோடு இவர்கள் செயல்படுவதை சனாதனவாதிகள் தடுக்காமல் இருப்பார்களா? திருமதி சாவித்திரிபாய் புலே பள்ளிக்கு செல்லும் வழியெல்லாம் சாணம், அழுகிய காய்கறிகள், முட்டை, கழிவுநீர் இவற்றைக் கொண்டு அத்தெய்வத்திற்கு அபிஷேகமெல்லாம் செய்வித்திருக்கிறார்கள். இந்த நிகழ்வைச் சொல்லி வருத்தப்படும் போது ஜோதிராவ் புலே அவர்கள் பள்ளிக்குச் செல்லும்போது மாற்றுத் துணியையும் எடுத்துப் போ... என்று மாற்று யோசனையும் கூறியுள்ளார். எதற்கும் சளைக்காமல் புலே தம்பதியர் 1851-ம் ஆண்டு ராஸ்தாபேத் எனும் இடத்திலும்,

1852-ம் ஆண்டு விதல்வேத் என்ற இடத்திலும் பெண்களுக்கான கல்விப் பணியை தொடர்ந்தனர். மிகப்பெரிய சமூக புரட்சிக்கான விதையைத் தூவினர். 1873-ம் ஆண்டு ஜோதிராவ் புலேவால் எழுதப்பட்ட “அடிமைத்தனம்” என்ற நூல் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையில் பெரும் வரவேற்பு பெற்றது. சமூகத்தாகம் உடையவர்களால் உறங்கும் நேரம் கூட வீண் என்று நினைப்பார்கள் ஓடிக் கொண்டும், தேடிக் கொண்டும் இருப்பார்கள் அந்தத் தேடலின் வெளிப்பாடாக 1852-ம் ஆண்டு “மகிளா சேவா மண்டல்” ஏற்படுத்தினார். அந்த அமைப்பில் பெண்களுக்கான உரிமை அடையவும், கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த மிகப்பெரிய பெண்கள் கூட்டம் நடைபெற்றது. கணவன் இறந்த பிறகு மனைவியின் தலைமுடியை மழிக்கக் கூடாது என்பது போன்ற புரட்சிகரமான

சிந்தனைகளை மக்களுக்குள் விதைத்தனர்! சாதியைப் பாதுகாக்கும், மனிதனைச் சக மனிதனாய்ப் பார்க்காத மதத்தை எதிர்த்து மக்களுக்காகக் குரல் கொடுத்தார். விவசாயத்தின் முக்கியத்து வத்தையும் இந்தியாவில் நிலவிய பிரிட்டிஸ் ஏகாதிபத்திய அரசு இந்திய வளங்களைச் சுரண்டுவதற்குத் துணை நின்ற மேல்தட்டு மக்களை எதிர்த்தும் முதல் கண்டனக் குரல் கொடுத்தவர் இவரே! 1873-ல் சத்ய சோதக் சமாஜ் என்ற அமைப்பைத் துவக்கினார். சமத்துவம், சமூகநீதி, அனைவருக்கும் கல்வி, சிறப்பு இட ஒதுக்கீடுகளுக்காக இந்த அமைப்பு போராடியது. இரட்டைக் குவளை முறை இருந்த காலத்தில் தன்னுடைய நிலத்தில் கிணறு வெட்டி பட்டியலின மக்களுக்குத் தடையின்றி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்தார். தன் வாழ்நாள் முழுவதும் பெண்களின் உரிமைக்காகவும்,

பெண்களின் கல்விக்காகவும் மேல் சாதியினரின் எதிர்ப்புகளையும் தடைகளையும் மீறி சமூகப் புரட்சி செய்த செய்யச் செய்த ஜோதிராவ் புலே அவர்களைப் பாராட்டி 1888-ம் ஆண்டு புனேவில் நடந்த பொதுக் கூட்டத்தில் “மகாத்மா” என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். உலகமே ஏற்றுக்கொண்ட உன்னதத் தலைவர் புரட்சியாளர் அம்பேத்கர் முன்னோடியாய் நினைத்ததும் இவரைத்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்!

தேசம் என்பது வெறும் எல்லைகளை மட்டும் உள்ளடக்கியது அல்ல... அங்குள்ள மக்களையும் சேர்த்தே குறிக்கும்! இரண்டையும் பிரித்துப் பார்ப்பது சரியாகாது. எந்தளவு மண் விடுதலை முக்கியமோ அதைக் காட்டிலும் மக்களின் உரிமையும் சுதந்திரமும் முக்கியமே! பாதுகாப்பற்ற சமூகச் சூழலுல் கேட்பாரற்று கிடக்கும் மக்களின்

உரிமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தனி ஒருவராய் நின்று போராடியவரும் “மகாத்மா” தான்.

சொந்த நாட்டை அந்நியன் ஆளுகையில் அவர்களிடமே நட்பு பாராட்டி ஆங்கிலேயரின் பாதுகாப்பு வளையத்திற்குள்ளிருந்து மண் விடுதலைக்காக உழைத்தவரும் “மகாத்மா” தான்!

இரு மகாத்மாக்களில் யாரின் பணி உயர்ந்தது? தாழ்ந்தது? என்ற தரவிற்காக இதைக் குறிப்பிடவில்லை. அதே வேளையில் “மகாத்மா” என்ற புகழ்மொழிக்கும், அடைமொழிக்கும் அடையாளமாக இந்தியாவில் இருவர் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நினைவுறுத்தவே பதிவு செய்கிறோம்.

# 8. காந்தி கண்ட கனவும், பலனும்

இந்திய சுயராஜ்யத்தில் காந்தியின் சிந்தனைகள் தனிமனித விருப்பத்தை, கனவை நாட்டு மக்களுக்குச் சொல்லுவதாக அமைந்துள்ளது. மேலைநாட்டு நாகரீகம் இந்திய நாகரீகத்திற்கு ஈடாகாது என்று நம்புகிறார். எண்ணங்களில் நம்பிக்கை வைக்கும் பொழுது அது செயலில் உறுதியாக வெளிப்படுகிறது. நாகரீகம் மனதளவில் முதிர்ச்சி பெறுவது. கல்வி பகுத்தறிவையும், பொருளாதாரத்தையும் நோக்கி பயணிப்பது. நன்கு கற்றறிந்த காந்தியின் எண்ணங்கள் வானளாவிப் பறந்தாலும் அவரின் செயல்கள் இந்திய எல்லைக்குள் மட்டுமே வேரூன்றி உள்ளது. இயற்கையோடி ணைந்த

வாழ்வியலில் ஆனந்தமடையலாம் என்பது அவரின் எண்ணம். விஞ்ஞான வளர்ச்சியிலும், தொழில் நுட்ப வளர்ச்சியிலும் பெரிதாக மானுடம் தழைக்காது என்கிறார். சமயக்கல்விக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்கிறார். மதக்கல்வி என்பது நன்னெறியைப் போதிக்குமென்பதும் ஓரளவு உண்மை யென்றாலும் அதன் பின்னணியில் வர்ணாசிரமும் போதனையாகும் அல்லவா? அந்நிய

முறையான மெக்காலே கல்வியை எதிர்த்தாலும் அதில் உள்ள சமத்துவத்தையும், அறிவியல் கண்ணோட்டத்தையும் ஈடுகொடுக்கும் பாடத்திட்டங்களையும் மறுக்க முடியாதல்லவா!

மதங்களாலும், மனதாலும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று மகாத்மா நினைத்ததில் தவறில்லை ஆனால் அடிப்படை

வர்ணாசிரமத்தை அது பாதுகாப்பதாகத் தானே இருக்கிறது!

குலக்கல்வி முறையில் செய்கின்ற விதவிதமான தொழில்களும், தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் என்று காந்தி நினைத்திருந்தால் அவரின் நினைவு தவறானதே! குலத்தொழில்கள் அழியாது தொன்றுதொட்டு வளரலாம் ஆனால் மேல்வகுப்பினர் மேலானவர்களாக இருப்பது போல் கீழ்வகுப்பினர் கீழ்நிலையிலேயே இருக்க நேரிடும் காந்தியாரின் அக்கறை தொழில் மீதா? தொழில் செய்யும் மக்களின் சமூக நிலைபாட்டின் மீதா?

மெக்காலே கல்வி முறையால் பல தொழில்கள் இல்லாது போயின என்பதையும் ஏற்றிடத்தானே வேண்டும். வாரிசுத் தொழில்களும் இன்று

மிகக்குறைந்த அளவில் தான் நாம் காண நேரிடுகிறது என்பதை மறுக்க முடியாது.

ஊசி இடம் கொடுக்காமல் நூல்நுழைய முடியாது என்ற பழமொழிக்கேற்ப இந்தியர்களில் பல ஜமீன்களும், குறுநில மன்னர்களும் தங்களுக்கு ஆதாயம் வேண்டி ஆங்கிலேயருக்கு ஆரத்தி எடுத்தனர் என்பது உண்மைதான்.

“இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ், போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து” இவையெல்லாம் தனிமனித நலனுக்குச் சரிவரும் ஆனால் வளர்ச்சியை நோக்கி நடைபோடும் நாட்டிற்கு இந்தக் கருத்துக்கள் ஒருதுளியும் உதவாது. ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது போர்தொடுக்கும் சூழல் ஏற்பட்டால் அதைத் தடுத்து நிறுத்துவதற்காவது அந்நாட்டிற்கு ஆயுதங்களும், ஆயுதப்பயிற்சி பெற்ற ராணுவவீரர்களும்

வேண்டுமல்லவா?

ஞானிகள், சித்தர்கள், முனிவர்களின் நாடாக இருந்திருந்தால் காந்தியாரின் சிந்தனைகள் வெற்றி கண்டிருக்க கூடும். ஆனால் இது சாமான்ய மனிதர்களைக் கொண்ட தேசமல்லவா? எளிய சிந்தனை, குறிக்கோள் இன்றி வாழும் நாடோடிகளாய் மக்கள் இருக்க முடியாதே!

வட்டாரமொழி, மதம் சார்ந்த மொழி, இந்தி தேசியமொழியாக வேண்டும் என்று விரும்புகிறார்! ஆங்கிலம் படிக்க அவசியமில்லை என்கிறார். இன்றைய மும்மொழிக் கொள்கையை அன்றே வகுத்திட்டார் போலும்!

பழைய போக்குவரத்து சாதனங்கள், ராட்டையில் நெய்த ஆடை விவசாயம் இவற்றை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார். வக்கீல்கள், வைத்தியர்கள்

அவசியமில்லை என்கிறார்! உண்ணும் முறை அறிந்தால் வைத்தியரும் தேவையில்லை. குற்றமின்றி வாழப்பழகினால் வக்கீல்களும் தேவையில்லை என்பதே அவர்கருத்து. அது எப்போது சாத்தியமாகுமென்றால் பரஸ்பர சகோதரத்துவமும், இயற்கையும், நாமும் ஒன்றிணைந்தவர்கள் என்ற புரிதல் வரும்போது? ஆனால் திரு காந்தியாரின் காலத்திலேயே அவைகள் அபூர்வமாக இருந்த போது - இக்காலத்தில் எடுபடுமா?

காந்தியின் சுயராஜ்யம் என்பது வெறும் அரசாட்சி மாற்றமில்லை மனசாட்சி மாற்றம். பற்றற்ற துறவியால் தாமரை இலை நீராய் வாழ்வை வாழ வேண்டும் என்பது எல்லோராலும் முடியாத ஒன்று. அந்தக் கனவு அவர் இருந்தபோதும், மறைந்த பிறகும் நிராசை ஆனதே நிதர்சனம்.

ஒரு பரந்துபட்ட தேசத்தின் தலைவராக இருப்பவரின் சிந்தனைகள் எதிர்காலத்தை அனுமானித்து அதற்கேற்றபடி அமைத்து கொடுப்பது அவசியம் அல்லவா? காந்தியாருக்கு அறிவியல் மீது நம்பிக்கை இல்லாவிட்டாலும் நாடு வளர்ச்சி பெற அறிவியல் விஞ்ஞான வளர்ச்சி முக்கியம் என்று உணரவில்லை.

புரட்சி என்பது அவருக்கு தீவிரவாதமாக தோன்றினாலும் புதுமை கருத்துக்கள் கூட அவரால் சொல்லப்பட வில்லை என்பது ஏமாற்றமே!

பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருட்டானதாக உணருவது போலத் தான் இருக்கிறது. எளிமையை உடலில் காட்டுவது சித்தர்களின் கலை மக்களுக்கு இயன்றதை செய்வது சகமனிதனின் செயல். அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை முன்னேற்றுவது அரசியல்

வாதிகளின் கடமை நம் காந்தி சித்தரா? அரசியல்வாதியா?

காந்தியின் குணநலன்கள் பிறரால் பாராட்டப் பெறுபவையே நேரந்தவறாமை, தன்னுடைய வேலையை தானே செய்தல், நோய் கண்டோருக்கு பணிவிடை செய்வது, சொகுசு வாழ்க்கை வாழாமை, தேவையானவற்றைத் தவிர பிறவற்றின் மீது ஆர்வம் கொள்ளாமை இவை எல்லாம் அவரின் விரும்பத்தக்க குணாதிசயங்கள்! காந்தியின் அரசியல் வாழ்வில் முதல்பாதி தேசஎல்லைக்கும், மண்ணின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்தார். மறுபாதி இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட கலவரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர் பறிபோன நிலையிலும், முஸ்லீம் மக்களின் கோரிக்கையின் விளைவாக மலர்ந்த பாகிஸ்தானுக்காகவும்

குரல் கொடுத்தார்! நவகாளி கலவரத்தில், வன்முறையில் இருதரப்பான இந்து -முஸ்லீம் மக்களுக்காகவும் சார்ந்தே குரல் கொடுத்தார்! காந்தியின் ஆரம்பக்கால அரசியலில் இந்து மதத்தின் மீது கொண்ட ஈர்ப்பும், பிடிப்பும் கடைசிவரை அவர் விட்டுக் கொடுக்கவில்லை! ஒரு உயர்குலத்தை, வைணவ சமயத்தை சார்ந்த இந்து மிகப்பெரிய தேசத்தின் ஓங்கு குரலாக வளர்ந்து வருகையில் இந்து வெறியர்கள் காந்தியை வளர்க்கத் தவறவில்லை! உயர்சாதி இந்துக்களின் எதிர்கால நலனுக்காக ஆங்கிலேயரை பாதுகாப்பு வளையத்துக்குள்ளே வைத்து பாதுகாத்த காந்தியை இந்துக்கள் பாதுகாத்தனர். காந்தி இந்து மதத்தைப் பாதுகாத்தார்! இந்து மதத்தினர் காந்தியைப் பாதுகாத்தனர் என்றும் சொல்லலாம்! அஹிம்சை என்ற போர்வைக்குள் பிரித்தானியரை இந்திய

தீவிர தேசியவாதிகளிடம் காந்தி பாதுகாத்தார்! மிகப்பெரிய நெருக்கடியை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு நேரவிடாததால் பிரித்தானிய அரசு காந்தியைப் பாதுகாத்தது! இப்படி எல்லாவகையிலும் காந்தியும் பாதுகாக்கப்பட்டார். ஆனால், Dr. அம்பேத்கர் இந்து மதத்திலிருக்கும் சாதிமுறை ஒழிக்கப்பாடுபட்டார்! காந்தியோ சாதிக் கட்டமைப்பு தேவையென்று பாடுபட்டார்! தீண்டாமையை மக்களின் மனதிலிருந்து தானாக மறைந்தாலொழிய தீண்டாமையை தீர்க்க முடியாதென்றார் காந்தி! இந்துக்களிடமிருந்து பிரிந்தால் மட்டுமே தாழ்த்தப்பட்டோருக்கான சமூக உரிமை பெற முடியும் என்பது Dr. அம்பேத்கரின் கருத்துமட்டுமல்ல சமதர்மத்தை விரும்பும் அத்தனை முற்போக்குவாதிகளின் கருத்தும் அதுவே!

இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக்கான

முயற்சிகள் நடந்து கொண்டிருந்தபோது “என் சடலத்தின் மீது தான் தேசப்பிரிவினை நிகழும் என்று உணர்ச்சி மேலோங்கக் காந்தி கூறினார்”! ஆனால் முகமது அலி ஜின்னாவோ அதனைக் காதில் வாங்கிட வில்லை! தேச விடுதலைக்கு முன் முஸ்லீம் மக்களைச் சாதி இந்துக்களிடமிருந்து பிரித்து முஸ்லீம்களுக்கான தனித் தேசக் கோரிக்கையே முக்கியமாக கருதினார்! ஜின்னா அவர்கள் காந்தியை மதித்தார்! ஆனால் தன் கொள்கையிலும் பிடிவாதமாக இருந்தார் வெற்றியும் கொண்டார்! Dr. அம்பேத்கரோ ஆண்டாண்டு காலமாக அலைக்கழிப்புக்குள்ளான மாபெரும் மக்களின் நலனுக்காக, உரிமைக்காகத் தாழ்த்தப்பட்டோரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தனியொருவராய்க் களம் கண்டார். டாக்டர் அவர்களும் வன்முறையை தம் மக்களுக்கு அடையாளங் காட்டவில்லை! கற்பி,

ஒன்றுசேர், புரட்சிசெய் என்ற விழிப்புணர்வையே ஊட்டினார்! பிரித்தானிய அரசிடம் பெறவிருந்த அந்த அரசியல் விடுதலைக்கு முட்டுக் கட்டையாகக் காந்தி இருந்தபோது ஜின்னா அவர்களைப் போல் காந்தியாரை கண்டுங் காணாமல் போகவில்லை! காந்தி என்ற மனிதன் இந்தியாவிற்குத் தேவையானவர் என்ற எண்ணத்தாலே கனிந்து பெறக் கூடிய வேளையில் உரிமைகளைப் பறிகொடுத்தார்! இத்தகைய தேசப் பற்றாளரைத் தான் அறிவாளிகள் சாதியத் தலைவர் என்கிறார்கள்! இவரின் தேசப்பற்றுக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக் காட்டு வேறெதுவிமில்லை. வன்மத்தில் வாழ்வோருக்கு இது புரிவதில்லை! தேச வரலாறு அறிந்தோருக்கு இது புதிதான செய்தியுமல்ல. ஒருங்கிணைந்த காலனி இந்தியாவாக இருந்த வரையில் காந்திக்கு நெருக்கடி ஏற்படவில்லை.

தேசப்பிரிவினை, எல்லைப்பிரிவினை என்ற பிரச்சனை பூதாகாரமாக எழுந்தபின் காந்தியாரின் அஹிம்சை வாதங்கள் எடுபடவில்லை! “போற்றுவார் போற்றடட்டும் தூற்றுவார் தூற்றடட்டும்” என்ற மனநிலையில் காந்தி இஸ்லாமிய மக்களின் நலனுக்காகவும், புதிய தேசமாக உருவெடுத்த பாகிஸ்தானுக்கு இந்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையான 55 கோடியை கொடுக்க வலியுறுத்தினார்! உண்ணாவிரதமும் இருந்தார். இது இந்து மகா சபை இயக்கத்தில் இயங்கியோருக்கு பெரும் அதிருப்தியை தந்தது. தேசம் பிளவுபடுவதைத் தான் ஒருபோதும் விரும்பவில்லை வேண்டுமானால் திரு. ஜின்னா அவர்களே பிரதமராகப் பொறுப்பேற்கச் சம்மதம் தெரிவித்தார். இதுவும் நேருவோ, படேலோ எதிபார்க்காத ஒன்று. ஆனால்

இருவரும் காந்தியிடம் தங்களின் கருத்து சரியில்லை! பாகிஸ்தான் எனும் நாடு உருவாவது தவிர்க்க முடியாத ஒன்று! இருபெரும் மதத்தினைச் சார்ந்தவர்கள் ஒருகுடையின் கீழ் கோலோச்ச முடியாது என்று கண்டனம் தெரிவித்தனர். காந்தி ஜனவரி 20 1942 பாகிஸ்தான் கோரிக்கையை பற்றி பேசுகையில் வரி, சுகாதாரம், காவல், நீதி மற்றும் பொதுப் பயன்பாட்டு அம்சங்களைப் பயன்படுத்துவதில் இந்துவிற்கும் - முஸ்லீம்களுக்கும் இடையே என்ன முரண்பாடு ஏற்பட்டு விடப் போகிறது? மதரீதியான நம்பிக்கைகளில் மட்டுமே வேறுபாடு ஏற்படும். ஒரு மதச்சார்பற்ற அரசில் இவை கவலைப்பட வேண்டிய அம்சமாக இருக்காது. அவரவரின் நம்பிக்கையைப் பின்பற்றலாம் என்றார்.

நான் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால் மதமும் அரசும் பிரிந்தே இருக்கும் என்று

தன் மதத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறார்! அரசு எந்த மதத்தின் செயல்பாடுகளிலும் அது தலையிடாது என்று SEP 1946 - கிறிஸ்தவ பிரிவினரியிடம் பேசிய போது குறிப்பிட்டார். மதச்சார்பற்ற நாடாகத் திகழ்வது தான் சிறப்பு என்றும் அதற்காக என் உயிரையும் கொடுப்பேன் என்கிறார். மதக்கல்வியையோ, மதக்கோவில்களுக்காகவோ அரசாங்கப் பணத்தை செலவழிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்! முஸ்லீம் இனமக்களுக்கான தனித்தேசமும், தலைவரும், தலைமையும் அவசியமானது என்று காந்தியின் கோரிக்கையை ஏற்க வில்லை.

NOV 15 1947 – ல் காங்கிரஸ் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் அகதிகளின் மறுவாழ்வு சார்ந்து எண்ணற்ற தீர்மானம் நிறைவேற்றியது. எல்லாக்

குலமக்களும் சமஉரிமைகளை அனுபவிக்கிற ஒரு மதசார்பற்ற ஜனநாயக அரசை அமைப்பதே காங்கிரஸ் நோக்கம் என்பதைக் காந்தி வரவேற்றார். குருநானக்கின் பிறந்தநாளன்று பேசுகையில் நவம்பர் 28 1947 அரசுப் பணத்தைக் கொண்டு சோமநாதர் ஆலயத்தைப் புணரமைப்பதைக் கடுமையாக எதிர்த்தார்.

1947 ஆகஸ்டு 15ல் சுதந்திர இந்தியாவில் “விதியோடு ஒரு சந்திப்பு” என்ற தலைப்பில் நேரு உரையாற்றினார். R.S.S காந்தி கல்கத்தா கலவரத்தில் இந்துக்களுக்குத் துணை நில்லாமல் முஸ்லீம் மக்களுக்கு ஆதரவளிக்கிறார் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர். இந்தியாவின் முகமாக இருந்த காந்திக்குச் சறுக்கல் வர துவங்கியது எந்த தீவிர இந்து வெறியர்களால் தூக்கிப் பிடிக்கப் பட்டாரோ அதே மதவெறியர்களால் தூப்பாக்கிக் குண்டிற்கு

இரையானார் என்பது கசப்பான உண்மை!

# 9. காந்தியாரும் - Dr. அம்பேத்கரும்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் முகமது அலி ஜின்னாவும் இந்தியாவின் இரு துருவங்களென்று கருதப்படும் காந்தியும், அம்பேத்கரும் கலந்து கொண்டார்கள். அம்பேத்கர் அவர்கள் இந்து மதத்தினரிடமிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமூக, மற்றும் அரசியல் உரிமைக்காக குரல் கொடுத்தார். காந்தியார் இந்திய மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். லண்டனில் நடைபெற்ற முதல் மாநாட்டில் காந்தியார் கலந்திடவில்லை. ஆனால் இரண்டாம் மாநாட்டில் காங்கிரஸ் சார்பில் காந்தியே கலந்து கொண்டார். காரணம்

அம்பேத்கரின் நியாயமான கோரிக்கையை ராம்சே மாக்டோனால்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளும் சூழல் உருவானால் அதை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்காகத் தான். முஸ்லீம் சிறுபான்மையினரின் குரலாக முகமதுஅலி ஜின்னா கலந்து கொண்டார். முதல் வட்டமேசை மாநாட்டில் முஸ்லீம் சிறுபான்மையினரின் 14 அம்சகோரிக்கையைக்

காங்கிரஸ் நிராகரித்தது. இந்த மாநாட்டிலும் ஜின்னாவும் அம்பேத்கரும் பட்டியல் இமைக்களுக்காகத் “தனித்தொகுதி முறையை அமுல்படுத்து மாறு பிரதமர் ராம்சே மெக்டோனால்டு அவர்களிடம் அழுத்தம் கொடுத்தனர்.”தனித்தொகுதி” தாழ்த்தப்பட்ட மக்களே தாழ்த்தப்பட்ட வேட்பாளரை தேர்ந்தெடுப்பதாகும். அப்படித் தேர்ந்தேடுத்தால் தான் சட்ட சபையில் தாழ்த்தப்பட்டோரின்

பிரச்சனையை தீர்க்க முடியும் அதன் மூலமே ஆண்டாண்டு காலமாய் அடக்கி ஒடுக்கி வைத்த சாதி இந்துக்களிடமிருந்து விலகிட முடியும் என்று அம்பேத்கர் நம்பினார். இந்தியாவில் நிலவிடும் சாதிபிரச்சனைகள் மற்றும் சாதிய வன்கொடுமைகள் குறித்து சைமன் கமிஷனும் தங்களின் முடிவை அறிக்கையாகச் சமர்பித்தது. அதன் அடிப்படையில் 1932ம் ஆண்டு ஆகஸ்டு 17ம் தேதி ராம்சே மாக்டோனால்டு அவர்களும் முஸ்லீம், கிறிஸ்துவர், சீக்கியர் ஆகிய சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட இனத்திற்குமான தனித்தொகுதி முறைக்கு அங்கீகாரம் அளித்தார். இதை அறிந்த திரு. காந்தி அதிர்ச்சியானார். இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்கு முன் ஜின்னா அவர்களை சந்தித்து தங்களின் கோரிக்கைகளை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் டாக்டரின்

கோரிக்கைக்கு ஆதரவு தராதீர்கள் என்று ரகசியப் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் ஜின்னாவோ காந்தியின் யோசனையை நிராகரித்தார். தாழ்த்தப்பட்டோர்கள் மதம் மாறுவதை நான் எதிர்க்கவில்லை. அதேபோல் முஸ்லீம், கிறிஸ்தவர், சீக்கியர்களுக்கான தனிபிரதி நிதித்துவத்தையும் எதிர்க்கவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட வர்களுக்கான தனித்தொகுதி முறையை நான் என் உயிரை கொடுத்தாவது நிறுத்துவேன். ஏனெனில் அவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இந்துமதம் பிளவுபட நான் ஒருபோதும் அனுமதியேன். மேலும் தாழ்த்தப்பட்டவர்கள் பசுவைப் போன்றவர்கள் அவர்களுக்கு அரசியல் அதிகார ஆசை காட்டுவது பாவமாகும் என்றார். “தனித்தொகுதி” அரசியல் உரிமை சட்டமாக்கப்பட்டால் சாதி இந்துக்களின் வன்மத்திற்கு இவர்கள் ஆளாக நேரிடும். இதனால்

பலவிதத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை கவலைக்குரியதாகும் என்றும் உணர்ச்சி பொங்க மாநாட்டில் எதிர்த்தார். 13திரு. காந்தியின் தாய்மை பொதிந்த பேச்சையும் மீறி “தனித்தொகுதி” முறை உடன்படிக்கை தயாரானது.

இந்த உடன்படிக்கையைக் கேள்வியுற்றதும் காந்தி அவர்கள் பூனாவில் உள்ள ஏர்வாடா சிறையில் உப்புத் தண்ணீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாய் அறிவித்தார்! இதனை நன்கு எதிர்பார்த்த அம்பேத்கரோ திரு.காந்தி அவர்கள் இதற்கு முன்பு “இந்தியாவில் நிலவும் பிரச்சனைகளை ஆராய்ந்தால் தாழ்த்தப்பட்டோரின் சமூக மற்றும் உரிமை பிரச்சனை என்பது ஒரு பொருட்டே அல்ல” என்றாரே அப்படி அலட்சியமாக பேசியவர் இன்று சாகும்வரை உண்ணாவிரதம் என்ற அரசியல் செப்படி வித்தையை

மேற்கொள்கிறாரே (1932 - செப் 20 - காந்தியின் உண்ணாவிரதம் தொடங்கியது இது தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவா? அல்லது இந்து மதத்தின் பலம் குறைந்துவிடக் கூடாதென்பதற்காகவா? என்று கடுமையாகச் சாடினார்.

உண்ணாவிரதத்தால் காந்தியின் உடல்நிலை மோசமானது. ஒட்டுமொத்த இந்திய சமஸ்தானமும் ஏன் உலகமும் அம்பேத்கரின் வாய்மொழிக்காக காத்திருந்தது. ஒரு மகாத்மா இல்லையென்றாலும் பல மகாத்மாக்கள் பிறப்பார்கள். ஆனால் கையில் கிடைத்த இந்த வாய்ப்பை தவறவிட்டால் என் சமூக மக்களுக்கு என்றுமே விடியல் கிடைக்காது. எனவே எந்த சமரசத்திற்கும் நான் தயாரில்லை என்று அறிக்கை விட்டார். என்னவாயினும் பரவாயில்லை நீங்கள் எந்த சமரசத்திற்கும் உடன்படாதீர்கள் என்று பெரியார் தந்தி கொடுத்தார். பஞ்சாப் மாநிலத்தில்

பிறந்த மங்குராம் அவர் ஒரு புரட்சியாளர் இந்திய விடுதலைக்காக அமெரிக்காவில் காடர் இயக்கத்தில் இணைந்தவர். ஆயுதம் கடத்தும் பணியில் பிடிபட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு எப்படியோ இந்தியாவிற்குத் தப்பி வந்தார். எஸ்.சி. மக்களுக்கான பள்ளியைத் திறந்தவர். செப் -20 முதல் Oct–17–1932 வரை 28 நாட்கள் எதிர் உண்ணாவிரதம் இருந்தவர். இந்துக்களுக்காக நீங்கள் சாகத்தாயார் என்றால் தலித் மக்களுக்காக நான் சாகத் தயார் என்றவர். இவரும் அம்பேத்கரின் கொள்கையில் உறுதியாக இருக்குமாறு வலியுறுத்தினார்.

உண்ணாவிரதத்தால் திரு. காந்தியின் உடல்நிலை மோசமானது. இந்திய தேசத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. கஸ்தூரிபாயும், அவரது மகனும், மாளவியாவும் அம்பேத்கர் அவர்களைச் சந்தித்தனர். திரு.

காந்தியின் உடல்நிலையைச் சொல்லி கவலை அடைந்தனர். உங்கள் கையில் தான் மகாத்மாவின் உயிர் உள்ளது என்று உருகினர். அம்பேத்கரோ இருதலைக் கொள்ளி எறும்பு போல செய்வதறியாது குழப்பமடைந்தார். அரும்பாடுபட்டு ஆங்கிலே யரிடம் தம்மக்களுக்காகப் பெற்ற அரசியல் உரிமையை தாரை வார்ப்பதா? தனியொருவரின் பிடிவாதத்திற்காக மீண்டும் துயரச் சேற்றில் மூழ்குவதா? மிகுந்த யோசனைக்குப் பின் ஒருவேளை காந்தியார் இதில் இறக்க நேரிட்டால் உயர்சாதி இந்துக்களின் வன்முறை வெறியாட்டங்களுக்குப் பலியாவது எளிய தாழ்த்தப்பட்ட மக்களே ஆவர் என்பதை உணர்ந்தார். பாவம் ஓரிடம் பழி வேறிடம் என்பதால் சில சமரசங்களை மேற்கொள்ள இணங்கினார். இல்லை இல்லை இணக்கத்திற்கு

உள்ளாக்கப்பட்டார் டாக்டர் என்பதே உண்மை!

காந்தியார் கிட்டத்தட்ட மிக மோசமான நிலையில் இருந்ததால் மாகாணச் சட்டமன்றத்தில் 148 தொகுதிகளும், மத்திய சட்டசபையில் பொதுத் தொகுதிகளில் 18 சதவீத இட ஒதுக்கீடும் S.C மக்களுக்கு பிரதிநிதித்துவமாக ஒதுக்கப்பட்டது.

அரசு பதவிகளில் தேவையான கல்வித் தகுதி இருப்பின் நியமிக்கலாம். ஒவ்வொரு மாகாணத்திலும் S.C. மக்களின் கல்வி வசதி மானியத் தொகை ஒதுக்கப்படும். இந்த விதிகளை திரு. காந்தியும் ஏற்றுக்கொண்டார். கனத்த இதயத்தோடு டாக்டர் அவர்கள் செப் - 24ஆம்-தேதி பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். காந்தியாரின் உயிர் காப்பாற்றப்பட்டது. காந்தியாரின் அஹிம்சை வழி என்பது இது தானோ? பிறரின் உணர்வுகளை மதிக்காமல்

அவர்களைக் கசக்கிப் பிழிந்து, நெருக்கடிக்கு உள்ளாக்கி அதில் தான் வெற்றி அடைவது தானா சாத்வீகப் போராட்டம்? இந்தக் கேள்வி இன்று மட்டுமல்ல என்றும் காந்தியாரின் சத்தியாக்கிரகம் சர்ச்சையாகவே தொடரும்!

பூனா ஒப்பந்தம் கையெழுத்தானதும் பெரியாரும், மங்டுராம் அவர்களும் காந்தி இறந்தால் என்ன? அம்பேத்கர் செய்தது மாபெரும் வரலாற்றுப்பிழை என்ற கண்டனக் குரலை எழுப்பினர். வட்டமேசை மாநாட்டுக்கு முன்பு வரை தாழ்த்தப்பட்ட மக்களின் மீது கவனம் செலுத்தாத காந்தியார் அவர்கள் அம்பேத்கரின் கருத்து மற்றும் உரிமை மோதல்களுக்குப் பிறகு காந்தியாரை அசைத்துப் பார்த்தது என்பது உண்மையே!

தென்னாப்பிரிக்காவில் இந்தியரின் உரிமையைப் பாதுகாக்கவும், தக்க வைக்கவும்

சட்டம் ஒன்றே வழி என்று அதனடிப்படையில் நின்று வாதம் செய்து வெற்றி ஈட்டித்தந்த காந்தியருக்கு ஒரு பரந்துபட்ட ஒருங்கிணைந்த தேசத்தின் உயிர்நாடியாகக் கருதப்பட்ட திரு. காந்தியார் அவர்கள் தானாக முன்வந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்காது போனாலும் தன் இனத்திற்காகக் குரல் கொடுத்த அதே சட்டவழியில் நின்று போராடிய டாக்டர் அவர்களின் கருத்துப் போராட்டத்திற்குக் கைகொடுக்காதது ஏனோ? தாய் - சேய் என்ற பாசஇழையை காந்தியார் மேற்கோள்காட்டினாலும் திரு.காந்தி அவர்களால் மட்டும் ஆதரிக்கப் பட்டால் மட்டும் போதுமா? அனைத்து பிள்ளைகளும் சவலைப் பிள்ளைகளின் மீது அக்கறை காட்ட வேண்டாமா? திரு. காந்தி தான் இந்தியாவின் முகமென்றால் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்திட அல்லவா பாடுபட்டிருக்க வேண்டும்? இல்லை

இந்துமதம் என்பது மாபெரும் கட்டமைப்பு அந்தக் கட்டமைப்பைப் பாதுகாப்பது மட்டுமே உயர்சாதி இந்துக்களின் கடமை என்று உணர்ந்திருந்தால் டாக்டர் அம்பேத்கரின் முடிவிற்குக் கொடி காட்டியிருக்கலாமே!

இந்து மதத்தில் சாதிகளையும், வர்ணாசிரம முறைகளையும் களைய முடியாது என்று அம்பேத்கர் அவர்களுக்கும் காந்தியார் அவர்களுக்கும் நன்கு தெரிந்தபோதும் காந்தி அவர்கள் அரவணைத்து செல்வேன் என்றது ஓரளவுக்குப் பலன் கிடைத்தாலும் பறக்கும் பட்டத்தின் நூல் இன்னும் உயர்சாதி கைகளுக்குள் தான் இருக்கிறது என்பது கசப்பான உண்மை! இந்து மதம் முட்டாள்களின் கூடாரம் என்று டாக்டர் அம்பேத்கர் அவர்களும், இந்து மதம் புனிதத்தின், மானுடத்தின் அறன் என்று காந்தியாரும் இருவரும் இறுதிவரை கருதினார்கள். இருவரின்

பாதைகள் வேறானபோதும் பயணம் என்னவோ ஒன்றுதான்! இருவருமே தேசத்தின் மிகப்பெரிய தவிர்க்கமுடியாத தலைவர்களாய் இருப்பதும் அனைவருக்கும் ஏற்றிட வேண்டியது கட்டாயமே!

பிரித்தானிய அரசின் ஆளுமையின் கீழ் ஏற்படவிருந்த சட்டத்திருத்தத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமையை உடன்படிக் கையை ஏற்க மனமில்லாதவர், தன்னுடைய முன்னிலையில் தனக்கான முக்கியத்துவத்தை நிலைநாட்டும் விதமாக அம்பேத்கர் முன்வைத்த பல்வேறு கோரிக்கைகளைப் பரிசிலித்து சில கோரிக்கைகளை ஏற்று பூனா ஒப்பந்தத்தை அரங்கேற்றினாரோ என எண்ணவும் தோன்றுகிறதல்லவா?

தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதன் பிறகு காந்தியாரால் என்ன

செய்ய முடிந்தது? தான் மட்டும் நேசிப்பதென்பது தனிப்பட்ட விருப்பம்! பண்பு! அது காந்தியாருக்கு இருந்தது என்றே வைத்துக்கொள்ளலாம் ஆனால் இந்தியாவின் ஆளுமையாக, நம்பிக்கையாகத் திகழும் மனிதர் முற்போக்கு வாதியாக இருந்து இந்து மக்களிடமுள்ள தீண்டாமை அறியாமையை அகற்றிட பாடுபட்டிருக்க வேண்டுமல்லவா? ஏன் செய்யவில்லை அப்படி உண்மையான நோக்கோடு காங்கிரஸ் செயல்பட்டிருக்குமேயானால் ஏன் அம்பேத்கர் அவர்கள் காந்தி இறக்கும் வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகக் காந்தியோடு போராட வேண்டியிருந்தது! 1938 அக்டோபர் 22, 23 தேதிகளில் அகமாதாபாத்தில் பிரேமா ஹாலில் (Dr.அம்பதே்கர் பேசியது)

# 10. காந்தி... புத்தரா ?

காந்தி புத்தரைப் போல் வாழ்ந்தவர் என்று காந்தியம் பேசுவோர் கூறுவதுண்டு! காந்தியின் வாழ்க்கை முறையும் புத்தரின் அணுகுமுறையும் வெவ்வேறானவை!

அரச குலத்தில் பிறந்து இளவரசனாக வாழ்ந்தாலும் புத்தருக்கு போர்க்குணம் பிடிக்கவில்லை. சாக்கிய குலத்திற்கும்... கோலியர் குலத்திற்கும் ஏற்பட்ட ரோகினி நதி நீர்ப் பிரச்சனையால் சாக்கிய குலத்தைச் சேர்ந்த சித்தார்த்தருக்குப் போர்தொடுக்கும் முடிவில் உடன்பாடில்லை! போரால் ஏற்படப்போவது ஒற்றுமையோ, வெற்றியோ அல்ல மாறாகப் பகைமையும் தோல்வியும் என்பதே அவரின் கருத்து! இந்தக் கருத்து மோதலாலும்

இயல்பாகவே மென்மையான குணம் கொண்டவருமான சித்தார்த்திற்கு நெருக்கடி ஏற்பட்டது அதன் விளைவாகவே சித்தார்த்தர் துறவம் மேற்கொண்டார்.

நோய்வாய்ப்பட்டோரையும், வறுமையில் உழல்பவரையும் இறந்த பிணத்தையும் கண்டு சித்தார்த்தர் துறவியானார் என்பதெல்லாம் அறிவிற்குப் பொருந்தாத கருத்து! இதையே பள்ளிப் பாடத்திலும் நாம் படித்துள்ளோம்! புத்தர் அரசியல் செய்யவில்லை ஆனால் புத்தர் பாடத்திலும் அரசியல் நுழைந்ததில் வியப்பில்லை!

புத்தர் வாழ்க்கையை உற்று நோக்கினால் அவரின் கருத்துக்கள் மதரீதியான சமூகக் கட்டமைப்போடு கூடிய தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தவில்லை! தனிமனிதன் நிம்மதியாக வாழ உண்மையாக இருக்க வேண்டும் இந்த

நிமிடம் மட்டுமே உன்னுடையது அந்த நிமிடத்தை முழுமையாக நேசித்து கடந்து போ! நீயே கடவுள்! நல்லதும்... கெட்டதும் உன்னுள் இருந்து வருபவையே! இல்லற வாழ்வில் மனைவிக்குக் - கணவனும், கணவனுக்கு - மனைவியும் நம்பிக்கையோடும், உரிமையோடும், உள்ளன்போடும் இருக்க வேண்டும்! எண்ணமே செயல்! செயலே வாழ்வு! சாதி - வர்ணங்களை கடுமையாக எதிர்த்தவர்! பகுத்தறிவு கொண்ட மனிதனுக்குச் சாதி, மதம் சாபக்கேடு என்றார்! கடவுள் பெயரால் செய்யப்பட்ட சாஸ்திர, சடங்குகள் அறிவீனத்தை மனிதனை பலம் குறைந்தவனாக்கிடும் செயலாக கருதினார்! சொர்க்கமும், நரகமும் நமது நடத்தையால் மட்டுமே கிடைப்பது இறந்தபிறகு மோட்சம் அடைவோம் என்பதையும் நரகம் செல்வோம் என்பதையும் அறவே மறுக்கிறார்! மானிடப்பிறப்பு

ஒரு முறைதான். கர்மா என்பதும் ஆன்மா என்பதும் கற்பனையே என்று வாதிட்டவர் கௌதம சித்தார்த்தர் புத்தராவதற்கு முன் உடலை எவ்வாறெல்லாம் வருத்திக் கொண்டார் என்பது புத்தரை படித்தவருக்குப் புரியும்! ஒரு சில கவளமே தின உணவாகவும், கனிகள், காய்கள், நீர் ஆகியவற்றையே உண்டு வாழ்ந்தார் என்பது அநேகருக்குத் தெரியும்! ஆனால் ஒருநாளைக்கு ஒருமுறை அல்லது இருநாட்களுக்கு ஒருமுறை விதமாய் ஏழு நாட்களுக்கு ஒருமுறை என்னும் அளவிலும் அல்லது தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை என்ற வகையிலும் கடுமையாக உணவுக்கட்டுப்பாட்டைப் பின்பற்றினார்! திரு. காந்தியாரின் உணவுமுறை ஏறத்தாழ ஒன்றாகத் தோன்றினாலும் உணவு காந்தியாரை தேடி வந்தது! எளிமை புத்தர் சென்று பெற்றுக்கொண்டார். காந்தியார் புத்தரைப் போல்

உடலை வருத்திக் கொள்ளவில்லை.

புத்தரின் ஆடை சணலாகவோ, சணலும் குப்பைக் குவியலில் இருந்து எடுக்கப்பட்ட கடினத்துணியும் கலந்த கந்தலாகவோ, மரவுரியாகவோ, புல்லாலோ, மரப்பட்டையாகவோ, விலங்கின் முடியால் போர்வையாய் நெய்யப்பட்டதாகவோ, ஆந்தை இறகுகளால் செய்யப் பட்டதாகவும் கருப்பு மாளின் முழுத்தோலாகவோ தான்

அவரின் ஆடை இருந்தது என்றால் ஆடையில் புரட்சி செய்தது யார்? காந்தியா? புத்தரா?

புத்தரின் சிந்தனையில் ஆண் - பெண் என்ற இருசாதியைத் தவிர வேறு சாதியில்லை. அதுபோலவே ஆணும், பெண்ணும் சரிசமமானவர்கள் என்பதை அழுத்தந்திருத்தமாய்ச் சொல்லியவர் ஆனால்

காந்தியாரின் சிந்தனை பிற்போக்குத்தனமாகவே இருந்தது. காந்தியார் பெண்ணின் மறுமணத்திற்கோ, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தோ பெரியஅளவில் குரல் கொடுக்கவில்லை! காந்தி மதத்தை நம்பினார்! மதம் சொல்லும் கடவுளை நம்பினார்!

சாதாரண மனிதனும் வாழ்வை புரிந்து கொள்ளும் விதமாக புத்தரின் போதனைகள் இருந்தது. அதுவே புத்தசமயம் வளரப் பெரிய காரணமானது! அசோக மன்னரும் புத்தசமயத்தை முன்னெடுத்து ஆட்சி புரிந்ததும் கண்கூடு ஆனால் பின்வந்த ஆரியப் பார்ப்பணர் களின் சூழ்ச்சியால் புத்தசமயம் வீழ்ச்சி அடைந்ததும் நாமறிந்ததே!

இன்றும் புத்தரின் சிலைகளே விநாயகராகவும், பெருமாளா கவும் திரிபுபடுத்தி கடவுள்களாகக் கொண்டாடப்படுகிறது என்ற குற்றச்சாட்டும்

எழுந்து கொண்டுதான் உள்ளது! அதே வேளையில் புத்தரின் கோட்பாடுகளும், சமத்துவம், சகோதரத்துவம் தேடும் மனிதர் களும் புத்தசமயத்தை மீட்சிபெறும் வேளைகளில் மிகத் தீவிரமாக செயலாற்றி வருகின்றனர் என்பது உண்மையே!

புத்தர் மறைந்து ஏறத்தாழ 2500 ஆண்டுகள் கடந்த பிறகும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்! புத்தர் ஒரு மகானாக அல்ல. ஒரு மதமாக அல்ல... ஒரு தலைவனாக அல்ல.... வாழ்வியல் நெறிகளை மனிதன் சகமனிதனுக்குச் சொல்லிய அறநெறி; ஆகவே தான் காலத்தால் அழியாமல் கற்பக விருட்சமாய்ப் புத்த சமயம் வளர்ந்து வருகிறது!

ஆனால் சுமார் 160 ஆண்டுக்கு முன்பாக வாழ்ந்து அரசியல் வாதியாகவும், இந்து மதத்தின் மீது ஆழமான நம்பிக்கையும், இந்து மதம் சொன்ன

சமூக மற்றும் சாதியக் கட்டமைப்புகளோடு கூடிய தனிமனித ஒழுக்கத்தைக் காந்தி வலியுறுத்தினார்.

ஆடையில் புரட்சி செய்தார் என்பதும், உணவில் எளிமை கண்டார் என்பதும், காந்தியாரை மகான் என்பதும் அரசியல் மற்றும் அன்றிருந்த சூழலில் (சுதந்திர காலகட்டம்) ஆதாயம் தேடுவோரால் திரு. காந்தியார் விளம்பரப்படுத்தப்பட்டாரே அன்றி வேறொன்றுமில்லை! ஆனாலும் அவரின் இந்திய - பாகிஸ்தான் சுதந்திர வரலாறு அவரை தவிர்த்து விட்டு பார்க்கவும் முடியாது.

காந்தி மதமென்ற பாதுகாப்பு வளையத்துக்குள்ளிருந்து சகோதரத்துவத்தை புரியவைக்க முயன்றார். ஆனால் புத்தர் மட்டுமே மதங்களை உடைத்துவிட்டு மனிதனாக வாழ்ந்தார்!

காந்தி தேசவரலாற்றில் இடம் பிடித்த மறக்க முடியாத மனிதரானார்! போதி தந்த புத்தரோ

மானுட வாழ்வியலை சொல்லித்தந்து மாபெரும் வரலாறானார்! உண்மை தானே! இது காந்தியாரை புத்தரோடு உயர்த்திப் பேசுவோருக்கான விளக்கம் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

**சத்தியம்:-** காந்தி அவர்கள் பொதுவான அனைவராலும் ஏற்கக்கூடிய வகையில் சத்தியத்தை உண்மையை கடைபிடிக்கவில்லை. சத்தியத்தை இருவகையாக கருதலாம். ஒன்று உலகப் பொதுவான சத்தியம் நியாயம். மற்றொன்று தனக்கான சத்தியம்! தான் மட்டும் கடை பிடிக்கும் சத்தியம் அவரவர்க்கு ஏற்றபடி அமைத்துக் கொள்வது. அந்த வகையில் காந்தி ஏற்றுக்கொண்ட சத்தியம் என்பது அவரின் மனநிலைக்கேற்ப வகுத்துக் கொண்டது.

**அஹிம்சை:-** பௌத்தமோ, ஜைனமோ

அஹிம்சை என்பதை உயிர்வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொதுவாக கருதும் மதங்கள். நமது வள்ளாலாரும் கூட வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றார்! பிற உயிர்கொல்லாமை மட்டுமல்ல… பிற உயிர்போகாமல் காப்பதும் கொல்லாமையே ஆகும் ! அஹிம்சையும் அதுவேயாகும். அஹிம்சை என்பது கருணை ! சுயநலம் சாராத பொதுநலம் வேண்டுதல்! காந்தியின் அஹிம்சை வழி அத்துணை உயர்வானதா? சுபாஷ்சந்திரபோஸ், பகத்சிங், M.C. ராஜா, ஏன் கோட்சே உட்பட பலர் ஆரம்பக் கால கட்டத்தில் காந்தியின் கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டு செயலாற்றியவர்கள் தான்! ஆனால் பின்னாளில் காந்தி கொள்கையோடு ஒத்துப் போகமுடியாமல் வெளியேறிவர்களும் இவர்களே! சுபாஷை பொறுத்தவரை ஒரு

உறைக்குள் இரு கத்திகள் இருக்கமுடியாது. காங்கிரஸில் காந்தியும் -சுபாசும் இணைந்து பணியாற்ற அவரவர் கொள்கைகள் தடையாய் இருந்தன. காந்திக்கோ சுபாஷை வெளியேற்ற வேண்டி உண்ணாவிரதமிருந்தார்! சுபாசுக்கு நெருக்கடி தந்தார்! தானாக வெளியேறினார்! இது அஹிம்சை முறையா? Dr. அம்பேத்கரின் மனஉறுதியைக் குலைத்தும், நெருக்கடியைக் கொடுத்தும் புனா ஒப்பந்தத்தை நிறைவேற்றிய முறையிலும் "அஹிம்சை" என்பதை எவ்வாறு பொருள் கொள்வது? இளஞ்சிங்கம் பகத்சிங்-கின் இறுதி நாட்களில் காந்தி நடந்து கொண்டவிதம் உலகறியும்! போர்க்குணம் வேண்டாம் குறைந்தது மனிதாபிமானமாவது இருந்திருக்கலாமல்லவா? இத்தகைய பொறுமையின் சின்னம் தான் அஹிம்சை என்பதா?

**உண்ணாவிரதம்:-** உலக வரலாற்றில்

“உண்ணாவிரதத்தை” ஆயுதமாக்கி அரசியலும், ஆன்மீகமும் செய்தவர் காந்தியார் என்பவரே! 17 முறை 139 நாட்கள் உண்ணாநிலைப் போராட்டம் இதில் 3 முறை 21 நாட்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தார். இந்தியாவில் முதன்முறையாக சூரத்நகர் அருகிலுள்ள பர்தோலி எனும் ஊரில் வல்லபாய் படேலுடன் இணைந்து நிலவரி நீக்ககோரி உண்ணாவிரதம் மேற்கொண்டார்! 1919 – ஏப்ரல் 14 முதல் 16 வரை வன்முறைக்கு எதிராக உண்ணாநிலைப் போராட்டம்! காந்தியாரின் உண்ணாநிலை நிகழ்வுகளை கீழே கொடுத்துள்ளோம். அதில் எத்தனை முறை ஆங்கிலேயரை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார்? தீண்டத்தகாத, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக எத்தனை முறை ஆதரவாக உண்ணாவிரதம் இருந்தார்? தேச விடுதலைப் போராட்டக்களத்தில் பிரித்தானியர்களால்

கொல்லப்பட்ட நம் மக்களுக்காக வருந்தி உண்ணாவிரதம் இருந்தாரா? அல்லது ஆங்கிலேயரை எதிர்த்து உப்புவரி, நிலவரிக்காக இருந்த உண்ணாவிரதத்தால் எத்தனை பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தது? இருவேறான சமூகங்கள், இருபெரும் சமூகங்கள் ஒரு குடையின் கீழ் இயங்க முடியாது எனத் தெரிந்தும் தேசப்பிரிவினையே எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தது அவரின் தாய்மை உணர்வென்றாலும் இறுதியில் வடமாநிலங்கள் மதக்கலவரங் களால் ரத்தபூமியானதே காந்தி கையறு நிலையாகத் தானே இருக்க முடிந்தது. நவகாளி வீதிகளில் வயோதிகப் பருவத்தில் வருத்தத்தோடும், கண்ணீரோடும் நடந்திடத்தானே முடிந்தது! தன் கைமீறிய செயலைக் கண்டு கட்டுப்படுத்த முடியாமல்... இயலாத நிலையில் தானே அவரால் இருந்திட முடிந்தது. அஹிம்சை

வாதம் வென்றதா?இருவேறு இனமக்களின் உரிமைக்காகப் போராடுவது மதக்கலவரங்களாய் மாறுகிறது! மண்ணின் உரிமைக்காக மண்ணின் மைந்தர்கள் போராடுவது நம்மை போன்றோர்க்கு விடுதலை வேள்வியாகத் தெரிகிறது! திரு.காந்தி அவர்களுக்கு அது வன்முறையாக, தீவிரவாதமாகத் தோன்றுகிறது.

காந்தியின் உண்ணாவிரதங்களுக்கு ஏன் ஆங்கில அரசு அனுமதித்ததெனில் அது முழுக்க முழுக்க அரசியல் உள்நோக்கம் வாய்ந்தது! காரணம் இது ஆங்கில அரசுக்குத் தலைவலியை உண்டு செய்யவில்லை: உள்நாட்டுப் பிரச்சனை, உள்நாட்டுக் கலவரங்கள் அது மண்ணுக்கான வன்முறையானாலும் சரி, மதக் கலவரங்களானாலும் சரி, அரசுக்கு அச்சுறுத்தல் நேராதவாறு திரு. காந்தியே உணர்ச்சி மேலோங்கும் மக்களின் உணர்வுகளை

(எரிகிற கொள்ளியை இழுத்துவிட்டால் கொதிக்கிற உலை தன்னாலே அடங்கிடும் என்பது போல்) அவ்வப்போது உண்ணாவிரதமிருந்து போராட்டம் தீவிரமடையா மல் தட்டியே வைத்திட்டார் என்பது புரிகிறதல்லவா? திரு. காந்தி அவர்களுக்கு உண்ணாவிரதம் என்பது உடலினை உறுதி செய்யவும், ஓய்வு கொடுக்கும் வழியாகும்! ஆனால் பெரும்பாலான மக்களுக்கு அய்யோ பாவம் வயதானவர் பசியும், பட்டினியுமாய் வைராக்கியமாய் இருக்கிறாரே என இரங்குவார்கள் வருந்துவார்கள்! அதனால் தான் அவரின் உண்ணாவிரத நிகழ்வுகள் பெரிதாக பேசப்படுகிறது. திரு. காந்தி உயிருடன் உள்ளபோதே இரவீந்திரநாதாகூர் “மகாத்மா” என்ற பட்டத்தை வழங்கினார்! (மகாத்மா என்றால் சிறந்த ஆத்மா உயர்வானவர் - மேலானதுறவி - இந்துமதத்தில் ஒரு பிராமண முனிவருக்கு

மரியாதை செலுத்தும் சொல்) இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது காந்தியாருக்கு ஏற்பட்ட மன உளைச்சல், வேதனையின் வெளிப்பாடு எல்லோரும் அறிந்ததே! அது ஒரு பக்குவப்பட்ட ஆத்மாவின் செயல் என்று ஏற்றுக் கொண்டாலும், வர்ணாசிரமம் மற்றும் ஏற்றத்தாழ்வு கொண்ட கட்டமைப்பில் ஆண்டாண்டு காலம் வாழும் தாழ்த்தப்பட்டோரின் நிலையை உயர்த்துவதற்காக மகாத்மா ஏதும் செய்தாரா? தாழ்த்தப்பட்டோரின் நிலைக்கு வருந்தினார். இந்துமதக் கட்டமைப்பு சரியானது அதுதான் அனைவரின் தலையெழுத்து அப்படித்தான் வாழ வேண்டும் என்றல்லவா ஆறுதல் படுத்தினார். இது இந்து மதத்திற்கான அரணாகவும், தலித்மக்களுக்கு முரணாக அல்லவா மகாத்மா தெரிகிறார்! இது தானே பெரியாரால் காந்தியை வெறுக்கும் மனநிலைக்கு உள்ளாக்கியது. ஆனால் காந்தியார் இதுகுறித்து

கவலைப்பட்டதாய் அறியமுடியவில்லை. காந்தியை 1937 – 1948 இடையில் 5முறை அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப் பட்டது ஆனால் பரிசு அளிக்கப்படவில்லை. ஆனால் சில ஆண்டுகள் கழித்து காந்தியின் பெயர் நிராகரிக்கப்பட்டதற்குத் தேர்வுக் குழுவினர் வருத்தம் தெரிவித்தனர். 1937-ம் ஆண்டு நூற்றுக்கணக்கான பெயர்களில் மகாத்மா காந்தியின் பெயர் 13 பேர் கொண்ட இறுதி பட்டியலில் தேர்வாகியிருந்தது. ஆனால் பரிசு வழங்கப்படவில்லை அதற்கான காரணமாக தேர்வுக்கமிட்டியின் ஆலோசகரும், பேராசிரியருமான ஜேக்கப் வார்ம் மியுலர் காந்தி பற்றிய அறிக்கையில்… “காந்தி மக்களால் மதிக்கப்படுகிற அவர்களின் அன்பைப் பெற்ற உன்னத துறவி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரை ஒரு அரசியல் தலைவராகப் பார்க்க

இயலவில்லை காரணம் அவரது கொள்கை முடிவுகளில் நிறைய முரண் இருக்கிறது. அவற்றை அவரின் தொண்டர்களால் கூட நியாயப்படுத்த முடியவில்லை. சுதந்திரப் போராட்ட வீரர் அதே சம்யம் அவர் சர்வாதிகாரி, கொள்கைவாதி, தேசியவாதி. ஆனால் திடீரென அவர் ஒரு சாதாரண அரசியல்வாதி என்று குறிப்பிட்டுள்ளார். 192021 சௌரி சௌரா சம்பவம் வன்முறையாக மாறியதும் காரணம். மேலும் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்காக மட்டும் போராடினார். கறுப்பின மக்களுக்காகப் போராடவில்லை. 1938, 1939 கால்பியன் சொன்னால் பரிந்துரைக்கப் பட்டது. ஆனால் விருது வழங்கப்படவில்லை மீண்டும் 1947-ல் பரிந்துரைக்கப்பட்டது காந்தி இந்திய தேசத்தின் சிற்பி, சமூக ஒழுங்கின் வாழும் உருவம் உலக அமைதிக்கான போராட்டத்தில் முதன்மையானவர்”

என்று பி.ஜி. கெர் கோவிந்த் பல்லப பந்த், மவ்லஸ்கர்யால் பரிந்துரைக்கப்பட்டது. ஆறு பேரில் ஒருவராக பட்டியலில் இருந்தது. நோபல் கமிட்டியின் தலைவர் குன்னர் ஜஹ்றன் டைரிக்குறிப்பில் காந்தியின் மனித நேயத்தை விட இந்திய மண்நேயமே கூடுதலாக இருந்தது என்கிறார்.பாரத ரத்னா விருது தேசத்தந்தையான காந்திக்கு வழங்கவில்லை. விருதினை மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி அனில் தத்தா சர்மா பொது நல வழக்கு ஒன்றை தொடுத்தார். மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ போப்டே விருதைவிடக் காந்தி உயர்ந்தவர் என்று மனுவை ஏற்கமறுத்து தள்ளுபடி செய்தார். மேலும் இது குறித்து மத்திய அரசிடம் முறையிட வேண்டும் என்றார்! நீதிபதியின் இந்த அணுகுமுறை வெளிப்படை தன்மையாய் தோன்றினாலும் இதனை முற்றிலுமாக தவிர்க்கப்படக்

காரணம் என்ன? என்பதையும் தங்களிடமே விட்டுவிடுகிறோம்! திரு. காந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதும் நாட்டின் பிரதமர் என்ற முறையில் “நேரு அவர்கள் பேசியபோது நமது”தேசத்தந்தை” இறந்துவிட்டார் என்றார். தேசத்தந்தை என்ற சொல் திரு. காந்தியின் சுதந்திர உணர்வுக்கு பொருத்தமானதே! மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடைமொழி மற்றும் புகழ்மொழிதான்! காந்தியாரின் அரசியல் வாழ்வில் அரசியல் தலைவராகவும், ஆன்மீக வாதியாகவும், பற்றற்ற துறவியாகவும், ஆங்கிலேயரின் அரவணைப்பில் வாழ்ந்தவராகவும், கொள்கைகளில் முரண்பட்டவராகவும் இருந்தார் என்பதை மறுக்க முடியாது. சுதந்திர தினத்தன்று கூட காந்தி சுதந்திர விழாவில் கலந்து கொள்ளவில்லை. சுதந்திரம் கிடைத்த கணம் கூட அவர் மகிழவில்லை. மனதில்

கவலையும், வெறுமையும் மட்டுமே அவரால் உணர முடிந்தது. ஏனெனில் எண்ணில்லா உயிர்கள் எல்லை பிரச்சனைக்கும், தேசப்பிரிவினைக்கும் பலியானதால் தான் கனவு கண்ட தேசமோ.... தான் கற்பனை செய்த பரந்துபட்ட ஒன்றிணைந்த அரசியலும் தோற்றுப்போனதே! மண்ணையும், மக்களையும் நேசிக்கத் தெரிந்த காந்திக்கு எல்லா சமயங்களிலும் அரசியல் ஆளுமையாக தொடர்ந்து செயல்படத் தெரியாமல் போனதும் ஒரு காரணமாகும்!

காந்தியாரின் இந்திய அரசியல் வரலாறு ஏறத்தாழ 35 ஆண்டு காலம். ஆங்கிலேயரை பணியவைக்க தேவைப்பட்ட அமைப்பாக காங்கிரஸ் இருந்ததாலும் காந்தியின் வருகைக்குப் பிறகு தான் வலுவாக்கப்பட்டது. தன்னுடைய வித்தியாசமான அணுகுமுறையால் ஆங்கிலேயரிடம் நன்மதிப்பையும், இந்தியாவின்

தேவையையும் ஒருங்கே கொண்டு சேர்த்தார்! இறுதியாகக் காந்தியின் தலைமையின் கீழ் இந்தியா சுதந்திரம் அடைந்தது. காந்தியின் சம்மதத்தின் பேரில் பாகிஸ்தான் என்ற தனிநாடும் உதயமானது! மண்விடுதலைக்கான போராட்டமாக தான் காந்தியாரின் வரலாறு பார்க்கப்படலாம் ஒழிய மக்களுக்கான சமூக, பொருளாதார, உரிமைக்கான இயக்கமாக காங்கிரஸ் பேரியக்கம் செயல்பட்டதாக அறிய முடியவில்லை. நாட்டின் தேசத் தந்தையாக காந்தியை முதன்முதலாக புகழாரம் சூட்டியவர் சுபாஷ் சந்திரபோஸ். காந்தி தேசத்திற்காகக் குடும்பத்தை தியாகம் செய்திருக்கலாம்! இல்லறத்தை விடடொழித்திருக்கலாம்! இவை பொதுவாழ்வில் ஈடுபடும் எல்லோரும் செய்யக்கூடிய தியாகங்கள் தான்! காந்தியார் உடலை வருத்தி உண்ணாவிரதம் இருந்தாரே

தவிர உடலை வதைக்கும் அளவில் சின்னதாய் ஒரு சிறையில் தண்டனை கூட ஆங்கிலேயரால் அளிக்கப் படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்! எளிமை வாழ்வு வாழ்ந்தார் என்றாலும் காந்தியாரைக் கவனித்துக் கொள்ளவும், வேண்டிய நேரம் வேண்டிய உணவும் தயாரித்துக் கொடுக்கவும் தனி படையே இருந்தது என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது! தேசத்திற்காக உழைத்தவர்கள் பல லட்சம் பேர் இருந்தாலும் மூளையாக விளங்கியவர் காந்தியார் என்றால் மிகையல்ல... எனவேதான் தேசத்தந்தை என்ற புகழ்மொழிக்கு பொருத்தமாகிறார் ! “மகாத்மா” என்ற அடைமொழிக்கு ஏற்றவரா என்பது விமர்சகர்களின் பார்வைக்கு விட்டுவிடுகிறோம்!

| உண்ணாவிரதப் பட்டியல் | |
|---|---|
| 1913 (Phoenix) | Penitential fast for a week for moral lapses of two immediate at the settlement |
| 1914 (Phoenix) | Fourteen days fast for similar reason |
| 01 June, 1915 | Fasted for a day on detecting untruth among Ashram boys |
| 11 Septem- ber, 1915 | Gave up evening meal due to some Ashramaties objection to the admission of a Harijan in the Ashram |
| 15 March, 1918 | For a rise in the wages of mill workers of Ahmedabad |

## உண்ணாவிரதப் பட்டியல்

| | |
|---|---|
| 06 April, 1919 | First day of Satyagraha fight |
| 13 April, 1919 | Began fast for 72 hours for Jallianwala Bagh massacre at Amritsar and disturbances at Bombay and Ahmedabad. |
| 19-21 Nov., 1921 | Fasted owing to disturbances at Bombay |
| 28 November, 1921 | Took vow to fast for 24 hours every Monday till Swaraj was won and started it from that day. |

| | |
|---|---|
| 12-16 Feb., 1922 | Owing to the massacre at Chauri Chaura |
| 17 Sep. to 7 Oct., 1924 | For communal unity |
| 24-30 Nov., 1925 | For having detected sexual aberrations in some boys and girls of the Ashram. |
| 22-24 June, 1928 | Owing to moral lapse of an Ashram inmate |

| உண்ணாவிரதப் பட்டியல் | |
|---|---|
| 20-25 Sept., 1932 | In protest against the decision to setup separate electorate for the Harijans. |
| 03 December, 1932 | In protest against Government not allowing a fellow prisoner to do scavenging work |
| 08-29 May, 1932 | For self purification and of his colleagues. |
| 16-22 August, 1933 | In protest against Government's decision not to grant all the facilities for Harijan work which he was having previously in Jail. |

| | |
|---|---|
| 07-13 August, 1934 | An irrate reformer attacked an opponent of the Harijan upliftment movement with a lathi. Started fast to atone. |
| 03-06 March, 1939 | For the breach of promise by the Rajkot ruler. |
| 12-13 Nov., 1940 | Fasted for two days for minor thefts in the Ashram |
| 05-07 May, 1941 | Because of communal riots in Bombay and Ahmedabad |

| உண்ணாவிரதப் பட்டியல் | |
|---|---|
| 29 June, 1941 | For communal unity |
| 10-03 March, 1943 | In protest against Government’s propaganda that the responsibility of disturbances after Quit India resolution was that of Congress. |
| 30 November, 1944 | Fasted or thought of fasting for one or more days. Details and reason could not be traced. |
| 20 October, 1946 | Probably on account of an error by the person who prepared the fair copy of a letter written during negotiations with the Muslim League. |

| உண்ணாவிரதப் பட்டியல் | |
| --- | --- |
| 15 August, 1947 | Against partition of the country |
| 01 to 03 Sept., 1947 | For communal harmony |
| 11 October, 1947 | Birth date according to Vikram calendar. Fasted instead of celebrating it. |

# 11. காந்தியின் அறம்

சமயங்களுக்கு இடையே உள்ள தராதரங்களை எவ்வாறு ஒரு பசுவால் வந்து உணர்ந்து கொள்ள முடியாதோ அவ்வாறே அவர்களாலும் (ஹரிஜனங்களாலும்) உணர்ந்து கொள்ள முடியாது. கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை என்பதைப் பாகுபடுத்திப் புரிந்து கொள்ளும் மனமோ, புத்திக்கூர்மையோ திறமையோ ஹரிஜனங் களுக்குக் கிடையாது என்று பகிரங்கமாக சொல்லுகிறார் “மகாத்மா” என்று போற்றப்படும் காந்தி.

கிறிஸ்துவ மதமாற்றம் குறித்து காந்தி பேசுகையில் “நீங்கள் வைத்ய உதவி அளிக்கும் போது அதற்கு வெகுமதியாக உங்களின் நோயாளிகள் கிறிஸ்துவ மதத்தில் சேர வேண்டும்

என்று எதிர்பார்க்கிறீர்கள்.....”

பொதுவாகக் கூற வேண்டுமெனில் எங்கெல்லாம் கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டுள்ளதோ அது ஒரு ஆன்மீகச்

செயலாக எந்த விதத்திலும் இருந்ததில்லை இதையெல்லாம் சௌகரியத்திற்காகச் செய்யப்பட்ட மதமாற்றமே...

கிறிஸ்துவ மத போதனைக் குழுக்கள் தங்கள் பணியை அக்கறையுடன் ஆற்ற வேண்டுமெனில் ஹரிஜனங்களை மதமாற்றம் செய்யும் அநாகரிகமான போட்டியிலிருந்து அவர்கள் அவசியம் விலகிக் கொள்ள வேண்டும் என்கிறார் பகுத்தறிவாளர் திரு. காந்தி!

இந்து மதத்தின் பெருமை பேசிடும் காந்தி நீ புழுவாக பிறப்பது தான் இந்து தர்மம் என்றால் நீ புழுவாகவே வாழத்தான்

வேண்டும் என்று சொல்லும் உலகின் உன்னதத் தலைவருக்கு தொட்டுப் பேசும் உரிமை கூட இல்லாத ஒரு இனத்தைப் பற்றி காந்தியார் கவலைப்பட்டிருக்கலாம் ஆனால் நீங்களும் மனிதர்கள் தான் என்று கை கொடுத்த (கல்வி, வேலை, சமூக அந்தஸ்த்தை) கிறிஸ்துவ மதத்தினரைப் பாராட்டாதவர், அதில் ஆன்மீகம் இல்லை என்கிறார்! அழுகின்ற குழந்தைக்குப் பால் தான் வேண்டும் ஆன்மீகம் தேவையில்லை என்பது கூடவா புரிந்து கொள்ள முடியவில்லை! மனிதனை மனிதனாக அங்கீகரிக்கும் மனிதம் தான் வேண்டும்! கண்ணுக்குத் தெரியாத கண்ணுக்குக் காட்டாத கடவுளா வேண்டும்? (மதமாற்றம் குறித்த மகாத்மாவின் கருத்துக்கள் 1936, 37-ம் ஆண்டுகளில் தனது ஹரிஜன் பத்திரிகையில் அவர் எழுதியவை. அம்பேத்கர் நூல் தொகுப்பு - தொகுதி - 10)

காந்தி ஹரிஜன் என்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புதுப் பெயர் சூட்டினார் என்றாலும் அந்தப் பெயரின் பொருள் ஹரி- (விஷ்ணு) சன் - (குழந்தைகள்) கடவுளின் குழந்தைகள் என்று அர்த்தமே அது என்பது பரவலாக எல்லாருக்கும் தெரிந்த பொருள்! காந்தியார் என்னவோ காலகாலமாக தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் மீது அக்கறை கொண்டோ பரிதாபப்பட்டோ இரவு பகலாய் யோசித்து வைத்த பெயரும் அல்ல இது! தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவரே காந்தியாரை அணுகி எங்களுக்கு நீங்கள் இந்த பெயரை வைத்தால் என்ன? என்று கேட்டிருக்கிறார் மேலும் இந்த (அரிசன்) பெயரும் குஜராத்தி கவிஞர் பயன்படுத்திய வார்த்தை என்றும் சொல்லியுள்ளார்! உடனே காந்தி “ஹரிஜன்” பத்திரிக்கை ஹரிஜன் சேவா சங்கம் என்ற தன்னாலான இதுபோன்ற

முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால் 1939-ல் நார்சி மேத்தா என்ற குஜராத்திக் கவிஞர் தனது நாவலில் கோவிலுக்கு பொட்டுக் கட்டி விடப்பட்ட பெண்களையும் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளையும் “ஹரிஜன்” என்று குறிப்பிடுகிறார். அதாவது தகப்பன் பெயர் தெரியாத தாசி மக்கள் அனைவரும் ஹரிஜனங்கள் என்று தெளிவாகச் சொல்கிறார். இதையும் நம் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? அம்பேத்கர் அவர் அப்போதே கடுமையாக எதிர்த்தார். இனியாவது ஹரிஜன் என்ற பெயரை உச்சரிக்காமல் இருப்பதே உத்தமம்! காந்தியார் அலசி ஆராய்ந்து சூட்டப்பட்ட பெயர் அல்ல... போகிற போக்கில் குறிப்பிட்ட பெயர்தான்! இதிலிருந்தே காந்தியாரின் சமூக அக்கறை (தலித் மக்களின் மீதான அக்கறை) எத்தகையது என்பதை புரிந்து கொள்ளலாம்!

காந்தி உருவாக்கிய ஹரிஜன் என்ற வார்த்தையே தவறானது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது அதனால் தான் நான் உ.பியில் ஆட்சிக்கு வந்ததும் அரசு அலுவலகங்களில் ஹரிஜன் என்ற வார்த்தையை நீங்கி விட்டு “தலித்” என்ற வார்த்தை மட்டுமே இடம் பெற செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டேன் என்ற சண்டிகரில் நடைபெற்ற செய்தியாளர்கள் அமர்வில் உ.பி. முதல்வர். மாயாவதியின் பேச்சு குறிப்பிடத்தக்கது. மதுரை கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி இல்லை என கேள்விப்பட்டதும் தானும் தரிசிக்காமல் சென்றதில் என்ன புதுமை இருக்கிறது காந்தியாருக்கு? வாருங்கள் நான் இருக்கிறேன் என்று ஒரு தாழ்த்தப்பட்டவரையாவது கோயிலுக்குள் அழைத்துப் போவதுதான் புரட்சி? அப்படி ஒரு புரட்சி செய்தாரா காந்தி? தவிர்த்துப் போவது

தலைவனின் செயல் அல்ல... எதிர்த்து நிற்பதே அறம்! அப்படிப்பட்ட அறத்திற்குள் வாழ்ந்தாரா மகாத்மா?

காந்தியாருக்கு நன்றாகத் தெரியும் இந்து மதம் என்பது தெளிவான கண்ணாடி போன்றது! அதை சரியாகப் பாதுகாக்கும் வரை தன்னை அழகாக காட்டுமென்று!

# 12. காந்தியும் கோட்சேவும்

ஒருங்கிணைந்த காலனிய இந்தியாவின் சுதந்திர போராட்டத்தில் அசைக்க முடியாத ஒப்பற்ற தலைவராக இருந்த காந்தியார் இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது அவரின் தலைமை வலு குறைவாகவே இருந்தது! ஜின்னாவின் தனித்தேச முழக்கத்தை காந்தியாரால் தடுத்திட முடியவில்லை! எல்லா தரப்பு மக்களுக்கும் காந்தியின் செயல்பாடு விரும்பத்தக்கதாக இல்லை! “வேண்டாதவன் கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்” என்ற மனநிலையாக தான் காந்தியாரின் மீது மக்கள் பார்வை இருந்தது. சுதந்திர இந்தியாவில் காந்தியின் செல்வாக்கு குறைந்த நிலையில் கோட்சே என்பவரால் காந்தி கொலை

நிகழ்ந்தேறியது. வேதனையும் வியப்பையும் தருகிறது. காரணம் எண்பது வயதை நெருங்கிய முதியவரை உடல் உபாதைகளால் ஏற்கனவே அல்லல்படுபவரை கோட்சே ஏன் சுட வேண்டும்? இயற்கையை அவரை அழைத்துக் கொள்ளும் சமயம் தானே? 125 ஆண்டுகள் காந்தியார் வாழ்வேன் என்று சொன்னதாலும் மகாத்மாவின் இறப்பு இயற்கையானதாக இருக்கக்கூடாது என்றும்

காந்தி கூறினார். ஒரு வேளை இதையும் நினைத்தே முதியவரை கொன்ற வீரன் ஆனாரோ? வரலாற்றில் தானும் நிலைக்க வேண்டும் என்ற எண்ணத்தாலா? இல்லை காந்தி இயற்கையான முறையில் இறந்தால் இந்திய சுதந்திர வரலாற்றில் காந்தியின் நிலைப்பாடு பெரிதாக பேசப்படாமல் போய்விடும் என்பதாலா? காந்தி கொலை செய்யப்பட்டால் வலிமையான இடம் காந்திக்கு

கிடைக்கலாம் என்பதாலா ஏனெனில் இருவரும் ஒரு வகையில் இந்துமத பிடிப்பாளர்கள் தானே! இப்படி ஏகப்பட்ட எதிர்க் கேள்விகளும் எழாமல் இல்லை.

பிராமண வகுப்பைச் சேர்ந்த கோட்சே(38) எல்லா மக்களுக்கும் சமத்துவமும் கிடைக்க வேண்டுமென்று விரும்பியதாக கூறுகிறார். இந்துத்துவவாதியான சாவர்க்கரால் வளர்க்கப்பட்ட வர்! அவரின் இந்துத்துவ கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்! அதனால் தானோ என்னவோ “இந்தியா இந்துக்களுக்கே” என்று முழங்கியவர். புனேவில் “அக்ரணி” என்ற நாளிதழை நடத்தினார்! “அக்ரணி” என்றால் முன்னோடி என்று பொருள்.

காந்தி காங்கிரஸின் செயல்பாடுகளை தன் நாளிதழில் கடுமையாக விமர்சித்தும்,

எழுதியும் வந்தார்! பாகிஸ்தான் பிரிவினைக்கு காந்தியார் சம்மதம் தெரிவித்ததும்... முஸ்லீம் இன மக்கள் இந்துப் பெண்களை வன்புணர்வு செய்து கொடூரமாக தாக்கிய போதும், பல இலட்சக்கணக்கான இந்துக்கள் வீடு வாசல் இழந்து நிற்கதியாய் இருந்தபோதும் காந்தி முஸ்லீம் மக்களுக்கே ஆதரவாகப் பேசியதும் மேலும், இந்திய அரசு பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையான 55 கோடியை உடனடியாகப் பாகிஸ்தானுக்கு அளிக்க வேண்டும் என்று காந்தி உண்ணாவிரதம் இருந்ததும் கோட்சேவிற்கு வெறுப்பு அதிகரித்ததாக கூறுகிறார்! மேலும் காந்தியின் அத்து மீறிய செயல்பாடாக இந்துக் கோயிலில் குரான் ஓதிய நிகழ்வும்அரங்கேறியதால் இந்துக்களின் தனிப்பட்ட உரிமையில் காந்தி கை வைப்பதும் சரியாகத் தோன்றவில்லை என்கிறார்.

காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு சுதந்திர தாகம் மேலோங்க காங்கிரஸில் சேர்ந்தவர்தான் கோட்சே ஆனால் பின்னாளில் காந்தியின் கொள்கை முரண்களாலும், கருத்து முரண்களாலும் காங்கிரஸிலிருந்து வெளியேறிய அநேகரில் தானும் ஒருவன் என்கிறார்! காந்தியை சுட்ட பிறகு கைதான கோட்சே 92 பக்க வாக்குமூலத்தை பதிவு செய்கிறார். சுபாஷ் சந்திரபோஸ் 6 ஆண்டுகள் நாடு கடத்தப்படவேண்டும் என்று பிரிட்டிஸ் அரசு உத்தரவிட்டதை எதிர்த்து எனக்குத் தெரிந்தவரை காந்திஜி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. நேதாஜி விடுதலைப் போரில் வன்முறையை ஆதரிப்பவர்களை மட்டும் காந்திஜி எதிர்த்தார் என்பதில்லை அவருடைய அரசியல் கருத்துக்கு எதிரான கருத்துக்கள் உடையவர்களையும் வெறுத்தார். அவருடைய

கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது அவருக்கு இருந்த வெறுப்பிற்கு சுபாஷ் ஒரு எடுத்துக்காட்டு. நல்லதோ கெட்டதோ அவர் எடுக்கும் முடிவை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பிடிவாதம் அவரிடம் காணப்பட்டது. அவரே வழக்கறிஞரும், நீதிபதியுமாக இருந்தார். இந்திய தேசம் இந்துக்களுக்கே என்ற எங்களின் கொள்கைக்கு எதிராக மதச்சார்பின்மை குறித்து பேசி வந்தார். எனவே காந்திஜியின் அரசியல் நகர்வு இனி இருக்கக் கூடாது என்ற நோக்கில்தான் காந்திஜியை சுட்டேன். அதற்காக வருத்தப்படவில்லை. அதே வேளையில் காந்தி நாட்டிற்காக அயராது உழைத்தவர் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்! சுதந்திர இந்தியா காந்தி கைவசம் இருந்தால் எங்கே இந்து மதம் ஓரங்கட்டப்பட்டு விடுமோ என்ற அச்சமும் ஒரு காரணம் என்கிறார். தன்னுடைய

தேசபக்தியை நிலைநாட்டி விட்டேன் என்கிறார். எல்லாப் பக்கங்களையும் புரட்டிப் பார்க்க வேண்டியது வரலாற்றைத் தெரிந்து கொள்ள நினைக்கும் சாமான்யனுக்கும் உள்ள ஜனநாயக உரிமை. காந்திஜியை தாங்கிப் பிடிக்க ஒரு சாரார் இருப்பதுபோல் கோட்சேவை ஏந்திப் பிடிக்கவும் இந்துத்துவ கொள்கையாளர்கள் களம் காண்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் B.J.P. M.P. சாக்ஷி மகாராஜ் “நாதுராம் கோட்சே மகாத்மா காந்தி போன்ற ஒரு தேசபக்தர் என்று கூறி சர்ச்சையில் சிக்கியதும், இந்து அமைப்பின் பெண் தலைவர் பூஜா சகுன் பாண்டே மகாத்மா காந்தியின் உருவப்பொம்மையைத் துப்பாக்கியால் சுட்டு பின்னர் கோட்சேவுக்கு மாலை அணிவித்தும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு கோட்சேவுக்கு கோயில் கட்ட அடிக்கல் நாட்டியது இந்தியா முழுவதும் கோட்சே சிலையை திறக்கப்

போவதாக அறிவித்து ஓரிரு இடங்களில் சில திறந்ததும் கோட்சே தூக்கிலிடப்பட்ட நவம்பர் 15 1949 அன்று வீரவணக்க நாளாக அனுசரித்தும் உதாரணங்கள்! தற்போது கூட போபால் B.J.P. வேட்பாளர் பிரக்யாசிஸ் நாதுராம் கோட்சே ஒரு தேசபக்தர் என்று கூறியிருக்கிறார்! இவற்றை எல்லாம் கவனிக்கும் போது இந்துத்துவ கோட்பாடுகளில் நாடுகளில் பின்னபப்பட்டுவிட்டது என்பதற்கு மத்தியில் ஆளும் B.J.P. அரசு சாட்சியாக உள்ளது."எம்மதமும் சம்மதமே" என்ற கோட்பாடுகள் மறைந்து விட்டதோ என அஞ்சத் தோன்றுகிறது. மனிதம் அழிந்து மதம் வளரும் அபாயத்தால் இந்திய மக்களின் சுதந்திரம் மீண்டும் கேள்விக்குறியாகி விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது!

# உதவிய நூல்கள்

1. சத்திய சோதனை
2. நள்ளிரவில் சுதந்திரம்
3. சுயராஜ்யம்
4. சுதந்திரம் நடந்து வந்த பாதை
5. டெல்லியை நோக்கி செல்
6. பெரியார் அம்பேத்கார் சாதி ஒழிப்பு
7. புத்தமும் அவர் தம்மமும்
8. அண்ணல் காந்தி 100 அரிய கருத்துக்கள்

**மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:**

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

**ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:**

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3.

போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

**தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:**

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

**சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?**

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள்

Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே

ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை “யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்” என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது “Creative Commons” எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் “All Rights Reserved” எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் “All Rights Reserved” என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை “Creative Commons” உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும்

அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள்

வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை “மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்”-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

**FREETAMILEBOOKS.COM**

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6” devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து

கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை
எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

**மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:**

1. ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative Com-

mons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்

2. தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்
3. சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் freetamilebook-steam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க

தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும்

பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?**

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. http://www.vinavu.com
2. http://www.badriseshadri.in
3. http://maattru.com
4. http://kaniyam.com
5. http://blog.ravidreams.net

**எவ்வாறு ஒர் எழுத்தாளரிடம் CREATIVE COMMONS உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை

[வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் http://www.FreeTamilEbooks.com எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் odt, pdf, ebub, azw போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள்

அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை “Creative Commons” உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM

FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G plus: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் “Creative Commons License”-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலைFREETAMILEBOOKSTEAM@GMAIL.COM எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

## மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- EMAIL : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM
- Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks
- Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

**இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?**

குழு – http://freetamilebooks.com/meet-the-team/

**SUPPORTED BY**

கணியம் அறக்கட்டளை- http://kaniyam.com/foundation

**தொலை நோக்கு – Vision**

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழல்

**பணி இலக்கு – Mission**

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

## தற்போதைய செயல்கள்

- கணியம் மின்னிதழ் – http://kaniyam.com/
- கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இலவச தமிழ் மின்னூல்கள் – http://FreeTamilEbooks.com

## கட்டற்ற மென்பொருட்கள்

- உரை ஒலி மாற்றி – Text to Speech

- எழுத்துணரி – Optical Character Recognition
- விக்கிமூலத்துக்கான எழுத்துணரி
- மின்னூல்கள் கிண்டில் கருவிக்கு அனுப்புதல் – Send2Kindle
- விக்கிப்பீடியாவிற்கான சிறு கருவிகள்
- மின்னூல்கள் உருவாக்கும் கருவி
- உரை ஒலி மாற்றி – இணைய செயலி
- சங்க இலக்கியம் – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஆன்டிராய்டு செயலி
- FreeTamilEbooks – ஐஓஎஸ் செயலி
- WikisourceEbooksReportஇந்திய மொழிகளுக்ககான விக்கிமூலம் மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்

- FreeTamilEbooks.com – Download counter மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்

## அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்

- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- முழு நேர நிரலரை பணியமர்த்தி பல்வேறு கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்குதல்
- தமிழ் NLP க்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்
- கணியம் வாசகர் வட்டம் உருவாக்குதல்
- கட்டற்ற மென்பொருட்கள், கிரியேட்டிவ்

காமன்சு உரிமையில் வளங்களை உருவாக்குபவர்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்

- கணியம் இதழில் அதிக பங்களிப்பாளர்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல்
- மின்னூலாக்கத்துக்கு ஒரு இணையதள செயலி
- எழுத்துணரிக்கு ஒரு இணையதள செயலி
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- http://OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்
- தமிழ்நாடு முழுவதையும் http://OpenStreetMap.org ல் வரைதல்
- குழந்தைக் கதைகளை ஒலி வடிவில்

வழங்குதல்

- http://Ta.wiktionary.org ஐ ஒழுங்குபடுத்தி API க்கு தோதாக மாற்றுதல்
- http://Ta.wiktionary.org க்காக ஒலிப்பதிவு செய்யும் செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுத்துப் பிழைத்திருத்தி உருவாக்குதல்
- தமிழ் வேர்ச்சொல் காணும் கருவி உருவாக்குதல்
- எல்லா http://FreeTamilEbooks.com மின்னூல்களையும் Google Play Books, GoodReads.com ல் ஏற்றுதல்
- தமிழ் தட்டச்சு கற்க இணைய செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுதவும் படிக்கவும் கற்ற இணைய செயலி உருவாக்குதல் ( aamozish.com/Course_-

preface போல)

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், 100% வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும்.இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில்

மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

# நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

**IFSC – UBIN0560618**

**Account Type : Current Account**

## UPI செயலிகளுக்கான QR Code

BHIM UPI Payments Accepted at

**Kaniyam Foundation**

**Account Number : 606101010050279, IFSC Code: UBIN0560618**

Scan and Pay using any UPI supported Apps

குறிப்பு: சில UPI செயலிகளில் இந்த QR Code வேலை செய்யாமல் போகலாம். அச்சமயம் மேலே உள்ள வங்கிக் கணக்கு எண், IFSC code ஐ பயன்படுத்தவும்.

Note: Sometimes UPI does not work properly, in that case kindly use Account number and IFSC code for internet banking.